நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**அயலார் கடன்!**

*சண்டை நிறுத்திச் சமாதானம் காண்கின்ற*
*பண்டைக் கதையிப்போ பழசன்றோ? - சண்டையிட்டுச்*
*சண்டையிட்டே காண்போம் சமாதானங் கைகொடுப்பீர்*
*அண்டையவர்க் கஃதே அறம்!*

*ஈழமோகம்*

இதழ் 196 | மே11- மே 24, 2000 | விலை ரூபா 10. 00

## சிங்கள பாஸிஸ சக்திகளின்
## திரிபீடக வியூகம்


⊃ 3


⊃ 7


⊃ 5


⊃ 8

## போரைத் தவிர வேறு வழி இல்லை!


⊃ 10-11

நன்றி - நூலகத்திட்டம்



# மன்னாரில் சமாதானம் காக்கும் புளொட்!

மன்னாரில் மீண்டும் மனித உரிமை மீறல்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக 'புளொட்' இயக்கத்தினரின் செயற்பாடுகளே அமைந்துள்ளன.

இதன் ஆரம்பமாக மார்ச் ஆரம்பப்பகுதியளவில் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ரஞ்சித் குமார் (18) என்ற வாலிபர் தனது ஆட்டோவுடன் கடத்தப்பட்டார். இவரின் ஆட்டோ பெற்றா மன்னார் 'றெயின் போ' அவெனியுவிலுள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சிலர் கண்டுள்ளனர். மேற்படி நபர் மன்னார் சின்னக்கடை புனித அன்னம்மாள் வீதியிலுள்ள ஒரு வீட்டிலேயே சிறைவைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அவ்வீட்டில் கைதியாயிருந்த மடுவைச் சேர்ந்த சிவகுமார் (17) என்ற வாலிபர் தப்பியோடியதையடுத்து ரஞ்சித்குமார் இடமாற்றப்பட்டுள்ளார். அவர் உயிருடன் உள்ளரா? இல்லையா என்பது இதுவரை யாருக்கும் தெரியவில்லை.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கடந்த 11.04. 2000 அன்று மன்னாரில் மூன்று இனந்தெரியாத சடலங்கள் கிடக்க காணப்பட்டன. இவற்றில் ஒன்று ஆஸ்பத்திரி வீதியில் உள்ள காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான 'தாட்சா' தொலைத் தொடர்பகத்துக்கு முன்னாலும் ஏனையவை இரண்டு பெரியகடையில் உள்ள பொன்னையா என்பவருக்கு சொந்தமான மதுபான சாலைக்கு முன்பாகவும் டாக்டர் சி. கதிர்காம நாதனின் மருத்துவமனைக்கும் முன்பாகவும் கிடந்தன. இவ்விடத்திலேயே புளொட் இயக்க பொறுப்பாளர் டேவிட் உள் முரண்பாடு காரணமாக படுகொலை செய்யப்பட்டடார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இவ்விரண்டு பிணங்களும் பலத்த அடிகாயங்களுடன் காணப்பட்டதுடன் இவ் அடிகாரணமாகவே இவ்விருவரும் இறந்ததாக அறியப்பட்டுள்ளது. இது மன்னார் கச்சேரியின் பின்புறமாக உள்ள காவலரனுக்கு அருகிலேயே கிடந்தது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்பத்திரி வீதியில் கிடந்த நபர் முந்தைய தினம் சின்னக்கடையில் உள்ள முன்னர் குறிப்பிட்ட வீட்டில் இருந்து கூரை வழியாக தப்பியோடிதையும் அதனைத் தொடர்ந்து ஆயுதம் ஏந்திய புளொட் உறுப்பினர்கள் தூக்கிச்சென்றதையும் பலர் கண்டுள்ளனர். இது புளொட் உறுப்பினர்கள் மேலேயே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தணிக்கை

புளொட் இயக்கத்தின் தற்போதைய மன்னார் மாவட்ட பொறுப்பாளரான மகாலிங்கம் (32) என்பவரே இதன் முக்கிய சூத்தரதாரியென சந்தேகிக்கப்படுகின்றார்.

*அலையோவியன்*

# ஒரு கடிதமும், ஒரு பதிலும்!

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க அவர்கள், இரிதா பெரமுன என்ற பத்திரிகைக்கு எழுதிய கடிதமும், அதற்கான பதிலும் இங்கே தரப்படுகின்றன.

சட்டத்தைக் காட்டி மிரட்டும் அதிகாரத்துவம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனது நிலைப்பற்றி அறிந்திருப்பதில்லை.

இரிதா பெரமுனவில் பதிலுக்குப்பின் என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சமன் வக ஆராச்சி அவர்கள்,
ஆசிரியர்,
இரிதா பெரமுண.
அன்புடையீர்,

**2000இல 1 அவசரகால சட்டவிதிகளை மீறியமை**

2000 மே 7ம் திகதி பிரசுரிக்கப்பட்ட உங்களது பத்திரிகையின் 14வது பக்கத்தில் "ஆனையிறவு யதார்த்தமும் ......" என்ற தலைப்புடனான கட்டுரை தொடர்பாக அவதானத்தை செலுத்த விரும்புகிறேன்.

மேலே கூறப்பட்ட கட்டுரை உட்பட தேசிய பாதுகாப்பு குறித்து பிரசுரிக்கப்பட்ட பிற வெளியீடுகள் மேற்கூறப்பட்ட அவசரகால ஆணையை திட்டமிட்டு மீறியுள்ளதுடன் தேசியபாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்க கூடியமும் ஆகும்.

உங்களது பிரசுரம் 14(1) ஆணையை மீறுகின்றது என்று நான் கருவதினால், எதிர்வரும் காலத்தில் எந்த விதத்திலும் நடைமுறையை மீறும் வகையிலான கட்டுரைகள், குறிப்புகள், புகைபடங்கள், பிரசுரிக்கப்படல் தடைக்குட்படுவதுடன், இவ்வாறான வெளியீடுகளை பிரசுரிப்பதனை தவிர்த்துக்கொள்ளுமாறும் வன்மையாக ஆலோசனை கூறுகின்றோம்.

எதிர்வரும் காலத்தில் ஆணையைமீறும் எந்தவொரு வெளியீடும் பிரசுரிக்கப்படுமாயின் உங்களுக்கும் உங்களது பத்திரிகையை பிரசுரிக்கப்பவர்களுக்கும் இதனுடன் தொடர்புடைய அனைவருக்கும் எதிராக சட்டரீதியாக மிகவும் வன்மையாக செயற்பட நேரிடும் என அறிவித்துக்கொள்கிறேன்.

*ஆரிய ரூபசிங்க*
*பணிப்பாளர் தகவல்*
*திணைக்களம்*

ஆரிய ரூபசிங்க
கொழும்பு - 05.
2000.05.09

அன்புடையீர்,

**2000இல 1 அவசரகால சட்டவிதிகளை மீறியமை**

மேற்கூறப்பட்ட விடயம்-தொடர்பான DI/CA/2000 எனும் 08.05.2000 கடிதம் கிடைக்கப்பெற்றது.

எமது பத்திரிகையில் பிரசுரமான மேற்கூறப்பட்ட கட்டுரை உட்பட பிற வெளியீடுகள் அவசரகால ஆணையை திட்டமிட்டு மீறப்பட்டதாக நீங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படை இல்லாததும் மோசமானதும் என்று நாம் கருதுகின்றோம்.

இவ்வாறான கடிதமொன்றை எனக்கு அனுப்பி வன்மையாக ஆலோசனை வழங்க உங்களுக்கு தார்மீக மற்றும் சட்ட உரிமையில்லை என்று நான் கருதுகின்றேன்.

எமது மே 7ம் திகதி பத்திரிகை அச்சுக்கு சென்ற வேளையிலும், விற்பனைக்கு சென்ற வேளையிலும் அவசரகால சட்டத்தை செயற்படுத்தும் உத்தியோகபூர்வ அதிகாரிகயாக நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் உங்களது ஆணையை ஏற்றுக்கொள்ள நான் கட்டுப்பட்டிருக்கவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களது 8.5.2000 திகதியிடப்பட்ட கடிதத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் என குற்றம்சுமத்துவது அர்த்தறமற்றது எனக்கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதன்படி 7.5.2000 திகதியிடப்பட்ட பத்திரிகை குறித்து அவசரகால ஆணையின் 14(1)படி எமது பத்திரிகைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உங்களால் இயலாதென சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீங்கள் உத்தியோகபூர்வ அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் என எமது சகோதர பத்திரிகையான சண்டே லீடருக்கு வழங்கிய அறிவுறுத்தலை எமக்கு வழங்கவில்லை என்று கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக நாம் மேற்சொன்னபடி சட்ட சிரமங்களை கருத்திற் கொள்ளாது பொறுப்பின்றி செயற்படும் பத்திரிகையாளர்கள் அல்ல என்பதை நினைவிலிருத்திக் கொள்ளுமாறு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.


*சமன் வக ஆராச்சி*

## இவர்களைக் காணவில்லை

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையான காலப் பகுதியில் கல்முனைப் பிரதேசத்தில் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். இருபத்தி நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்களின் விபரம் வருமாறு :

வேலுப்பிள்ளை பாக்கியராஜா (50) என்பவர் தேற்றாத்தீவுக்கு மீன் பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரை விட இரத்தின்ம் தங்கேஸ்வரன் (20) என்ற நபர் 14.02.2000 அன்று காணாமல் போயுள்ளார். இவர்களுடன் கிருபைராஜா புவாஜினி (16 ) என்ற கல்முனை உவெஸ்லிக் கல்லூரி மாணவியும் காணாமல் போயுள்ளார்.

*எழுவான்.*



## ✔ அது அவர்கள் அல்ல!

சென்ற இதழில் பாஸ்போட் ஒற்றை கிழிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் பற்றி ஒரு சட்டத்தரணி கூறிய தகவலை எழுதியிருந்தேன். தொலைபேசியில் நம்முடன் தொடர்புகொண்ட நண்பர் ஒருவர் சில தகவல்களைத் தெரிவித்தார். "உண்மையான ஆவணங்களுடன் போக முயல்பவர்களும் காசு கொடுக்க மறுத்த காரணத்தால் உள்ளே இருக்கிறார்கள், என்று எழுதியிருந்தது பற்றி அவர் சொன்ன தகவல் இது:

எழுதப்பட்ட விடயம் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் என்று ஊகிக்கப்படக்கூடிய விதத்தில் எழுதப்பட்டிருப்பதை க்காட்டிய அவர் சொன்னார். "போதிய ஆவணங்கள் இல்லாமல அல்லது போலி ஆவணங்களுடன் வெளியே போய்ச்சேரும் சம்பவங்கள் நிறைய நடப்பது உண்மைதான். ஆனால், போதிய ஆவணம் இருந்தும், போக அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையல்ல.

உண்மையில், பாஸ்போட் ஒற்றை கிழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடந்ததுதான். ஆனால், அது விமானசேவை அதிகாரிகளால் செய்யப்பட்டதென்றே (எயார் லங்கா) குற்றம் சாட்டப்பட்டது. இந்தக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை.

ஆனால், ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் ஏஜென்சிகள் லஞ்சம் கொடுத்து ஆட்களை அனுப்புவதும் நடப்பதை தான் மறுக்கவில்லை. கே.எல்.எம். விமானத்தில் 27 பேரை அனுப்பிய 10 அதிகாரிகள் இப்போது சி.ஐ.டி விசாரணையில் உள்ளனர். இதைத்தவிர போக முயன்ற 12 சிங்கள இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுகிறார்கள்.

தணிக்கை தணிக்கை

- இது அவர் சொன்ன தகவல். ஆம், வெளிநாடு போக ஏஜென்சி மூலம் முயல்பவர்களை, புலிகள் (புலிகளும் இப்படிச்செய்யக் கூடுமாயினும்) என்று பிடித்தடைப்பது பொலிசாரால் இப்போது மிகச் சாதாரணமாக செய்யப்படுகிறது. இலங்கையில் நடக்கும் அனைத்து சட்டவிரோத செயல்களும், புலிகள் என்ற முத்திரைக் குத்தலுடன் நடாத்தப்படுவது இப்போது சாதாரணமாகிவிட்டது. இது பொலிசுக்கும், சி.ஐ.டிக்கும் வசதியாக அதிக சிரமமின்றி தமது 'கடமை'யை செய்ய உதவி விடுகிறது.

O O O

## ✔ பதில் தெரிந்த கேள்விகள்!

கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் நடந்த சம்பவம் இது.

பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஒருவரின் மனைவியும், அவரது மூன்று பிள்ளைகளும் விடுதியிலிருந்து போகுமாறு விரட்டப்பட்டுள்ளார்கள்.

விடுதி முகாமையாளருடன் தொலைபேசியில் கொண்ட பொலிசார் அப்பெண்ணையும், பிள்ளைகளையும் உடனடியாக வெளியே போகச்சொல்லுமாறு அவருக்கு கட்டளையிட்டனராம்.

நாலுமாதக் கைக்குழந்தை, 10 வயது, 5 வயது குழந்தைகள் இருவருமாக மொத்தம் மூன்று குழந்தைகளுடன் இந்த இளம் தாய் பெட்டி படுக்கைகளுடன் இரவோடிரவாக வெளியேறும்படி பொலிசாரால் விரட்டப்பட்டுள்ளனர். தனக்கு பாதுகாப்பு உதவிகோரி நடுவிதீயில் நிற்கிறார் அப்பெண்.

கணவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதற்காக இந்தத் தாய்க்கும் குழந்தைக்கும் இப்படி தண்டனை வழங்குவது எந்த விதத்தில் நியாயம்.

பொலிசாருக்கு இத்தகைய செயலை செய்ய எந்தச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது?

இவை வெறும் கேள்விகள் மட்டும் தான்..

விடை தெரிந்த வெறும் கேள்விகள்: மன ஆறுதலுக்காக கேட்கப்படும் கேள்விகள்.

அந்தத்தாயையும் பிள்ளைகளையும் வவுனியாவுக்கோ, அல்லது யாழ்ப்பாணத்கோ போகுமாறு எச்சரித்தாராம் ஒரு பொலிஸ்அதிகாரி.

சட்டத்தை தமக்கு வேண்டியவாறு பயன்படுத்திக்கொள்ள அதிகாரம் இருக்கும்வரை இந்த நாட்டில் சமாதானம் மட்டுமல்ல. மனிதாபிமானம் கூட வாழுமோ என்பது சந்தேகமே....!

O O O

## ✔ தணிக்கையில் மறையாத பூசணிக்காய்!

பத்திரிகைகளை விரித்தால் பக்கங்கள் முழுவதும் "தணிக்கை" என்ற சொல்லால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் புதிதாக அமுல்படுத்தியுள்ள போர்க்கால சூழலுக்கு உரிய சட்டங்களை கொண்டுள்ள அவசரகால கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின் இதுதான் நிலைமையாகி விட்டது. தணிக்கை

எழுதப்பட்ட கட்டுரைகள் வரைபடம் முதல் சமாதானத்தை வலியுறுத்தும் விடயங்கள் வரை சகல விடயங்களும் பதம் பார்க்கப்படுகின்றன.

மக்களுக்கு [redacted] போகக்கூடாது என்பதில் தான் அரசாங்கத்தின் அக்கறை. ஆனால், தவறான தகவல்கள் வேண்டியளவு போய்கொண்டுதான் இருக்கின்றன. அதை அரச சாதனங்களே செய்கின்றன.

பொய்யை வைத்து எத்தனைக் காலத்துக்கு உண்மையை மறைக்கப் போகிறார்களோ - பூசனிக்காயை சோற்றுக்குள் மறைத்தைப் போல?

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள பாஸிஸ சக்திகளின் திரிபீடக வியூகம்

தற்போதைய இலங்கைச் சூழ்நிலை குறித்து எவராலும் எதிர்வு-கூற முடியாத நிலைமை தோன்றியிருக்கிறது. ராஜதந்திர உறவுகள், அரசியல் கட்சிகள் நிலைப்பாடுகள், போர் தந்திரோபாயங்கள், புத்திஜீவித்துவ கணிப்புகள், புலனாய்வுத்துறை ஆராய்வுகள் எதனையுமே உறுதியாக கூறிவிடாதபடி வேகமாக நிலைமைகள் மாறி வரும் காலம் வரலாற்றில் நெருக்கடி மிகுந்த காலங்களில் தான் காண முடியும்.

வடக்கில் புலிகள் கண்ட வெற்றி-களும், அரசு கண்ட தோல்விகளும் துரித கதியில் இந்நிலைமைகளை மாற்றங் காணச் செய்ததோடு பல சக்திகளை அம்பலப்படுத்தியுள்ளது.

பேரினவாத சக்திகள் யு திருப்பம்(U turn) என்று வர்ணிக்கப்படும் அளவிற்கு தங்களது தந்திரோபாயங்களை மாற்றிக் கொண்டுள்ளனர். இந்தியாவை வரலாற்று எதிரியாக சித்திரித்து வந்த பேரினவாதம் தமிழ் மக்களின் போராட்-டத்தை எதிர்க்க "இந்திய விஸ்தரிப்புவாதம்", "ஈழத்தை இணைத்த தமிழ்நாடு", "இந்தியத் தலையீடு", "இந்திய ஆக்கிரமிப்பு" போன்ற போன்ற காரணங்களை புனைந்து, பரப்பி வந்த பேரினவாதம் இந்தியாவை நம்பி தலையீட்டை அல்லது உதவியை நாடி நிற்கிற-தென்றால் அதனை குட்டிக்கரணம் என்று தானே சொல்லலாம்.

இந்தியா தமிழ் மக்களின் போராட்-டம் தொடர்பாக கொண்டிருக்கிற மூலோபாயங்கள் அல்லது அரச கொள்கைகள் மாறியதில்லை. அது தமிழ் மக்களின் போராட்டதிற்கெதிரான நிலைப்பாட்டில் கொண்டிருக்கிற உறுதியான கொள்கையை சமகால நிகழ்வுகளைக் கொண்டு கூட உறுதி செய்யலாம். பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் சக்திகளும் ஈழப் போராட்டத்திற்கு (ஏன் விடுதலைப் புலிகளுக்கு என்று கூடச் சொல்லலாம்.) ஆதரவான சக்திகளாக இருந்த போதும் இந்தியாவின் அரச கொள்கையை மாற்றும் வல்லமை அவர்களிடத்தில் இல்லை. அவர்களால் இந்திய அரச கொள்கையை கட்டுப்படுத்த முடியாதென்பதையும் மாறாக அரச கொள்கையே அவர்களையும் கட்டுப்படுத்தி வருகிறது என்பதும் தெட்டத் தெளிவாக வெளிப்பட்ட விடயம். இந்தியா மூலோபாயங்களை ஒரு வை.கோவோ அல்லது வாஜ்பாயோ மாற்றிவிட முடியாது என்பதை கண்முன் காணகிடைத்த சந்தர்ப்பம் இது. இந்திய வரலாற்றில் கூட தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான இந்தளவு சக்திகளின் தலைமையை கொண்ட அரசாங்கத்தை கண்டிருக்க மாட்டோம் அப்படியிருந்தும் ஒரு யுத்த முனையில் தாங்கள் ஆதரவு வழங்கும் போராட்டதிற்கு எதிரான எதிரிக்கு உதவி வழங்க முன்வந்தது எப்படி? இதனை நாம் கவனமாக நோக்க வேண்டும்.

இலங்கை காஸ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவாக இல்லை. அது போல இலங்கை பாகிஸ்தானிய ராஜ-தந்திர உறவுகள் இந்திய உறவுகளைக் காட்டிலும் பலமானது. போருதவிகள் கூட பாகிஸ்தானிடமிருந்து தொடர்ந்து இலங்கை பெற்று வருகிறது. பர்கிஸ்-தான் ஐ.எஸ்.ஐ.க்கு இலங்கை உதவி வருவதாகவும், இந்தியாவில் ஐ.எஸ். ஐ யினால் நடத்தப்படுவதாக நம்பப்படும் பல சதிவேலைகளுக்கு இலங்கை பின்னணியில் இருப்பதாக இந்திய உளவு ஸ்தாபனங்கள் நம்பி வருகின்றன. சேதுசமுத்திர திட்டம் தொடர்பாக இலங்கை காட்டி வந்த எதிர்ப்புகள் இந்தியாவுக்கு எரிச்சலை ஊட்டியவை. இந்திய அமைதி காக்கும் படையை விரட்டியதில் இலங்கை தொடர்பாகவும் சிங்கள மக்கள் தொடர்பாகவும் இந்தியா கொண்டிருக்கும் அதிருப்திகள் நீங்கவில்லை. இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்-படுவது அதிகரிக்கப்படுவது குறித்து ஆத்திரமடைந்து வந்துள்ளது. இப்படி இலங்கைக்கு எதிராக இந்தியா கொண்டுள்ள எதிர்ப்புணர்வுகளை சம்பவங்களாக அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படியிருந்தும் ஏன் இந்தியா இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்தது. வடக்கில் அடக்குமுறை இராணுவமொன்றுக்கு உதவ முன்-வந்துள்ள இந்தியா வடக்கில் மருந்தின்றி, உணவின்றி, உயிருக்கு, உடமைகளுக்கு உத்தரவாதமின்றி தவிக்கும் மக்களுக்கு உதவ முடியாமல் போனது ஏன்? எனவே இந்தியா இந்தியா தான். இந்தியாவை நம்பும் கனவான்கள் இன்னமும் தமிழ் தரப்பில் இறுக்கமாகவே உள்ளனர்.

தற்போதைய பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலை அரசு நடை-முறைப்படுத்துகிறது என்றால் அது மிகையில்லை. அரசு எங்கிருந்து தொடங்குவது என்றிருக்கையில் சமயத்தில் மகாசங்கத்தினர் இந்-தியத் தூதுவராலயம் சென்று தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்தியது அரசுக்கு சாதகமாக அமைந்தது. முழு நாடுமே யுத்த-மயப்படுத்தப்பட்டு வரலாறு காணாத அடக்குமுறை சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் எதிர்ப்புகள் எங்கே கிளம்பின். ஓரிருவர் புலம்பிக் கொண்டிருக்க மட்டுமே முடிகிறது. சிங்கள, ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் அனைத்தும் பத்திரிகைத் தணிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளன. அதனை நியாயப்படுத்துகின்றன. வெளிநாட்டு உதவியை அனைத்து சக்திகளும் வரவேற்கின்றன. ஜே.வி.பி. கூட சத்தமின்றி இருக்கின்றது. 1987இல் இந்தியப் படை வந்த போது அதனை எதிர்த்து கலகம் செய்த சிங்கள மக்களுக்கு ஜே.ஆர் "பேயிடம் கிடைக்-காவிட்டால், பேயின் பாட்டியிடமாவது உதவி பெறுவேன். வரலாறு அதற்கு பதில் தரும்!" என்றார்.

பிரேமதாசா பதவிக்கு வந்ததில் அவர் இந்திய எதிர்ப்பில் காட்டிய தீவிரம் முக்கியமானது. இன்று ஜே.ஆரின் நியாயங்கள் சிங்கள-வர்களால் உயிர்ப்பிக்கப்படுகின்றன.

எழுச்சியுற்று வரும் பேரினவாதத்-தின் தலைமை சக்தியாக இருக்கும் சிங்கள வீரவிதானவின் God Father என்றழைக்கப்படும் சம்பிக்க ரணவக்க இரு மாதங்களுக்கு முன் லங்காதீபவில் கும்பகர்ண எனும் பெயரில் எழுதிவரும் பத்தியில் இந்தியா பற்றிய பார்வை-களை மாற்ற வேண்டிய அவசியத்-தையும், இந்தியாவை கவனமாக கையாள்வதற்கூடாக உறவுகளை பலப்படுத்த வேண்டுமென்றும், தமிழ் போராட்டத்திற்கு எதிரான அதன் நிலைப்பாட்டை சாதகமாக பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பட்ட போது ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அதன் அர்த்தத்தை இப்போது தெளிவாகக்




காண முடிகிறது.

நெருக்கடி நிலையில் வடக்கில் சிக்குண்டு கிடக்கும் படையினரை பாதுகாப்பாக வெளியேற்றவும், அவர்-களுக்கான சில மனிதாபிமான விநி-யோக உதவிகளையுமே இலங்கை அரசு இந்தியாவிடம் கேட்டிருந்தது. [redacted] கொண்ட பின்னர், சிங்கள அரசு அதனை நிராகரித்ததற்கு உண்மையில் இந்தியா தகுந்த பதிலளித்திருக்க வேண்டும். படையினர் பாதுகாப்பாக வெளியேற உத்தரவாதமளித்த பின்பும் இந்தியாவின் உதவி ஏன் அவசியப்பட வேண்டும் என்கிற கேள்வியை கேட்க ஒரு நாதியும் இல்லையென்றாகி விட்டது.

ஈழப்போராட்டத்தின் மீது தமிழ்-நாட்டு மக்கள் கொண்டுள்ள ஆதர-வினை தமது அரசியல் பிழைப்புக்காகப் பயன்படுத்திவரும் தமிழ்நாட்டு அரசி-யற் கட்சிகள் இந்திய அரச கொள்-கையை "புண்படுத்தாத"வகையில் நடந்து கொள்வதில் கவனமாக இருக்-கின்றன. விடுதலைப் புலிகளின் மீதான தடை நீடிப்பு தொடக்கம், ஆனையிறவு வெற்றி குறித்து தமிழ்நாட்டில் சிதம்-பரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு தடைசெய்யப்பட்டு நெடுமாறன் உள்ளிட்ட தலைவர் தொடக்கம், சுவரொட்டிகளை அச்சிட்ட, ஒட்டிய தொண்டர்கள் வரை கைது செய்து அடைக்கப்பட்ட சம்பவம் வரை அக்-கட்சிகள் கடைப்பிடித்த போக்கை இனங்கண்டாக வேண்டும்.

பிரேமதாசவின் வலது கையாக இருந்த சிறிசேனகுரேவோ இந்த நெருக்கடி நிலைமையை சமாளிக்க சார்க் அமைதி காக்கும் படையை வரவழைக்க வேண்டும் என்று கோரு-கிற அதே வேளை எந்த நாட்டை-யாவது அழைத்து புலிகளை அழித்-தொழிக்க வேண்டும் எனும் கோரிக்-கையை சிங்கள பேரினவாத சக்திகள் விடுத்துள்ளன. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவராலயம் தொடக்கம்? ஐரோப்பிய நாடுகளின் ராஜதந்திரிகள் வரை தற்போதைய நிலைக்கு தங்களின் முழு ஆதரவு வழங்க தயாரென்று உத்தரவாதமளித்த போதும் இந்தியா தான் இப்போதைக்கு நேரடியாக உதவக்கூடிய ஒரே ஒரு நாடு என்று தெரிவித்ததாக [redacted] பத்திரிகைகள் அனைத்தும் செய்தி வெளியிட்டிருந்தன. எனவே தான் இந்தியா முதலில் உதவிக்கு மறுத்த [redacted] தென்னாசியப் பிராந்திய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளின் தந்தி-ரோபாயங்களுக்கு சோதனைக் கால-மாக ஆய்வாளர்கள் பலர் குறிப்-பிடுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.



அது மட்டுமன்றி உலக நாடுகளின் கவனத்தையும் தற்போதைய நிலைமை தோற்றுவித்தது. இஸ்ரேல் ராஜதந்திர உறவை உடனடியாகவே ஏற்றுக் கொண்டதும்,காலம் தாழ்த்தாமல் நிபுணர் குழுவை அனுப்பி வைத்ததும், இதனை ஆதரித்து அமெரிக்கா கருத்து வெளியிட்டதும், (அமெரிக்காவின் அடியாள் எனும் பட்டம் இஸ்ரேலுக்கு உண்டு என்பது நினைவிற் கொள்ளத்-தக்கது.) ரஸ்யாவும் தனது பங்குக்கு இலங்கைக்கு தாமும் உதவி வழங்-குவதாக கூறி அதிகாரிகளை அனுப்பி வைத்ததும் மிக வேகமாக நடந்து முடிந்த விடயங்கள்.

இலங்கையை முழு அளவிலான போருக்கு தயார் படுத்துவது, மக்களை யுத்தமயப்படுத்துவது, உள்நாட்டிலேயே ஆயுத உற்பத்தியை தொடங்குவது, சர்வதேச ரீதியில் எந்த பேயுடனுதம் கூட்டு சேருவது என்பன எழுந்து வரும் சிங்களப் பாசிச சக்திகள் பகிரங்கமாக வெளியிட்ட நிகழ்ச்சிநிரல் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று அரசு அதன் நிகழ்ச்சி நிரலை கொண்டு நடத்துகிறது. இதனைத் தான் முன்னைய கட்டுரை-களிலும் குறிப்பிட்டிருந்தோம். எதிர்-வரும் காலத்தில் ஒன்றில் பாசிச சக்திகள் கையோங்கி பி[redacted]

**தணிக்கை**

சந்திக்கிறோம். இதே விடயத்தை புதிய விதிகளை பிரகடனப்படுத்திய அன்று பி.பி.சி.க்கு பேட்டியளித்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவும் கூறியிருந்தார்.

இனி அரசு தமிழ் மக்கள் மீது நட[redacted] அங்கீகாரத்துடன் கொண்டு நடத்தப் போகிறது. அபிவிருத்தி செலவுகள் யுத்தத்திற்கு குவிக்கப்பட்டு, சிங்களக் கட்சிகளை ஓரணியில் திரட்டி,[redacted] முறைகள் வெளிவராத வண்ணம் தணிக்கையை முழு அளவில் ஏற்-படுத்தி, முழு நாட்டினரது அக்கறை-யையும், போரில் ஒன்று குவித்து இன-அழிப்புப் போரை கொண்டு நடத்தப் போகிறது.

எதிர்க்கட்சியோ, ஜே.வி.பி. உள்-ளிட்ட இடதுசாரிக் கட்சிகளோ கூட இந்த நிலைமைக்கு எதிராக ஏதேனும் மேற்கொள்ள எத்தனித்தால் சிங்கள மக்களிடமிருந்து ஓரங்கட்டப்படும்-விதத்தில் நிலைமைகள் கட்டமைக்-கப்பட்டுள்ளன. அதனால் தான் ரணில் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் நாட்டை முழு அளவில் யுத்த நிலை-மைக்கு கொண்டு வந்தது சரியென்றும், ஆனால் இறுதியாக தன்னோடு ஜனாதிபதி உரையாடிய சந்தர்ப்பத்தில் இதனை தன்னிடமும் கூறியிருக்கலாம் என்றும் கூறியிருந்தார். ரணலின் பிரச்சினை கூட தன்னிடம் கேட்டி-ருந்தால் தானும் சம்மதித்திருப்பேனே, என்னை மதிக்கவில்லையே என்கிற பொருள்படத் தான் இருந்தது. அது போல அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச்செயலாளர் பெட்டி வீரக்கோன் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பன தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இன்றைய நிலையில் சிங்கள பாசிச சக்திகள் கோரியதைப் போல அரசு, மதம், சிவில் சமூகம் என்கிற நிறுவ-னங்கள் முக்கோண (திரிபீடக) வடிவில் மையப்படுத்தப்பட்டு ஒரு அழிப்புக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம். தமக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரு கண்களும் போக வேண்டும் என்கிற நிலையில் இந்த "திரிபீடக"ம் எந்தவொரு ஜனநாயகமற்ற நிலை-மையை எதிர் கொள்ளவும் தயார், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை அழித்தொழிக்கவும் தான்!.

நன்றி - நூலகத்திட்டம்



புதிரெடுப்போம் – ஓர் மனப்பதிவு

# கண்ணீரில் கதை எழுதும் மனிதரல்ல நாங்கள்!

"தொடர்ச்சியான இயக்கத்தின் மூலம் உணர்வைப்பற்றிக் கொள்ளுதல் என்பது அரங்கின் அடிப்படைத் தொழிற்பாடாகிறது. அரங்கு மனிதப் பொது உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு அது எப்போதும் மாற்றத்தையே கோருகின்றது. சமகால அரங்காடல்களும் இதனையே பிரகடனப்படுத்துகின்றது என்பது கண்கூடாகும்.

இந்த வகையில் பூந்தோட்டத்தில் உள்ள அகதி முகாம் மாணவர்களை (நலன்புரி நிலையம் எனவும் குறிப்பிடலாம்) பெருவாரியாகக் கொண்ட அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களால் வவுனியாவில் பல முறையும், திருகோணமலையிலும் அளிக்கைசெய்யப்பட்ட 'புதிரெடுப்போம்" ஆற்றுகை மனங்கொள்ளத்தக்கது. இப்பாடசாலை ஆசிரியரான அருணாசலம் சத்தியானந்தனின் தயாரிப்பு நெறியாள்கையில், அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அளிக்கை செய்யப்பட்ட இவ் ஆற்றுகை பல்வேறு மட்டத்திலும் பாராட்டைப் பெற்றுள்ளது.



புதிரெடுப்போம் - ஓர் மனப்பதிவு


மூன்று மாதகாலமாக குழுநிலைச் சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள்' தொடர் அரங்கச் செயற்பாடுகளுக்கூடாக சிறுவர் அரங்கக் குழுவொன்றை அமைத்து சிறுவர் நாடகப் பட்டறைப் பயிற்சிகளினால் புடம்போடப்பட்ட மாணவ ஆற்றுகையாளர்களுக்கூடாக இவ் அரங்கப் படைப்பு முழுமையாக்கம் பெற்று வெளிக்கொணரப்பட்டது.

இந்நாடகம் பற்றிய விமர்சனக்குறிப்புக்களை மட்டும் முன்வைப்பது இக்கட்டுரையின் முழு நோக்கமல்ல. இதற்கும் வெளியில் இவ் அரங்கக்குழுவில் செயற்பட்டாளர்களாக பங்கேற்றுக் கொண்ட இந்தச் சிறுவர்களின், வாழ்வுச் சூழலின் கொடூரம், ஆதரவற்ற நிலை, அரங்க நடவடிக்கைகளில் உள்வாங்கப்பட்டதின் பின்னர் அவர்களில் ஏற்பட்ட ஆரோக்கியமான நடத்தை மாற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

இன்று வட- கிழக்கில் அகதிமுகாம்களின் எண்ணிக்கைகளை நாம் அறிந்தளவுக்கு அங்கு அம்மக்கள் படும் அவலங்களை மோசமான வாழ்க்கை நிலைமையை நாம் தரிசித்திருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது. அதுவும் வவுனியாவில் என்றாலோ, இவர்கள் எதிர்நோக்கும் முகம் கொடுக்கும் நெருக்கடிகளும், துன்பங்களும் சொல்லி மாளாது, கோழிக்கூடுகளுக்குள் முடக்கப்பட்ட (கோழிக்கூடு என்ற பெயரிலும் வவுனியாவில் ஒரு முகாம் உள்ளது நினைவு கூரத்தக்கது) அவலவாழ்க்கை பல முறை இடம் பெயர்ந்ததினால் சொந்த வீட்டு வாழ்க்கையையும் ஏன்? தம்மையுமே மறந்த வாழ்வு.

பெற்றோரையும் உடன்பிறப்புக்களையும் பறிகொடுத்துவிட்டு (இங்கு படிக்கும் பல மாணவர்கள் இந்நிலைமையில் தான்) வறுமையிலும் செம்மையாய் வாழ பள்ளி தேடி ஒதுங்குகிறார்கள். ஆரம்பத்தில் "உங்களுக்கு உணவு தந்து ஆதரிப்பவர் யார் பிள்ளையள்" ஆசிரியர் வகுப்பில் வினவ "கச்சேரி ஐயாமார் ரீச்சர்" என்று பல மாணவர்கள் அப்பாவித்தனமாய் ஆனால், உள்ளதைச் சொன்னார்கள். இந்த ஒரு சம்பவம் எடுத்துக்காட்டும் இவர்களின் வாழ்க்கை நிலைமையைச் சொல்வதற்கு.

ஏனைய மாணவர்களைப் போலன்றி இவர்கள் உடல், உளரீதியாக மிகவும் சோர்வடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால், கண்களில் நிறையக் கனவுகளைச் சுமந்தவர்களாக பள்ளி வளவெங்கும் சுதந்திரமாகப் பறந்து திரிந்தவர்களாகவே அரங்கக் குழுவுக்குள் உள்வாங்கப்படுகிறார்கள்.



இச்சிறுவர்களுடன் அரங்க விளையாட்டுக்களுக்கூடாகவும், ஆடல் பாடல்களுக்கூடாகவும், குழுநிலைச் சந்திப்புக்களினாலும் அவரது மனங்களுடன் பேசவும் உறவாடவும் முடிந்த ஒரு நிலையில் அன்புக்காகவும், ஆதரவான ஒரு அரவணைப்புக்கும் ஏங்குவதனை அரங்கு புரிந்து கொள்கின்றது. முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்த இவர்களது வாழ்க்கையைப் போலவே - இவர்களது உணர்வுகளும், அடக்கப்பட்டிருந்தது. இந்த அரங்கு இம்மாணவர்களுக்கு ஒரு தற்காலிகமான சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்தது. தமது உணர்வுகளை கருத்துக்களை சுந்திரமாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை அளித்தது. மெல்ல மெல்ல இருண்டு கிடந்த இவர்களது முகங்கள் பிரகாசமாகின நடத்தைகளில் மெச்சத்தக்க மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. பண்பாட்டு ரீதியான விழிப்புணர்வு தெளிவாக உணரப்பட்டது. தெளிவாகவும், உறுதியாகவும் தமது கருத்துக்களை முன்வைப்பதில் இவர்கள் எப்போதும் பின்நிற்பதில்லை. வாணி உன் வீடும் வளவும் - நானறிவேன்.

அக்காணி முழுவதும் கலகலப்பல்லவோ - மகாகவியின் கவிதைகள் இங்கு நிதர்சனமாகின்றன.

இந்த ஆரோக்கியமான நடத்தை மாற்றங்களை மேலும் வளர்த்துச் செல்ல வேண்டியதன் தேவை உணரப்படுகின்றது. தொடர்ச்சியான அரங்கச் செயற்பாடுகளுக்கூடாக இது சாத்தியப்படலாம் என்பதனால் 'புதிரெடுப்போம்' ஆற்றுகை போட்டிக்காவும் தயாரிக்கப்பட்டது. செயற்பட்டாளர் அனைவரும் செயல் முனைப்புடன் பங்கேற்றுக் கொண்டார்கள்.

பழைய கல்வி முறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், புதிய கல்விச் சீர்த்திருத்தத்தை வரவேற்றும் பல கட்சிகள் அரைத்த மாவை மீண்டும் அரைத்திருந்தது எனினும் போட்டிக்காகவும் தயாரிக்கப்பட்ட ஆற்றுகை என்பதனால் நிபந்தனைகளிலும் நேரவரையறைக்குள்ளும் சிக்குண்டு சொல்லவந்த செய்திகள் விழுங்கப்பட்டு விட்டது என்பது உண்மை தான்.

பாத்திரங்கள் வகைமாதிரிப் பாத்திரங்களாகச் சித்திரக்கப்பட்டு, காட்சிப் படிமங்களூடாக கனதியான விடயங்களும் எளிமையாக நிகழ்த்தப்பட்டது. ஓவியம், இசை, நடனம் போன்ற உத்திமுறைகள் கருத்தாடலை, கதையினையும் வளர்த்துச் சென்றதில் முக்கிய பங்கு வகித்தன. வகுபபறைக்குள் மட்டும் முடங்கிக் கிடந்து படிப்பதை வெறுப் பதனையும் தாங்கள் ஆடிப்பாடி, ஓடி விளையாடி சந்தோஷமாக, அன்பாக, ஆதரவுடன் படிக்க விரும்புவதையும் ஆடல் பாடல்களுக்கூடாகவும் செய்துகாட்டியதனூடாக உறுதியாகவே பிரகடனப்படுத்தினார்கள்.

இப்படி ஒரு சந்தோஷம் தரும் இடமாய் ஆனந்தமான ஒரு உலகமாய் எங்கட பள்ளிக்கூடங்கள் எப்பவும் இருந்தால் நீங்கள் கேட்கிற விஞ்ஞானியாய் கண்டுபிடிப்பாளர்களாய், பெரிய பெரிய சாதனையாளர்களாய் எங்களாலயும் வரமுடியும். உணர்வு ததும்ப விடுத்த அறைகூவல் அவையோரை ஆழ்ந்த சிந்தனைக்கே இட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இந்த ஆற்றுகை வெளிக்கொணர்ந்த நான் முக்கியமாக கோடிட்டுக் காட்ட வந்த உணர்வு - இப்போதும் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்ற செய்தி இதுதான். தரம்-3 இல் படிக்கும் மாணவி ஆற்றுகையில் தன்னை இப்படி வெளிப்படுத்துகிறாள். என்னுடைய பெயர் வினோதினி, என்னுடைய வீடு எங்கை இருக்கென்று உங்களுக்குத் தெரியுமா? என்ர வீடு 6ம் யூனிற் கம்பஸ் அகதி முகாம். எனக்கு நல்லப் படிக்க விருப்பம். என்னாலையும் நல்லாப் படிக்க முடியும். ஆனால், என்ர வீடு சுத்தமானதில்லை. சுத்தியுள்ள மனிசர்களும் அப்படித்தான். எனக்கு ஒரு வீடு வேணும். நான் படிக்க, நான் இருக்க, எனக்கொரு இடம் வேணும். இது எல்லாத்தையும் விட எனக்கொரு அம்மா வேணும். அப்பா வேணும். குரல் அவளையறியாமல் உடைகிறது. கைகள் அவையோரை நோக்கி நீள்கிறது. என்ன.... வேண்டித்தருவீர்களா...? சொல்லுங்கோவன்...? அரங்கில் நிசப்தம்... உண்மை நெஞ்சங்களை நெருடியிருக்க வேண்டும். சில மணித்துளிகள் கழிந்த நிலையில் வினோதினியே மீண்டும்: ஆனால், இம்முறை குழைவு இல்லை. பிசிறில்லாத மொழியில் உணர்வைக் கொட்டுகிறாள். இது எல்லாத்துக்கும் நான் எங்கட ரீச்சரையும், எங்கட பள்ளிக்கூடத்தையும் உங்களையும் தான் நம்பியிருக்கிறன்...

எந்தவித நடிபாகத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் உள்ளதை உள்ளவாறு உணர்வோடு வெளிப்படுத்தி ஓய்ந்துபோகின்றாள். இங்குதான் உள்ளது காட்டும் (உள்ளத்தைக் காட்டும்) வெளியாக அரங்கு உயர்ந்து உண்மையை உரத்துப் பேசுகிறது.

இன்று எம் மத்தியில் வினோதினியைப் போல ஆயிரக்கணக்கான வினோதினிகள் வாழ்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முயடிாது. இந்த வினோதினிகளின் தாய் தந்தையர்களுக்கு நடந்தது என்ன என்பதையும் நாமறிவோம். அப்படியாயின் இந்த இளம் தளிர்களின் நியாயமான ஆசைகள் முளையிலேயே கருகிவிடுமா? கண்ணீர் விட்டாகிலும் இதனை வளர்க்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு இருக்கிறதல்லவா?

ஆற்றுகையின் நிறைவுக்கட்டத்தில் இப்ப சொல்லுங்கோ அறிவு ஏன்? வினா வீசப்படுகிறது அவையோரையும் நோக்கி, மனிசராய் வாழ் உறுதியாகப் பிரகடனப்படுத்துகிறார்கள்.

கண்ணீரில் கதை எழுதும் மனிதரல்ல நாங்கள்.

மானுடம் சுடருகின்ற மனிதராகி வாழ்வோம்! வாழ்வோம்! ஒத்திசைவான எழுச்சி நடனத்துள் அளிக்கை நிறைவு செய்யப்பட்டு ஆடுகளம் வெறுமையாகின்றது. அவையோர் சில மணித்துளிகள் சிந்தனை வசப்பட்டவராக தாமதித்தே கரகோசம் செய்கிறார்கள்.

இதன்பின் நடந்த கலந்துரையாடலில் உதவிக்கல்விப் பணிப்பாளர், பண்பாட்டு உத்தியோகத்தர், ஆசிரிய ஆலோசகர், அதிபர், ஆசிரியர்கள், முன்னிலையில் அரங்கக்குழு மாணவர்கள் தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டு தமது உணர்வுகளையும் வெளிப்படுத்தியபோது இப்படிச் சொன்னார்கள்.

"எனக்கு மகாமுக்குப் போகவே பிடிக்கவில்லை. நாள் முழுக்க இஞ்சயே இருக்கப் போறன்", "நான் நல்லப் படிச்சு இந்தப் பள்ளிக்கூடத்தையும் முன்னேற்றுவன்", "இந்த அன்பும், பாசமும் எனக்கு எப்பவும் வேணும்", "எனக்கு இப்ப யாருக்கும் பயமில்லை சரியான சந்தோஷமாக்கிடக்குது" இப்படியாக பல நம்பிக்கையான உணர்வு வெளிப்பட்டன. இவ் அரங்கக்குழு மாணவர்களின் தனிப்பட்ட பண்பாட்டு, நடத்தை மாற்றங்கள் சுட்டிக்காட்டப்பட்டு மெச்சப்பட்டன விசேடமாக பெற்றோரை இழந்த வினோதினி இம்முறை 3ம் பிள்ளையாகவும், அதேவேளை பிறருக்கு உதவும் மனப்பாங்கு அவதானிக்கப்பட்டதை வகுப்பாசிரியரால் பாராட்டப்பெற்றார். உதவிக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா அவர்கள் குறிப்பிடுகையில் "பிள்ளைகளின் நடத்தைகளில் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீக சக்தி அரங்குக்கு உள்ளது என்பதை நேரில் தரிசித்ததையும் ஏனைய மாணவர்களுக்கும் இதனை விரிவாக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். நிறைவாக "உயர்ந்தவர்கள் நாமெல்லோரும் உலகத்தாய் வயிற்று மைந்தர்" நசிந்து இனிக்கிடக்க மாட்டோம். நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்" மிகவும் நம்பிக்கையுடன் உற்சாகமாய் பாடிக்கொண்டே கலைந்து செல்கிறார்கள். இன்னும் நிறையக் கனவுகளைக் கண்களில் சுமந்து கொண்டே.....

நெருக்கடிகள் மிகுந்த இன்றைய காலகட்டத்திலும் ஆரோக்கியமான அரங்கப்பண்பாட்டுச் சூழல் ஒன்றை வென்றெடுக்கப்பாடுபடும் அனைவரது கரங்களையும் நாம் நேசமுடன் பற்றிக்கொள்ளும் இவ் வேளையில் இந்தப் பிஞ்சு நெஞ்சங்களிடம் எஞ்சி நிற்கும் கொஞ்சக் கனவுகளையேனும் மெய்ப்படுத்திக் காட்டுவதற்கு நாம் உடனடியாகச் செயல்பட வேண்டுமா?

---

## பெண் சஞ்சிகை

### தூக்கியெறிப்பட முடியாத பிரசன்னம்?

சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் வெளியிடப்படும் காலாண்டுச் சஞ்சிகையான "பெண்" இதழ்கள் பற்றிய கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை சித்திரலேகா மௌனகுரு தலைமையில் சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்றது. ஔவை விக்னேஸ்வரன், செ.யோகராசா, வாணி சைமன், அசோகாம்பிகை யோகராஜா, பேராசிரி மௌனகுரு ஆகியோர் கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்தனர்.

செய்தவை என்ன? செய்திருக்க வேண்டியவை என்ன? என்ற அடிப்படையில் செ.யோகராசா தனது கருத்துக்களை முன்வைத்தார். பதினொரு சஞ்சிகைகளையும் நோக்கும் போது பெண்களுக்கான மொழியை இனம்காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது தெளிவாகின்றது. வறுமை பெண்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வாசகர் கடிதங்கள் ஏன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. விவாதங்கள் புதிய விடயங்களை சிந்திக்கத் தூண்டுவனவாக அமைவதோடு இளம் விமர்சகர்களையும், வாசகர்களின் நிலையையும் அறிய உதவியாக அமையும். இவற்றைவிட ஒரே விடயங்கள் திரும்பத் திரும்ப வந்திருக்கின்றன. அதேநேரம் புதிய விடயங்கள் குறைவாக இருப்பதையும் தவிர்த்திருக்கலாம். முஸ்லிம் பெண்களின் படைப்புக்களின் வெளிப்பாடுகள் குறைவாக இருந்தமையும் செ.யோகராஜா அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டது. பெண் சஞ்சிகை ஊடாக புதிய சிறுகதை எழுத்தாளர்கள் பலர் அறிமுகமாகியுள்ளனர். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

பெண் சஞ்சிகையில் வரும் கவிதைகள் தொடர்பாக ஔவை விக்னேஸ்வரன் அவர்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள். கடந்த சஞ்சிகைகளை நோக்கும் போது பெண்நிலை நோக்கில் அணுகப்பட்ட விடயங்கள் மிக மிகக் குறைவு என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. தலைப்பிடப்படாத கல்யாணியின் கவிதை, உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமையவில்லையெனவும் கவிதை என்ற வரையரைக்குள் அதனை உள்ளடக்க முடியாமலிருக்கிறது என்றும், வெறும் சொற்களால் ஆக்கப்பட்ட வசனங்களாகவே அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

முதலாவது பெண் சஞ்சிகையானது சகல கருத்துக்களை உள்ளடக்கியதாக இருந்த அதே வேளை அதனைத் தொடர்ந்து வந்தவை அவற்றை வெளிப்படுத்துபவையாக அல்லாமல் கிடைக்கப்பெற்ற ஆக்கங்களைக் கொண்டு உரிய காலத்திற்குள் கொண்டு வந்து விடவேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்பட்டவையோ என்று எண்ணத் தோன்றுகின்றது என வாணி சைமன் அவர்கள் தனது கருத்துக்களைவெளியிடும் போது குறிப்பிட்டிருந்தார். முதலாவது சஞ்சிகை ஆசிரியர் குழுவால் தயாரிக்கப்பட்டதுவும் அதனைத் தொடர்ந்து வந்தவை தனித்தனி ஆசிரியர்களிடம் பொறுப்பாக்கப்பட்டதுவும் இதற்குக் காரணமாக இருக்கலாம். தரத்தைப் பேணுவதில் இவ்விடயத்தை கவனத்திலெடுக்க வேண்டுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டது. எனினும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆக்கங்களை பிரசுரித்து வருவது வரவேற்கப்பட வேண்டிய விடயம், அட்டைப்பட ஓவியங்கள் பெண்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன, ஓவியர்களை ஊக்குவிக்கும் செயற்பாடாகவும் இது அமைந்துள்ளது என்ற கருத்தும் இவரால் முன்வைக்கப்பட்டது.

"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்" என்ற வாசகங்கள் சஞ்சிகையை வாசித்து விட்டு தூக்கியெறிய முடியாது என்பதை உறுதிப்படுத்தும் வாசகங்களாக உள்ளன என்றார் அசோகாம்பிகை யோகராஜா.

- தர்ஷி

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதானத்திற்காக எதையும் செய்யலாம்!

இந்த இதழுக்கான பத்தியை எழுத உட்கார்ந்த போது எனக்குள் எழுந்த கேள்வி இது தான்.

நான் எழுத நினைத்தக் கொண்டிருக்கின்ற விடயம் பத்திரிகையில் வெளியிட அனுமதிக்கப்படுமா ? ஆரிய ரூபசிங்க அவர்களின் தலைமையில் இயங்கும் அரசாங்கத் தகவல் திணைக்களம் அதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்களையும் வெட்டிப் போட்டு விட்டு வாசகர்களுக்குத் "தணிக்கை", "தணிக்கை" என்ற சொற்களை மட்டும் வாசிக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி விடுமா ?

ஆனையிறவு முகாம் தாக்குதலும், அதன் பின்னான இராணுவத்தின் தரப்பு நிலையும், அன்னய உதவிகள் கோரப்பட்டு, யுத்தம் தொடரப்படும் என்று அறிவிக்கப்படுகின்ற போக்கும் அவை ஏற்படுத்தக் கூடிய அரசியல் நிலை பற்றியுமான சில விடயங்கள் பற்றி இந்தப் பத்தியில் குறிப்பிடலாம் என்ற எண்ணம் தான் என் மனதில் இருந்தது.

குறிப்பாக, சமாதானத்தினை இந்த நாட்டில் கொண்டு வருவதற்கு எந்த விதத்திலும் உதவாத இன்னும் சரியாகச் சொல்வதானால், அதை இல்லாதொழிக்கின்ற ஒரு யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற எமது நாடு எங்கு சென்று கொண்டிருக்கின்றது என்பது தொடர்பான கேள்வியை எழுப்புவதாக அந்தப் பத்தி அமைய வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது.

ஆனால் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட இலக்கம் 1130 / 8 ஆம் இலக்க மே மாதம் 03ம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கொண்டு வரப்பட்ட புத்தாயிரம் ஆண்டுக்கான முதலாவது கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ள இன்றைய சூழலில் இந்த விடயங்கள் பேசப்படுவதைத் தகவல் திணைக்களம் நிச்சயம் அனுமதிக்காது என்பதை அது ஏனைய பத்திரிகைகளில் வெட்டி எறிந்த பகுதிகளைப் பார்க்கும் எந்தச் சாதாரண வாசகராலும் புரிந்து கொள்ளப்படலாம்.

இந்தச் சட்டம் எவ்வளவு கடுமையானது, எவ்வளவு துாரம் இலங்கையில்

**தணிக்கை**

தைக் கைச்சாத்திட்டு வெளியிட்டு வைத்த ஜனாதிபதிக்குக் கூடப் புரிந்திருக்கின்றது. அதனால் தான் இவை "தற்காலிகமானவை" என்றும், அவை இனியில்லை என்ற அளவுக்கு மோசமான நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

ஆனால், இந்த விஷயம் பற்றித் [redacted] திணைக்களம் அவ்வளவுக்கு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. 03ம் திகதி வெளியிடப்பட்ட இந்தச் சட்டம் தொடர்பாய் ஒரு பத்திரிகைக்கு அனுப்பிய 08ம் திகதியிடப்பட்ட கடிதத்தில் தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க கையெழுத்திட்ட கடிதம் ஒன்று இவ்வாறு கூறுகின்றது.

"இந்தச் சட்டத்தின் பிரிவு 14(1) இன்படி நியமிக்கப்பட்ட தகுதிகாண் அதிகாரி என்ற முறையில் நான் உங்களிடம் இச் சட்டத்தின் 14வது பிரிவைக் கடுமையாகப் பின்பற்றுவதுடன், எல்லாவிதமான வெளியீடுகளுக்கும் என்னிடம் முன் கூட்டியே அனுமதி பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்."

ஆம். ஒரு கட்டளைச் சட்டம் அதிகாரத்தில் உள்ளவர்களை எவ்வளவு துாரத்திற்குத் [redacted] வைக்கும் என்பதற்கு இந்தக் கடிதம் ஒரு நல்ல உதாரணமாகும்.

இந்தப் பிரிவு 14 அப்படி என்னதான் சொல்கின்றது ?

வெளியீடுகளைக் கட்டுப்படுத்தல் என்ற தலைப்பில் அமைந்த இந்தப் பிரிவின் (1)வது பகுதி தகுதிகாண் அதிகாரி ஒருவர் ஏதாவது ஒரு வெளியீடு இலங்கையின் பாதுகாப்புக்கு அல்லது அதன் ஒழுங்குக்கு ஊறு ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தலாம் என்று "கருதும்" அல்லது அபிப்பிராயப்படும் பட்சத்தில் அவற்றைத் தடுக்க முடியும் என்றும், ஆசிரியத் தலையங்கங்கள், கட்டுரைகள், ஆசிரியர்களுக்கு எழுதப்படும் கடிதங்கள், காட்டூண்கள், அபிப்பிராயங்கள் சகலதும் தகுதிகாண் அதிகாரிக்குப் பிரசுரத்திற்கு முன் காட்டப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.

இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட



விடயங்களை இதில் கூறப்பட்ட அடிப்படையில் செய்யாத ஒருவர் குற்றம் செய்தவராவதுடன், குற்றம் காணப்படும் பட்சத்தில் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கையில் எந்தப் பத்திரிகையையும் வெளியிட முடியாது என்று ஜனாதிபதியால் உத்தரவிடப்படுவார் என்று இந்தச் சட்டத்தில் 14(2) பிரிவு கூறுகின்றது. 14(2) (பீ) இவ்வாறு செய்யும் ஒருவரது அச்சகத்தையும், பத்திரிகையையும் குறிப்பிட்ட காலத்திற்கு மூடி



விடவும் வழி செய்கின்றது. தகுதிகாண் அதிகாரிக்கு [redacted] அதிகாரத்தை வழங்கியுள்ள இந்தச் சட்டத்தின் 14ம் பிரிவு இலங்கையில் உள்ள சகல தொடர்பு சாதனங்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் நசுக்குகின்ற அதேவேளை, உண்மைத் தகவல்களை, அரசு பற்றியதும் அதன் ஏஜன்சிகள் பற்றியதுமான உண்மைத் தகவல்களை, அவை அரசுக்கும், அரச ஏஜன்சிகட்கும் பாதகமானது எனக் கருதும் பட்சத்தில் அமுக்கி விடவும் வழி செய்கின்றது.

இலங்கை அரசாங்கம் இன்றைய நெருக்கடிமிக்க ஒரு சூழலில் எடுக்கின்ற, எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள், அவை மக்களின் நலனுக்கு உகந்தவையா இல்லையா என்பதை ஒரு தனி நபரான [redacted]

[redacted]

நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் அத்தியாவசிய சேவைகளின் பாதுகாப்பு என்பன பற்றிய அரசாங்க சார்புக் கருத்துக்கள் மட்டுமே சரியானதும், நியாயமானதும் என்று கருதும் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சட்டம், நாட்டு நிலைமையை, அதன் வளத்தை, அதன் எதிர்காலத்தை முடக்கி விடும் தன்மையை மட்டுமே கொண்ட ஒரு சட்டம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இத்தகைய ஒரு நிலையில் ஒரு தொடர்பூடகவியலாளரால் எதைத் தான் செய்ய முடியும் ?

உண்மையில்,அவசர காலச் சட்ட விதிகள, பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 05வது பிரிவின் கீழ் கொண்டு வரப்படுபவையாகும். இவை (1989 ஜூன் மாதத்தில் ஜனாதிபதி பிரேமதாசவாலும் இவ்வகையான ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது!) நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து பாதுகாக்க அவசியம் என்று கருதும் பட்சத்தில் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்படுபவையாகும். இவற்றில் பெரும்பாலானவை, தேசிய பாதுகாப்பின் தேவைக்கும் அப்பாற்பட்ட, பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றவும் பயன்படுத்தப்படக் கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றன. 1989இல் கொண்டுவரப்பட்ட சட்டம், அரசாங்கத்தின் அரசியல் நோக்கங்களை மட்டுமன்றி நாட்டின் சாதாரண விவகாரங்களில் [redacted] பாதித்ததை, இன்று இலங்கை நீதிமன்றப் பதிவேடுகளில் பார்வையைச் செலுத்துபவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக ஒரு விடயத்தை விளக்குவது இந்தச் சட்டம் எவ்வளவு மோசமான விளைவுகளை தரும் என்று புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

இந்தக் கட்டகளைச் சட்டத்தின் 2வது பிரிவின் கீழ் அத்தியாவசிய சேவைகள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட சட்டத்தின் பிற்பகுதியிலுள்ள பட்டியலில் காணப்படும் சேவைகளில் வேலைசெய்யும் ஊழியர்கள் யாவரும் இதே சட்டத்தின் 41 (1)வது பிரிவின் படி வேலைநிறுத்ததில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாவதுடன், அவர்கள் வேலையிலிருந்து நீக்கவும் படலாம் என்று கூறுகிறது.

இவ்வளவு கடுமையான தண்டனையை வழங்கும் இந்தச்சட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் பட்டியலில் மிகவும் கவனத்துடனும் பொறுப்புடனும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு சம்பந்தமான வேலைகளை மட்டும் சேர்த்திருக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கலாம். ஆனால், அந்தப் பட்டியலைப் பார்த்தால் அதில் இலங்கையில் நடைமுறையில் உள்ள அனைத்துத் தொழில்களையும் இந்தச்சட்டம் அப்பட்டில்களுள் அடக்கிவிட்டுள்ளது. பட்டியலின் இறுதியாகவரும் பகுதி (I) இவ்வாறு கூறுகிறது.

"உணவு, மருந்து அல்லது பொதுமக்களில் ஒருவரால் பயன்படுத்தப்படும் ஏதாவது ஒரு பொருளின் வியாபாரம், விநியோகம், வழங்கல் என்பன தொடர்பில் அவசியமான அல்லது தேவைப்படுகின்ற எல்லா சேவைகளதும் ஒவ்வொரு அம்சங்களும்"

இந்தப் பிரிவைப் படிக்கும் ஒருவர் இதற்கு அப்பாலும் ஒரு தொழில் இருக்க முடியாது என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். உதாரணமாக, மூக்குக் கண்ணாடி அல்லது பாத அணி தயாரிக்கும் ஒரு தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஊழியர் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்வதைக் கூட இந்தச் சட்டம் தடை செய்து விடுகின்றது.

இந்தச் சட்டத்திற்கும், தேசிய பாதுகாப்புக்கும் உள்ள சம்பந்தம் யாருக்கும் இலகுவில் புரிந்து கொள்ள முடியாத ஒன்றல்ல!

தொழிலாளர்கள் [redacted] பாதுகாக்கவென உள்ள வேறெந்தச் சட்டமும், வேறெந்த உடன்படிக்கைகளும் இச் சட்டம் அமுலுக்கு வந்த பின் செல்லுபடியாகாது என்று இச் சட்டத்தின் 41(1) C கூறுகிறது!

ஆஹா ! என்ன அருமையான தேசிய பாதுகாப்பு என்று தோன்றுகிறது அல்லவா?

வாஸ்தவம் தான் !

சமாதானத்தை யுத்த மூலம் காண வேண்டுமானால், [redacted]

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்




# இந்தியப்படையை மீண்டும் அழைப்போமா?

புலிகள் இயக்கத்தினருக்கு முகம் கொடுக்க மீண்டும் இந்தியப் படையை அழைப்பிக்க வேண்டுமென சிற்சில தரப்பினரிடமிருந்து யோசனைகள் முன்வைக்கப்படத் தொடங்கியுள்ளன. இவ்வாறு யோசனை தெரிவிக்கும் சில பௌத்தத் தலைவர்கள் 1987 - 1990 காலப்பகுதியில் இந்திய சமாதானப் படை வருகையை எதிர்த்து அவர்களை திருப்பியனுப்ப சண்டித்தனமான போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்திய சமாதானப்படை இலங்கைக்கு வருவதற்கான அடிப்படையை தயாரித்தது அரசியலமைப்பின் 13வது திருத்தமாகும். இந்த அரசியலமைப்பின் 13வது சீர்திருத்தம் ராஜீவ் - ஜே.ஆர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் இணக்கப்பாட்டினால் ஏற்பட்டது. இந்திய சமாதானப்படையை ராஜீவ் காந்தியின் தலைமையுடனான இந்திய அரசாங்கம், 13வது சீர்திருத்தத்தை செயற்படுத்தும் முகமாகவும், சமாதான சூழலை வடக்கு -கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தும் முகமாகவும் அனுப்பி வைத்தது. 13வது சீர்த்திருத்தத்தினால் தற்காலிகமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் ஒன்றிணைத்து வடக்கு - கிழக்கு மாகாண அரசை உருவாக்க ஏற்பாடாகியது.

13வது சீர்திருத்தத்தினால் தற்காலிகமாக வடக்கு -கிழக்குப் பிரதேசம் இணைக்கப்பட்டு, மாகாண அரசு ஸ்தாபிக்கப்பட்டது. இந்திய சமாதானப்படை இம் மாகாண அரசை நிறுவ தேவையான ஒப்பீட்டளவிலான அமைதியான அரசியல் சூழ்நிலையை கட்டியெழுப்பியது. இம் மாகாண அரசு தோல்வியுற்ற ஓர் கசப்பான அனுபவமாக பின்னர் மாறியது. இந்திய சமாதானப்படை குரங்குப் படை என பிரேமதாச - தேசியவாதிகள் கூட்டினால் பெயர் சூட்டப்பட்டது. தேசப்பிரேமி மக்கள் இயக்கத்தினால் இந்திய விரோத கருத்தியல் பிரச்சார இயக்கம் கட்டியெழுப்பப்பட்டது.

இந்திய இராணுவம் நாடு திரும்ப அல்ல வந்துள்ளதென கதை பரப்பினர். பிரேமதாசா அவர்கள் தேசப்பிரேமி மக்கள் இயக்கத்தின் மற்றும் புலிகள் இயக்கத்தின் தேவைக்கு ஏற்ப இந்திய சமாதானப்படையைத் திருப்பி அனுப்பியது புலிகள் இயக்கத்திற்கு ஆயுதங்கள் மற்றும் பண உதவி வழங்கியே ஆகும். வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பிற்கு இவ்வாறான பாரிய நடவடிக்கைக்குத் தேவையான திறமையான தமிழ் குழுக்கள் இருக்கவில்லை. இவ்வாறான திறமை கொண்டவர்கள் ஈ.பி.ஆர்.- எல்.எப். அமைப்பிற்கு ஆதரவளிக்க முன் வரவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப்பிடம் போதுமான குருதியும் சதையும் காணப்படவில்லை. போதுமான மக்கள் அடிப்படையை கொண்டிராத அச் சுயாதீனமான பாதுகாப்பு படையில் தமிழ் சிறுவர்கள் பலவந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். உண்மையில் இந்திய சமாதானப் படையினது தோல்வியின் அடிப்படை இவ்விடத்திலேயே காணப்பட்டது. அதாவது வடக்கு - கிழக்கு பிரதேசங்களை நிர்வகிக்க மக்கள் அடிப்படை கொண்ட தமிழ் அரசியல் அமைப்பு ஒன்று காணப்படவில்லை. புலிகள் இயக்கம், 13வது சீர்திருத்தத்தின் ஊடே வெற்றி கொள்ள அடிப்படை ஒன்றை கொண்டிருந்திருந்தால் 1987 - 90 இந்திய சமாதானப்படை தமது கடமையை நிறைவேற்றிக் கொண்டு பெருமையுடன் நாடு திரும்ப முடிந்திருக்கும். எனினும், அது வடக்கு கிழக்கு மாகாண சபை தலைவர் வரதராஜப் பெருமாள் மற்றும் அவரின் தோழர்கள் ஆகியோரை இழிவுக்குள்ளாக்கும் யோசனையாக கருதப்பட்டது.



இந்திய சமாதானப்படை இலங்கையில் முகம் கொடுத்த நிலைமை பற்றி பல நூல்களில் எழுதப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தைப் போன்று இலங்கை அரசாங்கமும் இவ் இராணுவத்திற்கு விரும்பியவாறு போரிட வாய்ப்பளிக்கவில்லையென இந்திய ஜெனரல்களினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மறுபுறம் புலிகள் இயக்கத்தை யுத்த ரீதியில் தோல்வியுறச் செய்யவும், வேறு தமிழ் அரசியல் நிறுவனங்கள் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவும், இலங்கையின் இன யுத்த வரலாற்றில் கிடைத்த பொன்னான ஒரே சந்தர்ப்பம் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தமாகும். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சக்திகள், அதாவது அரசியல் கட்சிகள் என்பன இந்நாட்டில் காணப்படவில்லை, குறிப்பாக தெற்கின் அரசியல் சக்திகள், அதாவது சிங்களவர்களின் மேலாதிக்கம் கொண்ட அரசியல் சக்திகளுக்கு தமது வரலாற்று சூழலை சரியான முறையில் விளங்கிக்கொள்ள இயலவில்லை. ஜே.ஆர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு இணங்கியமை தவிர்க்க முடியாத காரணத்தினாலாகும். உண்மையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு உண்மையான அரசியல் ஆதரவைத் தெரிவிக்க விஜயகுமாரதுணங்க போன்ற சிலரே முன்வந்திருந்தனர். தேசப்பிரேமி மக்கள் இயக்கத்தின் துப்பாக்கி முனையிலிருந்து தப்ப விஜயகுமாரணதுங்கவுக்கு அதிர்ஷ்டம் இருந்திருந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு புதிய அர்த்தத்தை வழங்க அவருக்கு வாய்ப்பு இருந்திருக்கும். இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு 13ம் சீர்திருத்தத்திற்கு மற்றும் இந்திய சமாதானப்படைக்கு ஆதரவு தெரிவிக்கும் முன்னர் தேசிய சர்வதேசிய அரசியல் பற்றி யதார்த்த ரீதியிலான விளக்கம் கொண்டிருத்தல் வேண்டும். இன்று எவராவது இந்திய உதவியையோ சர்வதேச உதவியையோ கோருகின்றார்களாயின் அவர்கள் மேலதிக விளக்கம் பெறுவது அவசியமாகும்.

முதலாவதாக இந்நாட்டு இனப்பிரச்சினையில் தலையிடும் எந்தவொரு சர்வதேச சக்திகளும் இந்நாட்டு தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கும் வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் தாம் தலையிடும். இதற்குப் பிரதான காரணம் தற்கால நிலைமையின் கீழ் இலங்கை தொடர்பாக சர்வதேசமயப்பட்டிருக்கும் பிரதான விடயம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையாகும். இலங்கையில் தமிழ் மக்கள் இன அசமத்துவத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் சிங்கள பௌத்த பெரும்பான்மையின [redacted] அவர்களின் [redacted] உலகம் முழுவதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உண்மையில் இது யதார்த்தமாகும். இதனால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சர்வதேச தலையீட்டின் நோக்கம் அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட சுய ஆட்சியை தமிழ் மக்களுக்கு வழங்குதலாகும். தனியே புலிகள் இயக்கத்தைப் பயமுறுத்த இங்கு இந்தியப் படையையோ பிற சர்வதேச படைகளையோ அழைக்க எண்ணுவது பகல்கனவு காண்பது போன்றதாகும்.

இரண்டாவதாக, எந்தவொரு சர்வதேச தலையீடும் இலங்கையின் பௌதீகப் பண்பை நாசமாக்காது என நம்பிக்கை கொள்ளல் வேண்டும். குறிப்பாக 1987 - 90 இந்திய சமாதானப்படைக்கு எதிராக தோன்றிய எதிர்ப்பின் அடிப்படை, இலங்கை இரண்டு துண்டுகளாகும் என்ற எண்ணமாகும். எவ்வாறாயினும், இந்திய அரசாங்கம் இலங்கை பிரிவது குறித்து தன் விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை. இலங்கையை பிரித்து வேறு அரசை உருவாக்க இந்தியா விரும்பியிருந்தால், 1983 மற்றும், 87 காலத்தில் தமிழ்ப் போராட்ட அமைப்புகளின் மூலம் அதனை நிறைவேற்றிக்கொள்ள கூடியதாகவிருந்திருக்கும். உண்மையில் இந்தியா, இலங்கை பிரிவதனை எதிர்க்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் அது தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய அரசியல் கட்டமைப்பை வலியுறுத்துவதற்கும், இலங்கையைப் பிரிப்பதற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. பலரும் விளங்கிக்கொள்ளாத விடயம் இதுவே ஆகும். சர்வதேச ரீதியாக இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அக்கறை காட்டும் பல சக்திகள் மற்றும் நாடுகள் இலங்கையைப் பிரிப்பதனை நோக்கமாக் கொண்டிருக்கவில்லை. இப்பொழுது இவ்விடயத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, நேரடியாக சர்வதேச தலையீடொன்றை எதிர்பார்ப்பவர்கள், இவ்வாறான போக்கினால் பல விரும்பத்தகாத அழுத்தங்கள் இந்நாட்டு அரசியல் கட்டமைப்பில் ஏற்படும் என்பதை விளங்கிக்கொள்ளல் வேண்டும். நேரடி சர்வதேச தலையீட்டினால், உள்ளக நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்ள முயற்சித்த பல சந்தர்ப்பங்களை கடந்த இரு தசாப்தங்களாக காண முடிந்தது. உகண்டாவினூடான டன்சானியா தலையீடு, கம்பூச்சியாவில் வியட்னாம் தலையீடு, சோமாலியாவில் ஐ.நா. தலையீடு என்பன சில உதாரணங்களாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தத் தலையீடுகள் எதிர்பார்த்த விளைவுகளைத் தராதபோதிலும் பிரதான பிரச்சினைகளைத் தீர்க்க உதவியது. சோமாலியாவில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு முழுமையாகத் தோல்வியுற்றது. அந்நாட்டில் இன்றும் படுகொலைகள், குழப்பங்கள் உள்ளன. அங்கு கிராமமானதொரு அரசாங்கம் அற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமை இவ் அனைத்து நாடுகளையும்விட முற்றிலும் வேறுபாடானது. இரு தசாப்தங்களாக காணப்படும் யுத்தம் இந்நாட்டு அரசியல் கருத்தியல் மீது நீண்டகால பிரதிகூலத்தை ஏற்படுத்தியுள்ளது. இன துருவவாதம் மற்றும் இன அவநம்பிக்கை இவற்றில் பிரதானமானவை. சமூக செயலின்மையும், யுத்த தாகமும் வளர்ந்து வருகின்றது. யுத்தமயத்துக்குள்ளாகும் அரசியலினால் பிரஜைகள் முக்கியத்துவம் நலிவடைகின்றது. பிறரால் நாம் தாக்கப்படுவோம் என்ற பீதி அனைத்து தரப்பினரிடம் ஆழ வேரூன்றி உள்ளது. புலிகள் இயக்கத்தின் யுத்த வெற்றியினால் அச்சமுற்று இந்திய அல்லது பிற சர்வதேச உதவியைக் கோருதல் என்பது யானைக்கால் நோய்க்கு முதுகில் மருந்து தேய்த்தல் போன்றதாகும். [redacted] சர்வதேச உதவி தரும் வாய்ப்பு ஏதும் இருந்தால், அது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்கும் பிரதான நோக்கமே அன்றி இலங்கைப் படைகளை பாதுகாத்துத் தர அல்ல. எவ்வாறாயினும், நம் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளல் உசிதமான சிறந்த முறையாகும். இரு தரப்பு பேச்சுவார்த்தை போன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடான அரசியல் தீர்வின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த இன்னும் வாய்ப்புள்ளது. எனினும், இதற்குத் துணிவான அரசியல் திடசங்கற்பம் தேவை. இவ் அரசியல் திடசங்கற்பத்தை ஏற்படுத்திக் கொள்ள எம்மால் இயலாவிட்டால் இலங்கையை அராஜகத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள சிலவேளை வெளிநாட்டு தலையீடு தேவைப்படும் வாய்ப்புண்டு.

-சுனந்த தேசப்ரிய



**மூன்றாவது மனிதன்**
**இதழ் - 08**
**மே - ஜூலை, 2000**
**விலை - ரூபா 50.00**
**தொலைபேசி : 300919**
**மின்அஞ்சல் : tman@unanet.lk**
**ஆசிரியர் : எம். பௌஸர்**

**தொடர்புகளுக்கு: 53 வொக்ஷோல் லேன், கொழும்பு-02**

ஈழத்து இலக்கியச் சூழலில் ஏதோ ஒன்று நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு மூன்றாவது மனிதனின் வருகையும், அதன் உள்ளடக்கமும் நமக்கு ஆறுதலாக இருக்கிறது. இம்முறை ஜஸ்ற்ரின் தாஸின் ஓவியம் அட்டைப் படத்தில் இடம் பெற்றுள்ளது. அரசியல் கட்டுரை, நேர்காணல், சிறு கதை, மொழி பெயர்ப்பு, கவிதை, நாடகம், ஓவியம், விவாதம் எனப் பல தளங்களில் அதன் சிந்தனை வெளிப்பாடு உருவம் கொண்டுள்ளது.

நேர்காணல்களாகக் கவிஞர் சோலைக்கிளியினதும், சிறுகதை எழுத்தாளர் செ. யோகநாதனினதும், நேர்காணல் இடம் பெற்றுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பியின் " இலங்கையின் அரசியல் சூழலில் தமிழ்த் தேசியம் " என்ற கட்டுரையை எழுதியுள்ளார் - அவர் நீண்ட காலத்தின் பின் தமிழ்த் தேசியம் பற்றி எழுத முற்பட்டுள்ளது எமக்குள்ள அரசியல் சூழலின் தவிர்க்க முடியாத நெருக்குதலின் விளைவைக் காட்டுகிறது. தமிழ்த் தேசியம் பற்றி இன்னும் விரிவாக விவாதிக்கப்படவும், எழுதப்படவும் வேண்டும்.

எம்.கே.எம்.ஷகீப் மொழி பெயர்த்த " அம்மா " மொழி பெயர்ப்புச் சிறு கதை, தாய்மையின் தேவையை உணர்த்தி நிற்கிறது. நஸ்ருதீன் தனது சிறு கதையில் இன்னும் விரிவாகச் சில விடயங்களை எழுதியிருக்கலாம், முடிவடையாத கதையாகவே அது உள்ளது. செ. யோகநாதன் சில இடங்களில் தனது பலவீனத்தை மறைக்கவே முயன்றுள்ளார். நேர்காணல்கள், உண்மையில் உண்மையின் தரிசனத்திற்காகவே வாசிக்கப்படுகிறது. சோலைக்கிளியின் நேர்காணலில் கவிதைக்கு அப்பால் நகர முடியாத பெரும் இடைவெளி காணப்படுகிறது.

1960களில் எழுதப்பட்ட என். கே. ரகுநாதனின் "கந்தன் கருணை" நாடகம் ஆவணமாக்கப்படுவதற்காக மீள் பிரசுரம் பெற்றுள்ளது. சுந்தர இராமசாமியின் கட்டுரை வாசிப்புக்குரியது மட்டுமன்று, விவாதத்திற்கும், சிந்தனைத் தாகத்திற்கும் தீனி போடக் கூடிய சுய வரலாறு அது. உமா வரதராஜனின் கைபோன போக்கில் நல்ல பத்தி எழுத்து - ஆனால் இவைகளை, அவர் தனித்தனி விடயங்களாக எடுத்து, விரிவான கட்டுரை எழுத முற்படலாம்.

கவிதைகளாக எஸ். போஸ், எம். வை. சிஹானாஷ், ஏ. எம். றஷ்மி, கவியோவியன், அஸ்வகோஸ், அறபாத், அஷ்ரஃப் சிஹாப்தீன், தேவஅபிரா, மஜீத், சி. ஜெயசங்கர், ஏ. எச். எம். ஜிஃப்ரி, மு. பொ. ஆகியோரின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. விவாதத் தளத்தில் பேராசிரியர் சி. சிவசேகரம், மு. பொன்னம்பலம், எஸ். போஸ், சி. அ. யோதிலிங்கம், ஆகியோர் தங்கள் கருத்துக்களை எழுதியுள்ளனர். கடிதப் பகுதி - மற்றும் புத்தக அறிமுகக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவது மனிதன் ஆசிரியர் குறிப்பில், "குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளியினுள் இதழ்களைக் கொண்டு வராமை முக்கிய செயற்பாட்டுக் குறைபாடாக இருந்துள்ளது. குறிக்கப்பட்ட காலத்தினுள் இனி வரும் இதழ்கள் வெளிவரும் - இதற்குப் படைப்பாளிகளின் பங்களிப்பும் வாசகர் தள விரிவாக்கமும், ஆர்வமும் இந்தப் பணிக்குப் பின்னாலுள்ள மிகப் பெரும் வளங்கள்" என எழுதப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியச் சூழலில் ஆர்வமும், அக்கறையும், தேடலும் கொண்ட அனைவரும் வாசிக்க வேண்டிய சிற்றிலக்கிய சஞ்சிகை மூன்றாவது மனிதனாகும்.

- தேவன் -

நன்றி - நூலகத்திட்டம்



# "ஒரு தூரதிருஷ்டிமிக்க நடவடிக்கையையே நாம் மேற்கொண்டோம்"

எம். ஐ. எம். மொகிதீன்

**இன்றைய நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் அரசியல் உணர்வு தான் என்ன?**

கடந்த கால வரலாற்றிலிருந்து சிந்தப்பட்ட இரத்தமும், இழக்கப்பட்ட உயிர்களும் தமிழர் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களும் நமக்கு முன்னொரு மிகப்பெரும் பாடமாகவே இருக்கிறது. இந்த வரலாற்றுப்பாடத்திலிருந்து தமிழர்களும், முஸ்லிம்களும் பெற்ற கசப்பான அனுபவங்கள் இனிவரும் காலத்திலும் சகோதர இனங்களான தமிழர் முஸ்லிம்களிடையே ஏற்பட்டு விடக்கூடாது! கடந்த கால வரலாறு மீள ஒருதரம் எழுதப்பட சம்பந்தப்பட்ட, பொறுப்பு மிக்க தலைமைகள் வழியமைத்தும் விடக் கூடாது. இவ் உண்மையின் அடிப்படையில் நாம் மனம் திறந்து பேச வேண்டியவர்களாக உள்ளோம்.

பேச்சுவார்த்தையின் மூலம் நமக்குள் தோன்றியிருக்கும் முரண்பாடுகளையும் தெளிவின்மைகளையும் மனக்கசப்புகளையும் நீக்கிக் கொள்ள முடியும். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமுள்ள வேறுபாடுகளைவிட வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் மிகப்பெரும் ஒற்றுமைகளும் பொருத்தப்பாடுகளுமே அதிகமாக உள்ளன. இந்த ஒற்றுமை கடந்த காலங்களில் திட்டமிட்டு சிதறடிக்கப்பட்டதும், சிதைக்கப்பட்டதுமான பிரேத பரிசோதனை இன்று நமக்கு அவசியமில்லை.

ஆனால் வடக்கு கிழக்கில் தமிழர் முஸ்லிம்களிடையே மிகப்பெரிய இடைவெளி ஒன்று ஏற்பட்டு விட்டது. இந்த இடைவெளியை - தூரத்தைக் களையும் பொறுப்பு தமிழ்த் தலைமையிடமும், முஸ்லிம் தலைமையிடமும் உள்ளது. முஸ்லிம் மக்களிடையே குறிப்பாக பாராளுமன்ற அரசியலுக்கு வெளியில் நீண்டகாலமாக இனப்பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம் மக்களின் இருப்பும் வாழ்வும் தொடர்பாக என் வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவிட்டவன் என்ற வகையில் - தமிழ்த் தலைமையும், முஸ்லிம்களும் பேச வேண்டும் - நியாயமான உடன்பாடு காணப்பட வேண்டுமென்பதற்காக நிறையவே உழைத்துள்ளேன். அன்றிலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணம் தொடக்கம், பொத்துவில் வரையும் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் சமத்துவமாகவும், ஒற்றுமையுடன் வாழ்வதையே தங்களுக்குப் பாதுகாப்பாகவும் எதிர்காலமிக்க நல் வாழ்வாகவும் கருதுகிறார்கள். இந்த உண்மையை 1985க்கு முன்னான வடக்கு கிழக்கு தமிழர் முஸ்லிம் வாழ்வு மெய்ப்படுத்தியும் இருக்கிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தங்களுடைய இரட்சகர்களாக சந்திரிகாவையோ ரணிலையோ கொள்ள முடியாது என்ற யதார்த்தம் முகத்தில் அறைந்த மிகப் பெரும் கால அனுபவத்தை தந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

ஆகவே இந்நிலையில் தமிழர் முஸ்லிம் வாழ்வு பிரிக்கப்பட முடியாது என்ற அனுபவம் தந்த உண்மையின் அடிப்படையில் இன்று முஸ்லிம்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

**கடந்த காலங்களில் முஸ்லிம் தலைமைகள் தமிழ்த் தலைமைகளுடன் பேசி இருக்கிறதே — இதுபற்றிச் சொல்ல முடியுமா?**

வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்காகப் பேசுவதற்கு எனது தலைமையில் "முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி" என்ற அரசியல் கட்சியும் அஷ்ரஃப் அவர்களின் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுமே இருந்தது. நான் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியை ஸ்தாபிப்பதற்கு முன்பே அகில இலங்கை முஸ்லிம் லீக், கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி, பதியுதீன் மஃமூத் தலைமையிலான இலங்கை முஸ்லிம் கவுன்சில் போன்ற இயக்கங்களில் செயற்பட்டு வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் இனப்பிரச்சினை விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் பேசி வந்திருக்கின்றேன்.



எம்.ஏ.எம்.மொகிதீன்

1987ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவிருந்த அ. அமிர்தலிங்கம், தவிசாளராகவிருந்த மு. சிவசிதம்பரம் ஆகியோருடன் எனது தலைமையில் ஒரு இணக்கப்பாட்டு தீர்வு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பின் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 1988 ஏப்ரல் 21ம் திகதி சென்னையில் வைத்து ஒரு உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டது. அக் கூட்டறிக்கையினை நீங்கள் கூட கடந்த உங்கள் பத்திரிகையில் முழுவதுமாகப் பிரசுரித்திருக்கிறீர்கள். இவ் உடன்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மத்திய குழு உறுப்பினராக விருந்த சதாசிவம் கிருஷ்ணகுமாரும் (கிட்டு) நானும் கைச்சாத்திட்டுள்ளோம். என்னைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளுடனான அவ் உடன்பாடானது தமிழர்களுக்கு அல்லது தமிழ் தலைமைகளுக்கு எப்படி திம்பு பேச்சுவார்த்தை முக்கியமானதோ அது போலவே முஸ்லிம்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஐக்கிய முன்னணி உடன்பாடு மிக மிக முக்கியமானதாகும்.

1990ல் விடுதலைப் புலிகள் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காலத்தில் கூட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் மற்றும், யோகி போன்றவர்களுடன் முஸ்லிம்கள் தொடர்பாக நான் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். 1988ம் ஆண்டைய விடுதலைப் புலிகள் - முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி உடன்பாட்டிற்கு அமைவாக இந்திய அரசின் துணையுடன் நடாத்தப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாது. அதனை நிராகரித்தும் நின்றோம்.

**வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு நடந்த தேர்தலில் நீங்கள் போட்டியிடவில்லை என்றீர்களே அதற்கான காரணங்கள் என்ன?**

உண்மையில் இலங்கை - இந்திய ஒப்பந்தமென்பது தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளையோ முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளையோ உள்வாங்கி உருவாக்கப்பட்டதல்ல, இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையேயான பலப்பரீட்சையின் ஒரு இராஜதந்திர முகம் தான், இலங்கை இந்திய ஒப்பந்தமாகும். வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கும் அபிலாஷைகளுக்கும் அவ்வொப்பந்தம் தீர்வாக அமையவில்லை. தீர்விற்கான மார்க்கத்தையும் அது தரவில்லை. இவ் ஒப்பந்தத்தை தமிழர் தரப்பிலிருந்து விடுதலைப் புலிகளும், முஸ்லிம் தரப்பிலிருந்து நாங்களும் நிராகரித்தோம். அந்த நிராகரிப்பின் வெளிப்பாடு தான் நாங்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாதது. காலத்தை இன்று பின்நோக்கி நகர்த்திப் பார்க்கும் போது கூட விடுதலைப் புலிகளோ நாங்களோ அத் தேர்தலில் போட்டியிடாதது மிகவும் தூரதிருஷ்டிமிக்க முடிவாகவே உள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு இந்தியாவின் உதவியுடன் வடக்கு கிழக்கு முதல்வர் அரியாசனத்தில் வீற்றிருந்த முன்னால் வடக்கு கிழக்கு முதலமைச்சர் வரதாராஜப் பெருமாள் மத்திய அரசின் ஒரு சிங்கள பொலிஸ்காரனுக்குக் கூட இருக்கும் அதிகாரம் தனக்கில்லை என அழுது புலம்பி இலங்கை அரசுக்கெதிராக என்ன நிலைப்பாட்டை எடுத்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் தான். பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற கதையாகவே அது இருந்தது.

அன்று எமக்கு வெறும் மாகாணசபை உறுப்பினர் பதவிகளோ- பஜீரோ ஜீப்புகளோ,

"தமிழ் தலைமைகளுக்கு எப்படி திம்பு பேச்சுவார்த்தை முக்கியமானதோ அது போலவே முஸ்லிம்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஐக்கிய முன்னணி உடன்பாடு மிக மிக முக்கியமானதாகும்."

தேவையாக இருக்கவில்லை. நாங்கள் முதன்மைப்படுத்தியது முஸ்லிம் மக்களுடைய இன அடையாளத்தையும் தன்மானத்தையும் சுயாதிக்கத்தையும் தான். விடுதலைப் புலிகளும் நாங்களும் ஒரு சந்திப்பு புள்ளியில் இணைந்து கொண்டதும் இந்தக் கருத்து உடன்பாட்டின் அடிப்படையில் தான். மக்களுடைய நலனில் நிற்பதும் வரிந்து கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாக இருப்பதுமே அது.

இன்று பாருங்கள். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையில் பங்குபற்றியவர்கள் தமிழர்களுடைய பிரச்சினைக்கோ, முஸ்லிம்களுடைய பிரச்சினைக்கோ தீர்வுகாண முடியவில்லை. 1987க்குப் பின் மேலும் 13 வருடங்களாக யுத்தம் மிகத்தீவிரமாகத்தானே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து நாம் பெற்ற பாடம் தான் என்ன? எந்த ஒரு இனத்தினது தலைவிதியையும் வேறு சக்திகள் நிர்ணயிக்க முடியாது! அது தமிழர்களாக இருந்தால் என்ன? முஸ்லிம்களாக இருந்தால் என்ன, நியாயமாக மக்கள் உணர்வுகள், அவர்களுடைய அபிலாஷைகள் மதிக்கப்படும், ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வுகள் தான் உண்மையான சமாதானத்தைக் கொண்டு வரும்.

**பின் ஏற்பட்ட நிலைமைகள் பற்றிச் சொல்ல முடியுமா?**

விடுதலைப் புலிகளுடன் 1988 ஏப்ரல் 21இல் சென்னையில் உடன்படிக்கை செய்யப்பட்டு அவர்களாலேயே அக்கூட்டறிக்கை அச்சிடப்பட்டு வெளியானது. இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் கூறுவது மிகப்பொருத்தமென நினைக்கிறேன். எப்போது அவ் உடன்படிக்கை ஏற்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை அவ் உடன்படிக்கைக்கு விசுவாசமாகவே நான் நடந்து வந்திருக்கிறேன்.

ஆனால், துரதிருஷ்டவசமாக விடுதலைப் புலிகள் 90க்குப்பின் முஸ்லிம்கள் தொடர்பாக அவ் உடன்படிக்கையில் இணங்கிக்கொண்ட விடயங்களுக்கு மாறாக நடந்து கொண்டார்கள். இதன் விளைவாகத் தோன்றிய நிலைமை - முஸ்லிம்களின் அரசியலில் மிகப் பெரும் தாக்கத்தை உள்ளும் புறமும் ஏற்படுத்தியது. இக்கால கட்டத்தில் தாக்குப்போர், தற்காப்புப்போர் என தவறுகள் இழைக்கப்பட்டன. இது தொடர்பாக ஏற்பட்ட விளைவுகள் உலகறிந்ததே! 90க்குப் பின்னான வடக்கு கிழக்கு தமிழர் முஸ்லிம் வாழ்வு, இரத்தமும் கண்ணீரும், அவலமும் நிறைந்த கதையாக மாறிற்று.

விடுதலைப் புலிகளின் இராணுவச் செயற்பாடு முஸ்லிம்களைப் பல்வேறு தளங்களுக்கும் தள்ளியது. ஒரு சுய விமர்சனமாக என்னை எடுத்துக் கொண்டால் நானும் எனது கட்சியை விட்டு விட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கொண்டேன். ஆனால், ஒன்று நான் எங்கிருந்தாலும் முஸ்லிம்களுக்கு ஒரு அரசியல் பாதுகாப்பு ஏற்பாடு அமைவதற்கான எனது எத்தனத்தை தடுத்து நிறுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அந்த விடயத்தில் என்னை யாரும் கட்டுப்படுத்தி விடவும் முடியாது. எனக்கு தமிழர் - முஸ்லிம்களின் ஒற்றுமையும் - அதனால் ஏற்படும் சமத்துவமிக்க சூழலும் வாழ்வுமே முக்கியமானதாகும்.

என்னைப் பொறுத்த வரையில் சிங்கள மக்களையும் அவர்கள் சொல்லும் சிங்கள நாட்டையும் பாதுகாக்க முடியாத சந்திரிகா-

→19

"உண்மையில் இலங்கை - இந்திய ஒப்பந்தமென்பது தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளையோ முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளையோ உள்வாங்கி உருவாக்கப்பட்டதல்ல, இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையேயான பலப்பரீட்சையின் ஒரு இராஜதந்திர முகம் தான், இலங்கை இந்திய ஒப்பந்தமாகும். வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கும் அபிலாஷைகளுக்கும் அவ்வொப்பந்தம் தீர்வாக அமையவில்லை. தீர்விற்கான மார்க்கத்தையும் அது தரவில்லை. இவ் ஒப்பந்தத்தை தமிழர் தரப்பிலிருந்து விடுதலைப் புலிகளும், முஸ்லிம் தரப்பிலிருந்து நாங்களும் நிராகரித்தோம். அந்த நிராகரிப்பின் வெளிப்பாடு தான் நாங்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாதது. காலத்தை இன்று பின்நோக்கி நகர்த்திப் பார்க்கும் போது கூட விடுதலைப் புலிகளோ நாங்களோ அத் தேர்தலில் போட்டியிடாதது மிகவும் தூரதிருஷ்டிமிக்க முடிவாகவே உள்ளது."

நன்றி - நூலகத்திட்டம்



# போரைத் தவிர வேறு வழி இல்லை!

## சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க

**சிஹல உறுமயவைக் கட்டி எழுப்பியதன் நோக்கத்தைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துவீர்களா ?**

குறிப்பாக, கடந்த 20 வருட காலத்தில் சிங்கள மக்களை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து விலக்கி வைக்கும் முயற்சி செயற்பட்டு வந்துள்ளது என நாம் நம்புகின்றோம். பாதுகாப்பு, நாட்டில் எந்தவொரு இடத்திலும் வாழும் உரிமை, பொருளாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு போன்ற எந்த ஒரு துறையை நோக்கினாலும் இந்த நிலைமையை விளங்கிக் கொள்ள இயலும். சுருக்கமாகக் கூறினால், மீண்டும் ஒரு முறை, வெளியேற்றப்பட்ட சிங்கள மக்களை இலங்கை அரசிற்குள் அழைப்பித்தலே "சிஹல உறுமய" கட்சியின் நோக்கம் ஆகும்.

**சிங்களவர்கள் மத்தியிலும், சிங்களம் பேசாத சிங்களவர்கள், பௌத்தமல்லாத சிங்களவர்கள் என்றவாறு பல தரப்பட்ட வேறுபாடுகள் உண்டு. நீங்கள் சிங்களவர்கள் என்று எவரைக் குறிப்பிடுகின்றீர்கள் ?**

நாம் இங்கு சிங்களவர்கள் என்று கருதுவது, சிங்கள மொழியை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட வரலாற்றுத் தேசிய அடையாளத்தை ஏற்றுக்கொள்ளும் மக்களையே. இவ் அடையாளத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், சிங்கள மொழியை பேசுவதனால் மட்டும் சிங்களவர்கள் என்று கருதப்பட முடியாது.

**இந் நாட்டுச் சிறுபான்மை இனங்கள் குறித்து உங்கள் கட்சி எவ்வாறான கருத்தைக் கொண்டிருக்கின்றது ?**

பொதுவாக, தமக்கென வரலாற்று உரிமைகளை, மொழியை, கலாசார அடிப்படையை மற்றும் நாடு ஒன்றைக் கொண்டுள்ள மக்களையே இனம் என்று குறிப்பிடுகின்றோம். இலங்கையில் வரலாற்று ரீதியாக அரசை நடாத்தியவர்கள் சிங்களவர்கள் மட்டுமே. இங்கு வாழும் தமிழ், முஸ்லீம் மக்கள் " இனக் குழுக்களாகவே " கருதப்படக் கூடியவர்கள். ஏனெனில், அவர்களுக்கு வரலாற்று ரீதியாக அரசு இல்லை. எனினும் அவர்களது இருப்புப் பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை.

எனினும், தமிழ், முஸ்லீம் மக்கள் முன்பு இருந்தே, இந் நாடு முழுவதும் அவர்களுக்கு உரித்துடையது என்று கருதுவதே பிரச்சினையாகும். இவர்கள், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெற்றுக் கொண்ட நலன்களின் காரணமாகவே இவ்வாறு எண்ணத் தலைப்பட்டுள்ளனர். 1910இல் கல்வி கற்ற, செல்வந்தர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. இவர்களில் 42% இனர் தமிழர்களாவர். அச்சூழலில் தமிழர்களின் சனத்தொகை 11% மாக இருந்தது. அதாவது, எண்ணிக்கையை விட அதிகமான அதிகாரம் அவர்களுக்குக் கிடைத்திருந்தது. இந்த மேலாதிக்கத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளுதலே அவர்கள் தேவையாக இருந்தது. இதற்குத் தடை ஏற்பட்டதும் தமிழர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென விபரிக்கப்பட்டது. இது முதலாளிகளினால் ஏற்படுத்தப்பட்ட கருத்து ஆகும்.

இலங்கையில் தமது கலாசார அடையாளத்தைப் பேணிக் கொண்டு பிரஜைகளுக்கு உரிய உரிமைகளை அனுபவிக்கத் தமிழ், முஸ்லீம் மக்களுக்குத் தடை இல்லை. எனினும், இந்தநாடு தமக்கு உரியது என்ற அடிப்படையில் யுத்த அரசியலிலோ கருத்தியலிலோ ஈடுபடுவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை.

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை பற்றி உங்களது கட்சியின் அபிப்பிராயம் என்ன ?**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நாம் எதிர்க்கின்றோம். இது ஒரு ஜனநாயக முறை என ஏற்றுக்கொள்ளப்பட இயலாதது. எனினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தான் இந் நாட்டில் காணப்படும் நெருக்கடிக்கான பிரதான காரணம் எனவும் ஏற்றுக்கொள்ள இயலாது.


**தற்போது துரிதமாகப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரப்படத் தயாராக உள்ள யாப்புச் சீர்திருத்த யோசனைகள் பற்றி உங்களது கருத்து என்ன ?**

இந்த யோசனையின் அடிப்படையாக ஒரு தத்துவம் காணப்படுகின்றது. அதாவது, புலிகள் எது செய்தாலும், செய்யாவிட்டாலும், தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு. அதேபோல், அரசியல் ரீதியாகத் தமக்கு என அபிலாஷைகள் உண்டு. இதனால் இவ்விடயம் பூர்த்தியானதும் தமிழ் மக்கள் புலிகளிடம் இருந்து விடுபடுவர் எனும் தர்க்கம் உண்டு. இது ஒரு பொய்யான விபரிப்பு. இங்கு இவ்வாறான பிரச்சினை பற்றியோ, அரசியல் அபிலாஷைகள் பற்றியோ பிரச்சினையில்லை. புலிகளைத் தவிர்த்த தமக்கென ஒரு அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செயற்படும் தமிழ் ஜனநாயக அரசியல் இன்று நம் நாட்டில் இல்லை.

1981இல் மாவட்ட அபிவிருத்தி சபைகளினால் தமிழ்ப் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வு கிடைத்ததெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொண்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் 36 பேர் மட்டுமே இப் பிரச்சினையின் காரணமாகக் கொல்லப்பட்டிருந்தனர். இதனால் பிரச்சினை தீர்ந்து விடவில்லை. மீண்டும் மாகாண சபைகள் வழங்கப்பட்டதும், இரு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டதும், தற்போது சமஷ்டி முறையை ஏற்படுத்தக் கலந்துரையாடப்படுவதும் மேற்கூறப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே எனலாம். இவற்றினால் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது. காரணம், இவ்வாறான தீர்வை ஏற்றுக்கொள்ள ஜனநாயகச் சமூகம் ஒன்று இல்லை. புலிகள் மட்டுமே உள்ளனர். அவர்களது நோக்கம் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றுதலே எனலாம். இதன்படி வரலாற்றில் இப் பிரச்சினைக்கு மேற்கூறப்பட்டவாறான தீர்வு இல்லை என்பதையே காணக்கூடியதாக உள்ளது.

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்களில் உங்களது கட்சி போட்டியிடுகின்றதா? தேர்தலுக்கு முன்னர் சிற்சில மாற்றங்களைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டுமென நீங்கள் எண்ணவில்லையா ?**

தேர்தலில் போட்டியிடுகின்றோம். தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் இடம்பெறுமா என்பது சந்தேகமே. புலிகள் இயக்கமும், வெளிநாட்டுச் சக்திகளும் செயற்படும் விதத்திலேயே தேர்தல் பற்றித் தீர்மானிக்கப்படும்.



**இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தேர்தல் பிற்போடப்பட்டால் ?**

இதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தேர்தல் நடைபெற வேண்டும். எனினும், அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடியைத் தீர்க்க நேர்மையான முயற்சிகளை எடுக்கத் தயாராகுவார்களாயின் நாம் ஆதரவளிக்கத் தயாராக உள்ளோம்.

**சிங்கள மக்களை அடிப்படையாகக் கொண்ட கட்சியாகத் தேர்தலுக்கு முகங்கொடுக்கும் போது உங்களுக்குக் கிடைக்கும் அதிகாரம் பற்றி எவ்வாறான மதிப்பீடுகளைக் கொண்டிருக்கின்றீர்கள்?**

உண்மையில், தற்போது இவ்விடயம் பற்றி எதிர்வு கூற இயலாது. எனினும், பொ. ஐ. முவுக்கும், ஐ. தே. கவுக்கும் சவால்விடக் கூடிய கட்சியாக எமது கட்சியை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவரை பலமான சவாலை வழங்கக்கூடிய கட்சியாக ஜே. வி. பி. ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், கடந்த காலங்களில் பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட இடங்களில், எமது சிங்களச் செயற்திட்டம் முன்னணிக்கு வந்தவுடன் ஜே. வி. பி. வரலாற்று ரீதியாகப் பின்னடைவு கண்டுள்ளது என்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சூழ்நிலை எமக்குச் சார்பானதாக இருக்கும். இதனால், எதிர்வரும் 06 வருடங்களில் பிரதான கட்சிகள் இரண்டையும் வீழ்ச்சியுறச் செய்துவிட்டு அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள எம்மால் இயலும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள முடியும்.

**தற்போதுள்ள தேர்தல் முறை மிகவும் ஊழல் வாய்ந்ததும், பலாத்காரம் கொண்ட நிலைமையிலும் உள்ளது. தேர்தலில் போட்டியிடும் கட்சி என்ற வகையில் இந்த நிலைமைக்கு எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறீர்கள்?**

இது உண்மையான கருத்து ஆகும். இந்தத் தேர்தல் முறை திறமைக்குப் பதில் பணம், அதிகாரம், துஷ்பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த நிலைமை மாறி ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுதல் வேண்டும். தேர்தல் துஷ்பிரயோகங்கள் மட்டுமன்றி அதிகாரத்தில் இருந்த கட்சிகள் பற்றி விரிவாக ஆராய்ந்தால், இந்நாட்டை இரண்டு மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான் ஆட்சி புரிந்துள்ளார்கள் என்பது விளங்கும். இவர்களின் வரலாற்றை நோக்கினால் வெளிநாட்டவர்களுக்கு நாட்டை தாரைவார்க்க ஆதரவளிக்கும் ஒரே தகைமையின்படி இவ்விடத்திற்கு வந்தவர்களே இவர்கள். நாம் இந்தக் கட்டமைப்பை தகர்க்க எண்ணியுள்ளோம். திறமையை அடிப்படையாகக் கொண்ட நபர்கள் போட்டியில் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

**ஜனநாயகம் பற்றிப் பேசும் பெரும்பாலான கட்சிகளிடம் ஜனநாயகம் இல்லை. உங்களது கட்சியும் அவ்வாறானதா?**

பிற கட்சிகளை போன்றதல்ல எமது கட்சி. எமது மத்தியக் குழுவை எடுத்துக் கொண்டால், தமது குடும்ப அதிகாரம், பதவி, பண அதிகாரங்களை காட்ட இயலாதவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். (நான் உட்பட) இளைஞர்கள், பிக்குகள் எம்முடன் இணைந்துள்ளனர். ஜே.வி.பி. உள்ளிட்ட இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் கட்சிகளில் கூட திறமையை அடிப்படையாகக் கொண்ட இவ்வாறான பிரதிநிதித்துவத்தையோ ஜனநாயகத்தையோ காணக்கிடைக்காது.

**கட்சி பற்றிய விமர்சனத்திற்கு இடம் உண்டா?**

முழுமையாக உண்டு.

**வெளிப்புற விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளத் தயாரா?**

ஆம். ஆனால், மனிதாபிமானத்தின் மற்றும் ஜனநாயகத்தின் வரையறைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், வெளியீட்டு சுதந்திரம், அமைப்பாகும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் குறித்து கட்சிகொண்டுள்ள நிலைப்பாடு என்ன?**

இவை அனைத்தையும் ஏற்றுக்கொள்கின்றோம், எனினும், இந்தப் போர்வையில் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட இடமளிக்கப்பட முடியாது.

**இலங்கையில் சிங்கள அடையாளம் தொடர்பாக பேசும் போக்குகள் பல இருந்துள்ளன. எனினும் இப்பிரதான போக்குகள் உங்களது கட்சியினால் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லையென விமர்சனம் செய்யப்படுகின்றது. மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சங்க சபை, சிந்தன பர்ஷய போன்ற அமைப்புகள் இவ்விடத்தில் சம்பந்தப்படாததன் காரணம் என்ன?**

தேசிய சங்க சபை ஒரு அரசியல் கட்சியல்ல. இது பிக்குகளின் அமைப்பாகும். நாம் ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க போன்று பிக்குகளினால் மேடையை அலங்கரிக்க முயற்சிக்கவில்லை. ஆனால், நவீன சிங்கள இனமொன்றை கட்டியெழுப்பும் திட்டத்தில் பிக்குகள் பங்கு பற்ற வேண்டும் என எண்ணுகின்றோம்.

இந்நோக்கத்துடன் கூடிய கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்க செயல்களை தேசிய சங்க சபையிலோ வேறு அமைப்புகளிலோ ஆற்றிய பிக்குகளில் பெரும்பாலானோர் எதிர்க்காலத்தில் எமது கட்சியில் இருப்பர்.

சிந்தன பர்ஷய என்று அமைப்பு எதுவும் இல்லை. ஒரு நபர் பத்திரிகையில் ஆக்கங்களை வரைந்தவுடன் அது அமைப்பாகி விடாது. மக்கள் ஐக்கிய முன்னணி இன்று அரசாங்கத்திற்கு எதிராக பேசும் வாய்ப்பை இழந்து விட்டது. இவர்கள் எல்லாம் இல்லாததினால் சிங்கள தேசிய இயக்கத்திற்கு தீமைகள் எதுவும் ஏற்பட்டுவிடாது. இவர்கள் வரலாற்றினால் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பவாதிகள் மட்டுமே.

கடந்த 4 வருட காலத்தில் தேசிய சங்க சபை, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம், சிங்கள வீரவிதான போன்ற தேசிய அமைப்புகள் ஒன்றிணைந்து அமைப்பு ரீதியில் ஆர்ப்பாட்டத் தளத்தில் - கருத்தியல் தளத்தில் பாரிய வேலைத்திட்டத்தை இந்நாட்டில் மேற்கொண்டது. இச் செயற்பாடுகளில் இணைந்திருந்த அனைவரும் சிஹல உறுமய கட்சியில் உள்ளனர்.

**சிங்கள உரிமைகள் பற்றிய கருத்தியல்களை கட்டியெழுப்ப நளின் டி சில்வா போன்றவர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்பு குறித்து உங்களுக்கு மதிப்பீடுகள் இல்லையா...?**

அறிவின் அடிப்படையிலான முயற்சியினால் பிரபாகரனை முறியடிக்க முடியாது. நாமும் ஒரு காலத்தில் அவ்விதம் தான் எண்ணிக்கொண்டிருந்தோம் இன்று தர்க்க அறிவின் அடிப்படையில் அல்ல. உடல் பலத்தின் அடிப்படையிலேயே தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படுகின்றது. நாம் முக்கியத்துவம் கொடுக்கும் விஞ்ஞானத்தில் கூட சித்தாந்தங்கள் தர்க்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படவில்லை. பலத்தின் மூலமே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சித்தாந்த உலக நிலைமை அவ்வாறெனின் நாம் கலந்துரையாடும் சமூகத்தின் நிலைமை முற்றிலும் வேறுபடுவது எங்ஙனம்? சனத் ஜயசூரிய, அர்ஜுன ரணதுங்க போன்றவர்கள் உயர் நிலைமைக்கு [illegible] தர்க்க அறிவின் அடிப்படையிலா? இவர்கள் நாம் நவீன சமூகத்தின் பிரதிமைகள். பிரபாகரனை எடுத்துக் கொண்டால், இவ்வாறு பாரிய செயல்களை மேற்கொண்டது அவர் தர்க்க அறிவின் உதவியுடனா?

எமது தேசிய இயக்க[illegible] சிரசுடன் சிறிய உடல் அமைப்பு[illegible] வந்தது. சிரசின் சுமை தாங்க இயலாமல் உடல் நொருங்கி விழுந்தது. நாம் குவேனி இனம் பற்றிய வரலாற்று கதையை கூறிக்கொண்டிருக்க முயற்சிக்கவில்லை. மாறாக, புதிய இனமொன்றை இச்சூழலில் கட்டியெழுப்பவே முயற்சிக்கின்றோம்.

இதற்கு வீதியில் இறங்கி செயலாற்றக் கூடியவர்களை நாம் கட்டியெழுப்பினோம். 60களில் பல்கலைக்கழகம் சென்றவர்களினால் இவற்றைச் செய்ய முடியாது. அவர்களது வரலாற்றுக் கடமைகள் நிறைவெய்தி விட்டன. இதை அவர்கள் உணராததே பிரச்சினைக்குரியது.

**சிஹல உறுமய கட்சி தோற்றுவிக்கப்பட்டதும் தற்போது கிடைக்கும் தகவல்களின்படி யாழ்ப்பாணம் சிங்களப் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்டதும் ஒரே காலத்தில் இடம்பெற்றுள்ளது. யாழிலிருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டால் ஏற்படும் நிலைமையை உங்கள் கட்சி எவ்வாறு இனம் காண்கின்றது?**

சிஹல உறுமய ஸ்தாபிக்கப்பட்டு சில நாட்களே ஆகின்றன. ஆனால், பயங்கரவாதத்திற்கெதிரான இயக்கமாக 1998 காலப்பகுதி தொடக்கம் இந்நிலைமை குறித்து எச்சரிக்கை செய்து கொண்டிருந்தோம். புலிகள் இயக்கத்தின் அமைப்பு ரீதியான முயற்சிகளைத் தோற்கடிக்க யுத்த அரசியல் உபாயங்களை எதிர்வரும் காலங்களில் செயற்படுத்த வேண்டுமென நாம் தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தோம். இவற்றைச் செய்யாமல் சமாதான கீதம் பாடிக்கொண்டு படையினரை அதைரியப்படுத்திக் கொண்டு, இராணுவத்திற்குத் தேவையான வளங்களைக் கொடுக்காமல் புலிகள் இயக்கத்துக்கு படையினரும் தொடர்பூடகங்களும், அரசியல் கட்சிகளும், வர்த்தக உலகமும் ஊடுருவிச் செல்ல வாய்ப்பளித்துக் கொண்டு கடைப்பிடித்த செயல்முறையின் தர்க்கரீதியான விளைவு தான் இது. இதற்கான பொறுப்புகளை இறுதி விளைவுகளை முழுமையாக சந்திரிகா - ரணில் - ரத்வத்தை ஆகியோர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று இராணுவ நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட வேண்டியவர்கள் இராணுவத் தலைவர்கள் மட்டுமன்றி இவர்கள் மூவரும் தான். இவர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.

இச்செயற்பாடு இத்துடன் நிறைவடையப் போவதில்லை. ஏனெனில் ஆனையிறவிலிருந்து மட்டும் 10 ஆயிரம் படையினரை பராமரிக்க தேவையான ஆயுதங்களை புலிகளை பெற்று விட்டனர். யாழ்ப்பாணம் மீண்டும் போர்க்களமாக மாறாத சூழ்நிலையில் புலிகளின் பயிற்றப்பட்ட வீரர்கள் கிழக்கில் கட்டவிழ்த்து விடப்படுவர். அவர்களது அடுத்த இலக்கு திருகோணமலை. அடுத்த வாரத்திற்குள் அவர்கள் கிழக்கில் மணலாறு, வெலிக்கந்தை, கந்தளாய், பதவிய ஆகிய பிரதேசங்களில் உள்ள இரண்டறை லட்சம் சிங்கள மக்களை விரட்டியடிப்பர். அப்பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களை கைப்பற்றுவர். தேவைப்பட்டால், அவர்கள் கொழும்பையும் தற்காலிகமாக கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்பார்கள். இன்று அவ்வாறான நிலைமை ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது.

இவ்வாறான நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய தயாரிப்பு நிலை இன்று நாட்டில் இல்லை. இந்த நாட்டை யுத்தம் செய்யக்கூடிய தலைமைத்துவத்திற்கு வழங்கி விட்டு விலகிக் கொள்ளுமாறு சந்திரிகா - ரணில் - ரத்வத்தைக்கு கூற விரும்புகிறோம். தேவையெனில் இத்தலைமைத்துவத்தை ஏற்க நாம் தயாரக உள்ளோம்.

**நாம் வேறு முறையில் யோசித்துப் பார்த்தால்,**

→12

நன்றி - நூலகத்திட்டம்



இறுதிப்பகுதி

எல் சால்வடார்

# அரசு சாரா நிறுவனங்களும் சமூக அரசியல் இயக்கங்களும்

அரசு சாரா நிறுவனங்களில் பெரும்பாலானவற்றின் செயல்பாடு பற்றியும், அவற்றின் அரசியல் பற்றியும் லத்தீன் அமெரிக்கா முழுவதிலுமுள்ள தீவிரவாத விவசாயிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்கள். முக்கியமாக, பொதுமக்களுக்கு அதிகாரம் ஏற்படுத்துதல்" பங்கேற்றல் போன்ற குழையடித்து காரியம் சாதிக்கும் உத்திக்குப் பின்னால் உள்ள அடக்கியாளுகிற, அதிகாரம் செலுத்துகிற தன்மையை கடுமையாக விமர்சித்திக்கிறார்கள். சமீபத்தில் ஜனநாயக விவசாயிகள் கூட்டணிக்காக (ADC) (இது 26 விவசாய மற்றும் நிலமற்ற தொழிலாளர்களின் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது) நான் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் இதை நேரடியாகச் சந்தித்தேன்.

விவசாயிகள் இயக்கும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றிற்கான நிதியை வழங்கக்கூடிய திட்டத்தை இணைந்து உருவாக்குவது எங்கள் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இருந்தது. ADCயின் தலைவர்களுடன் நாங்கள் கனேடிய தனியார் நிறுவனமாகிய Crscognaவைச் சென்று பார்த்த போது (இது கனேடிய அரசின் வெளிநாட்டு ஏஜன்சியான CIDA வின் கீழ் சப்காண்ட்ராக்ட் செய்யப்பட்டது.) இவை 25 மில்லியன் கனேடிய டொலர்களை எல்சால்வடாருக்கு உதவி நிதியாக வழங்கின. எங்கள் வருகைக்கு முன்பு CRLSOGEMAவின் சல்வடோரிய நண்பர் ஒருவர், அவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அவர் இந்தத் திட்டத்தையும், விவசாயிகளின் அடிப்படையிலான பங்கேற்புமுறை ஆராய்ச்சிக்கு இது எவ்வளவு முக்கியம் என்றும் விளக்கினார். CRLSOGEMA பிரதிநிதி தொடர்ந்து ஒரு மனித உருவத்தை தாளின் மேல் வரைந்தார். தலையைச் சுட்டிக்காட்டி ''இதுதான் அரசு சாரா நிறுவனங்கள். அவை தான் யோசித்து, எழுதித் திட்டங்களைத் தயாரிக்கின்றன" என்றார். பிறகு கை, கால்களைச் சுட்டிக் காட்டி "இது விவசாயிகள் அவர்கள் புள்ளிவிபரங்களை அளித்து திட்டங்களை அமுலாக்குகிறார்கள். இந்தக் கண்திறப்பு நிகழ்ச்சியே CRLSOGEMAவின் தலைவரை நாங்கள் முறைப்படி சென்று சந்திப்பதற்கான பின்புலமாக அமைந்தது. ஏற்கெனவே சல்வடோரின் அரசு சாரா நிறுவனங்கள் ஒன்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டுவிட்டதாக அதன் இயக்குனர் தெரிவித்தார். (FUNDE -The National Foundation for Developement) என்கிற மேல்நோக்கி முன்னேறிச்செல்லக்கூடிய நிபுணர்களைக் கொண்ட குழுவினர் ஒரு ஆலோசனை நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். விவசாயிகளைப் பார்த்து, இந்தத் திட்டம் "அதிகாரம் ஏற்படுத்துவற்காக" இருப்பதால் விவசாயிகள் ஒத்துழைப்புத் தந்து ஈடுபாடும் காண்பிக்க வேண்டும் என்று அவர்களை ஊக்குவித்தார். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே CRLSOGEMA வின் சல்வடோர்காரர், அரசு சாரா நிறுவனங்களுக்கும் (தலை) விவசாயிகளுக்கும் இடையிலான (கை, கால்கள்) உறவை கேவலமாகச் சித்திரித்தவர், FUNDE வுக்கும் SOGMAவுக்கும் இடையிலான "தொடர்பாளர்" என்பது தெரிய வந்தது. FUNDE தொழிநுட்ப ரீதியில் சிறந்து விளங்குகிறதென்றும், ஆனால் அதன் "பாடங்களும்" ஆராய்ச்சியும், விவசாயிகளின் தேவைகளுக்கு உகந்ததாக இல்லை என்றும், அவை விவசாயிகளை அடக்கியாளும் நோக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் ADC தலைவர்கள் பதிலளித்தார்கள். கனேடிய இயக்குனர் ஒரு உதாரணம் சொல்லும்படி கேட்ட போது. இந்த "அரசியல் வரைபடத்தை"யும் அது விவசாயிகளுக்களித்த பங்கையும் ADC தலைவர்கள் விளக்கினார்கள்.

> **எங்கெல்லாம் அரசு சாரா நிறுவனங்கள் ஆழமாக கால்ஊன்றினவோ அங்கெல்லாம் முற்போக்கான சமூக இயக்கங்கள் மடிந்து போயின!**


"இது ஒரு மிகத்துரதிருஸ்டமான நிகழ்ச்சி" என்றார் SOGMA இயக்குனர் இருந்தும், SOGMAவுடன் இணைந்து செயல்படுவதில் அவர்கள் அர்ப்பணிப்புடன் இருந்தார்கள். ADC இதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்க வேண்டுமென்று கருதி தொடர்ந்து FUNDE கூட்டங்களுக்கு வருமாறு சொன்னார். நடுத்தரவர்க்க தொழில் நிபுணர்கள் திட்டத்தின் வடிவத்தையும், இலக்குகளையும் பிரஸ்தாபித்தாலும், உண்மையில் அவை விவசாயிகளை வெறும் புள்ளிவிபரங்களை வழங்கி "கருத்தரங்கு"களுக்கு வருகை தந்து திட்டத்துடன் ஒத்துழைக்க மட்டுமே விவசாயிகளை அழைப்பதாக ADC தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். கோபமடைந்த இயக்குனர் கூட்டம் முடிவுக்கு வந்ததென அறிவித்தார். விவசாயத் தலைவர்கள் கொதிப்படைந்தார்கள். "கனேடிய நிறுவனம் விவசாயிகளின் பங்கேற்பை ஜனநாயகத்தை இன்னும் ஏதேதோ குப்பையையெல்லாம் விரும்புவதாக எங்களை நம்ப வைத்தது ஏன்? அவர்கள் தான் ஏற்கெனவே ஒரே ஒரு விவ்சாயியைக் கூட பிரதிநிதித்துவப்படுத்தாத அரசு சாரா நிறுவனங்களுடன் தங்களைப் பிணைத்துக் கொண்டு விட்டார்களே? இந்த அறிக்கை எந்த ஒரு விவசாயியாலும் படிக்கப்பட மாட்டாது. எந்த வகையிலும் அது எங்கள் நிலத்தை மீட்கும் போராட்டத்துக்கு ஒத்து வராது. நிச்சயமாக "நவீன மயமாக்கல்" என்ற பெயரில் விவசாயிகளிடமிருந்து அவர்களது நிலத்தைப் பறித்து அவற்றை வணிக நோக்கிலான பண்ணைகளாக அல்லது சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதைத் தான் அறிக்கை சொல்லும்"

> “பத்து வருட கால அரசு சாரா நிறுவனங்களின் நடவழிக்கைகளின் பிறகு, பெண்கள், குடியிருப்புகள், இளைஞர்கள் அமைப்புகள் இங்கெல்லாம் உள்ள சமூக வாழ்வை முழு முற்றாக 'அரசியல் பிரக்ஞையற்றதாக' 'முற்போக்கு சிந்தனையற்றதாக' மாற்றி விடுகின்றனர் அவற்றின் தொழில் நிபுணர்கள். மக்களை வெளிநாட்டு புரவலர்களின் கையை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளி விடுகின்றனஅவை.”

## முடிவுரை

அரசு சாரா நிறுவனங்களின் நிர்வாகிகள் திட்டங்கள் தீட்டுவதில் கைதேர்ந்து விட்டார்கள். "அடையாளம்", "உலகமயமாக்கம்" என்ற புதிய உத்திகளை அவர்கள் பொதுமக்களின் இயக்கங்களுக்குள் நுழைக்கின்றார்கள். அவர்களது நடவடிக்கைகளும், எழுத்துக்களும் சர்வதேச ஒத்துழைப்பு, சுய - உதவி, தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவித்து நவதாராளவாதிகளுடன் கொள்கை ரீதியான பிணைப்பை ஏற்படுத்துகின்றன. அதே சமயம் மக்களை வெளிநாட்டு புரவலர்களின் கையை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளுகின்றன. பத்து வருட கால அரசு சாரா நிறுவனங்களின் நடவடிக்கைகளின் பிறகு, பெண்கள், குடியிருப்புகள், இளைஞர்கள் அமைப்புகள் இங்கெல்லாம் உள்ள சமூக வாழ்வை முழு முற்றாக "அரசியல் பிரக்ஞையற்றதாக" ''முற்போக்கு சிந்தனையற்றதாக" மாற்றி விடுகின்றனர் இந்தத் தொழில் நிபுணர்கள். பெருவிலும், சிலியிலும் எங்கெல்லாம் அரசு சாரா நிறுவனங்கள் ஆழமாக கால் ஊன்றினவோ அங்கெல்லாம் முற்போக்கான சமூக இயக்கங்கள் மடிந்து போயின.

நேரடியாகப் பாதிக்கும் விஷயங்கள், உள்ளூர் போராட்டங்கள் தான் தோன்றி வளருகிற இயக்கங்களுக்கான ஆதாரம். அரசு சாரா நிறுவனங்கள் "உள்ளூர்" என்பதை வலியுறுத்துவது உண்மை தான். ஆனால், "உள்ளூர்" நடவடிக்கைகள் எந்தத் திசையில் போகின்றன என்பது தான் முக்கியம். அவை சமூக அமைப்பிலுள்ள பிற முக்கிய விவகாரங்களைப் பற்றிய விவாதங்களை எழுப்புமா, பிற உள்ளூர் சக்திகளுடன் இணைந்து அரசையும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களையும் எதிர்க்குமா - அல்லது உள்வயமாகத் திரும்பி வெளிநாட்டு புரவலர்களை எதிர்பார்த்து கிடக்கும் சிறு சிறு பகுதிகளாகப் பிரியுமா என்பது தான் கேள்வி. அரசு சாரா நிறுவனங்களின் கொள்கை இரண்டாவதைத் தான் ஊக்குவிக்கிறது.



அரசு சாரா நிறுவன அறிவுஜீவிகள் அடிக்கடி "ஒத்துழைப்பை"ப் பற்றி எழுதுகிறார்கள். அதில் நவதாராள அரசுகளின் வெளிநாட்டு புரவலர்களின் நிதியைப் பெற தரவேண்டிய விலை பற்றியோ, கட்டுப்பாடுகள் பற்றியோ விவரிக்கப்படுவதில்லை.

தரகர்களாவும், தூதர்களாகவும் செயல்படுகிற வெளிநாடுகளில் பணத்தைத் தாராளமாகப் புழங்கவிட்டு, புரவலர்களுக்கும் உள்ளூரில் அதை வாங்குபவர்க்கும் ஒத்துவரக்கூடிய திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கி வரும் இந்த "அடிப்படை தொழில் முனைவோர்"களது அரசியல் "லேபர் காண்ட்ராக்டர்கள்"களின் அரசியலை ஒத்தது. லேபர் காண்ட்ராக்டுகளை மறந்திருக்க முடியாது. (Enganchadores) இவை பெண்களைப் "பயிற்றுவிப்பதாகச்" சொல்லி ஒன்று சேர்த்து பெரிய உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்திப் பொருட்களை விற்கும் சிறு நிறுவனங்களை ஏற்படுத்தி குறைந்த கூலியில் உழைக்கச் செய்த் விவகாரம் நடந்து வெகுகாலம் ஆகிவிடவில்லை. அரசு சாரா நிறுவனங்களின் இந்தப் புதிய அரசியலும் Compradore இன் அரசியலும் ஒன்று தான். இவை தேசிய உற்பத்தி எதையும் செய்வதில்லை. மாறாக, வெளிநாட்டு புரவலர்களை உள்ளூர் உழைக்கும் மக்களுடன் இணைக்கின்றன (சுய - உதவி சிறு தொழில்கள்). நவதாராள அரசு தொடர்ச்சியாக நீடிக்கிறது. இந்த அரசு சாரா நிறுவனங்களின் நிர்வாகிகள் உண்மையில் "அரசியல்" நடிகர்கள் தான். அவர்களது திட்டங்களும் பயிற்சியும் தொழிலாளர்/ விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கம் கொண்டவை அல்ல. ஆனால், வர்க்கப் போராட்டத்திலிருந்து மக்களைத் திசைதிருப்பி தம்மை ஒடுக்குபவர்களுக்கே ஒத்துழைப்பு தருமளவு அவர்களுக்கிடையே பாதிப்பினை உண்டாக்குகின்றன.

இந்தக் கண்ணோட்டத்தை நியாயப்படுத்த அரசு சாரா நிறுவனங்களின் கொள்கைகள் அடிக்கடி "நடைமுறை சாத்தியம்" அல்லது "யதார்த்தம்" இவற்றைத் துணைக்கழைப்பதுண்டு. இதற்காக புரட்சிகர இடதுசாரிகளின் வீழ்ச்சி, முதலாளித்துவம் கிழக்கில் பெற்றுள்ள வெற்றி "மார்க்ஸியத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி", போதிய மாற்றுகள் இல்லாமல் போய் விட்ட நிலை, அமெரிக்காவின் வலிமை, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு அல்லது ஒடுக்குமுறை ஆகியவற்றை சாக்காக முன்வைக்கின்றன. இந்த "சாத்தியப்பாடு" இடதுசாரிகளை உலக வங்கி திணிக்கும் தாராளச் சந்தை அமைப்பியல் சீரமைப்பு போன்ற கட்டாய நிலைமைகளில் இணைந்து செயல்பட ஒப்புக் கொள்ள வைப்பதற்காக உபயோகிக்கப்படுகிறது. இராணுவம் திணிக்கும் தேர்தல் வரைமுறைகளுக்குள் அரசியலை அடக்கிவிட முனைகிறது.

அரசு சாரா நிறுவனங்களின் கொள்கையின் இந்தச் "சாத்தியப்பாடு" ஒரு பக்கச் சார்புடையது. அவை நவதாராள தேர்தல் வெற்றிகளை மட்டுமே எடுத்துரைக்குமே தவிர, தேர்தலுக்குப் பின்னான பொது மக்கள் எதிர்ப்புகளை, பெருமளவு மக்களை பாராளுமன்றத்துக்கு வெளியிலான திட்ட நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் பொது வேலை நிறுத்தங்கள் பற்றி கண்டு கொள்வதில்லை. எண்பதுகளின் கடைசியில் நிகழ்ந்த கம்யூனிஸ வீழ்ச்சியைப் பார்க்கும் இவை, தொண்ணூறுகளின் மத்தியில் முற்போக்கு சமூக இயக்கங்கள் மீண்டும் எழுவதைப் பார்க்க மறுக்கின்றன. தேர்தல் அரசியல்வாதிகளின் மேல் இராணுவம் விதிக்கும் கட்டுப்பாடுகளை விளக்கும் இவை ஜபாடிஸ்டா கெரில்லாக்களால் காரகாஸின் நகர்ப்புற எழுச்சிகளால் பொலிவியாவின் பொது வேலை நிறுத்தங்களால் இராணுவத்திற்கு ஏற்பட்டிருக்கும் சவால்களைக் கவனிக்க மறுக்கின்றன. சுருங்கச் சொன்னால், பகுதி அளவில் அல்லது உள்ளூர் அளவில் இராணுவத்தின் தேர்தல் வரையறைக்குள் தோன்றி வளரும் பேராட்டங்களின் ஆற்றலை, மக்களின் அடிப்படைத் தேவைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றத் தவறும் போது அவை இந்த கட்டுப்பாடுகளுக்கு மேலேயும் வெளியேயும் இப்போராட்டங்கள் வளருவதை அலட்சியம் செய்கிறார்கள்.

அரசு சாரா நிறுவனங்களின் நடைமுறை நவதாராளவாதிகளின் தீவிரவாதத்துக்கு பொருத்தமானது. 1990களில் நவதாராளவாத கொள்கைகளில் ஒரு முற்போக்குத் தன்மை உருவானது. இது மேலும் அதிகமான முதலீட்டினை வழங்கி வெளிநாட்டு வங்கிகளையும் பன்னாட்டு நிறுவனங்களையும் கொழுக்க வைத்து, நெருக்கடியை வளரவிடாமல் ஒடுக்கும் நோக்கம் கொண்டது. உதாரணமாக பிரேஸில், ஆர்ஜென்டினா, மெக்ஸிகோ, வெனிசூலா - இந்த நாடுகளில் பெட்ரோலியத் தொழிலுக்குக் குறைந்த ஊதியமும் குறைவான சமூகப் பாதுகாப்புத் தொகையும் அளித்தல், அதிக வரிவிலக்கு அளித்தல், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை முற்றிலுமாக விலக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. இன்றைய லத்தீன் அமெரிக்க வர்க்கக் கட்டமைப்பு மிகவும் இறுக்கமானது. அரசுகள் முன்னைக் காட்டிலும் அதிகமாக ஆளும் வர்க்கங்களுடன் நேரடிப் பிணைப்புள்ளவை. இதில் முரண் என்னவென்றால், இந்த நவதாராளவாதிகள் உருவாக்கும் பிரிவுபட்ட வர்க்க அமைப்பு, அரசு சாரா நிறுவனங்கள் கண்ணோட்டத்தில் இருப்பதை விட மார்க்ஸியக் கண்ணோட்டச் சமூகத்துடன் தான் அதிக ஒற்றுமை உடையதாக இருக்கிறது.

அதனால் தான் அரசு சாரா நிறுவனங்கள் மார்க்ஸியத்திற்கு ஒரு மாற்றாக அமைந்து விடுகின்றன. லத்தீன் அமெரிக்காவில் உள்ள மார்க்ஸிய அறிஞர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூக இயக்கங்களுக்காக ஒரே மாதிரியான அரசியல் பின் விளைவுகளை எதிர்நோக்கி எழுதியும் பேசியும் வருகிறார்கள். இவர்கள் அடிப்படையில் இயக்கத்தின் ஒரு அங்கமாக செயல்படும் அறிஞர்கள். வர்க்கப் போராட்டத்துக்குத் தேவையான ஆராய்ச்சியையும் அறிவையும் வழங்கும் அறிஞர்கள், நிறுவனங்கள், கல்வித்துறை சார்ந்த கருத்தரங்குகள், வெளிநாட்டு நிறுவனங்கள், சர்வதேச மாநாடுகள், அதிகாரிகளின் அறிக்கைகள் ஆகியவற்றில் முழுகிப் போயிருக்கும் "Post Marxist" அரசு சாரா நிறுவனங்கள் அறிவுஜீவிகளுக்கு எதிரிடையானவர்கள். உள்ளூர் போராட்டங்களின் முக்கியத்துவத்தை நன்கறிந்தவர்கள் . இந்தப் போராட்டங்களின் வெற்றி தேசிய அளவில் அரசதிகாரத்தின் மீது வர்க்கங்களுக்கிடையிலான சண்டைகளின் விளைவு என்னவாக இருக்கின்றதோ அதைப் பொறுத்தது என்றும் இந்த மார்க்ஸிய அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிடுவது நவதாராளமயத்துடன் ஒத்துழைப்பதும், வெளிநாட்டு நிதியின் படிமுறை ஒருமைப்பாடும் அல்ல. மாறாக, வர்க்க ஒருமைப்பாடும் வெளிநாட்டு - உள்நாட்டு ஒடுக்குபவர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட குழுக்கள் (பெண்கள், கறுப்பர்கள்) தங்களுக்குள் ஒருமைப்பாடு கொள்வதும் தான். அவர்கள் கவனம் செலுத்துவது வர்க்கங்களைத் துண்டாடுகிற கொடைகளின் மீது அல்ல. பொது நடவடிக்கைகளின் மூலம் சிறு குழுக்களை குறைந்த காலத்துக்கு அமைதிப்படுத்துகிற நடவடிக்கைகளின் மூலம் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது பொதுவான பொருளாதார நிலைமையை எதிர்த்து கூட்டு முன்னேற்றத்துக்காக போராடுவதில் தான் இவர்களின் கவனம் இருக்கிறது.

மார்க்ஸிய விமர்சன அறிஞர்களின் வலிமை அவர்களது எண்ணங்கள் மாறிவரும் சமூக யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப அமைந்திருப்பது தான். வர்க்கங்கள் பிரிவுபடுவதும், வன்முறையான சண்டைகளும் அதிகரித்து வருவதும் கண்கூடு. எனவே தான் நிறுவன ரீதியில் பார்த்தால் எண்ணிக்கையில் குறைவுபட்டிருக்கும் மார்க்ஸிஸ்டுகள் மெக்ஸிக்கோவின் Zapatistas முதல் பிரேஸிலின் MST வரையான புதிய தலைமுறை புரட்சிகர போராளிகளுடன் இணையத் தொடங்கும் போது போர்த்திறனின் அடிப்படையில் வலிமை மிக்கவர்களாகி விடுகிறார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# IPKF வந்து போதும் சாமி போனது போதும் சாமி

## அவர்கள் அப்படியே தான் இருந்தார்கள்!

ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியை அடுத்து, யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு உணவு விநியோகம் செய்வது முதல் அவர்களைப் பாதுகாப்பாகத் தெற்கே கொண்டுவந்து சேர்ப்பது வரையான செயல்களை மனிதாபிமான அடிப்படையில் உதவியாகச் செய்து கொடுக்க இந்தியா வரவேண்டும் என்ற கோரிக்கை இலங்கைத் தரப்பில் விடுக்கப்பட்டது பற்றியும், இந்தியா அது தொடர்பாகத் தீவிரமாக ஆலோசித்து வருவது பற்றியும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

பலாலி முகாமில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கு இந்தியா உணவுப் பொட்டலங்களைப் போட்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்திருக்கின்றன. தணிக்கையும், இலங்கையில் போர்க் காலச் சூழல் நிலவுவதாகப் பிரகடனம் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதும் வாசகர்களுக்குப் பல செய்திகளைச் சொல்ல முடியாத நிலையில் தொடர்பூடகவியலாளர்களை முடக்கிவிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தியா , " இந்திய அமைதி காக்கும் படை " இலங்கைக்கு வந்து சென்று பத்து ஆண்டுகள் கழிந்துள்ள இன்றைய நிலையில் மீளவும் வருமா ? என்ற சந்தேகங்கள் பரவலாகக் கிளம்பியுள்ளன. இந்திய அரசியல் கட்சிகள், இந்திய இராணுவ அதிகாரிகள் மத்தியில் பலவிதமான வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இந்தியப் படை இங்கு இருந்த காலத்தில் பெற்ற கசப்பான அனுபவங்கள் மீண்டுமொருமுறை அதைச் செய்வதில் அவர்களிடையே தயக்கத்தை ஏற்படுத்துவதில் நியாயமிருக்கவே செய்கிறது.



ஜே. என். டிக்சிற்

1987இல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இலங்கைக்கு இந்தியப் படை வந்திறங்கிய அரசியல் சூழல், இன்றைய சூழலை விட மிகவும் வித்தியாசமானது. அன்றைய சூழலில் இந்தியா இறங்கும் முடிவை ஏறக்குறையத் தன்னிச்சையாக எடுத்தது என்றே சொல்ல வேண்டும். ஒருவகையில் யாழ். குடாநாட்டில் அத்துமீறி இந்திய விமானப் படை, பொட்டலங்களைப் போட்டதன் மூலமாக அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியப் படையைத் தான் அழைத்ததாகச் சொல்ல வைக்கப்பட்டார் என்றே சொல்ல வேண்டும். தென்னிலங்கையில் இந்தியாவுக்கு எதிரான உணர்வலைகள் பலமாக வளர்ந்திருந்தன. ஆளும் கட்சியில் கணிசமானோரும் எதிர்க்கட்சிகளும், இந்தியாவின் தலையீட்டை எதிர்த்தனர். ஆனால், இன்று தென்னிலங்கை இனவாத சக்திகளே இந்தியா வரவேண்டும் என்று கோருகின்றன. நோர்வேயை விட இந்தியா நம்பகமானது என்று அவை கூறுகின்றன. இலங்கை அரசாங்கமும் வருமாறு கோருகிறது. அன்று இந்தியாவின் அத்துமீறலை நியாயப்படுத்த காரணமாக இருந்தது- அது சர்வதேச சட்டத்திற்கு முரணானதாயினும் - பெருமளவுக்கு தமிழ் நாட்டிற்கு அகதிகள் போய் குவிந்ததும், அத்துலத் முதலியார் தலைமையில் நடந்த 'ஒப்பரேசன் லிபரேஷனின்' அழித்தொழிப்பு செயற்பாடும் ஆகும். இந்தியா இலங்கைக்குள் நுளைவேன் என்பதற்கான மிரட்டல் சமிக்ஞையாக உணவுப் பொட்டலங்களை போட்ட பின் தனது வருகையை சட்டபூர்வமாக்க வசதியாக இலங்கையுடன் ஒரு ஒப்பந்தத்தை - இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை - செய்து கொண்டது என்ற விமர்சனம் அப்போது பலராலும் முன்வைக்கப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. இன்றும் அகதிகள் தமிழ் நாட்டுக்கு போனலும் கூட, அன்று போல் பெருமளவில் போகவில்லை. தவிரவும், இன்று இலங்கை இராணுவம் பின் வாங்கிய நிலையில், தனது வளங்கல்களுக்காக தடுமாறும் நிலையில் நிற்கிறது. புலிகளின் கை அன்று முறிந்திருந்தது. இன்றோ அவர்கள் நிலை ஓங்கியிருக்கிறது.


இந்த நிலையில் கடந்த பத்தாண்டு கால அனுபவங்களுக்குப் பிறகு அன்று இலங்கையில் இந்தியா வந்திறங்கிய காலத்தில் முக்கிய பங்காற்றியவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்களை பரிசீலிப்பது காலப் பொருத்தம் மிக்க ஒரு விடயமாகும். அன்று இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த டிக்சிற், வந்திறங்கிய இந்தியப் படையின் முதலாவது தளபதியாகிய கரிகர் சிங், இந்தியப் படையை தொடர்ந்து இறுதிநாள் வரை வழிநடத்திய தளபதி கல்கட் ஆகியோர் இப்போது தெரிவிக்கும் கருத்துக்களை உற்று நோக்கினால் இந்தியாவின் 'இன்றைய வருகை குறித்த ஊகங்களை ஆராயும் வெளிச்சம் புலப்பட வாய்ப்புண்டு.

இந்திய அரசாங்கத்திடம், 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசாங்கத்தின் சர்வதேச செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியான சந்தேகங்கள் இருந்து வந்தன. தவிரவும், அதன் தமிழர்கட்கு எதிரான செயற்பாடுகளும், இந்தியா பற்றி அது கொண்டிருந்த தீவிர எதிர்ப்பு மனோபாவமும் இந்தியாவுக்கு இலங்கை குறித்து எரிச்சலும், அதை கட்டுபடுத்திவைக்க வேண்டும் என்ற கோபமும், நியாயப்படுத்தப்படக் கூடியளவுக்கு அதிகமாக இருந்தன. மலையகத்திலுள்ள பாதுகாப்பற்ற நிலையில் வாழும் மலையகத் தமிழர்களுக்காக தயக்கம் காட்டுகிறேன். இல்லாவிட்டால் இலங்கையை ஆக்கிரமிப்பதற்கு நான் உத்தரவிட்டிருப்பேன்' என்று இந்திரா காந்தி அமெரிக்காவில் வைத்து இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கூறுமளவுக்கு இந்தியாவின் பொறுமை எல்லை கடந்திருந்தது. இலங்கை இளைஞர்கட்கு ஆயுதப்பயிற்சி வழங்கும் தீர்மானத்தை எடுத்ததற்கும் கூட முக்கிய காரணம் இலங்கையின் இந்தியாவுக்கு விரோதமான 'அல்லது இந்திய நலன்களைப் பாதிக்கிற நடவடிக்கைகளென்றே சொல்ல வேண்டும். பலரும் நம்புவது போல தமிழ் மக்கள் மீதான தீவிர கரிசனை மட்டும் அதற்கு காரணம் அல்ல என்பதை இந்தியாவின் பின்னாளைய நடவடிக்கைகள் காட்டின.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான ஒரு தீர்வை திணிக்க இலங்கை அரசு முயன்று வந்ததை இந்தியா ஒருபோதும் ஆதரிக்கவில்லை. அத்தகைய ஒரு தீர்வு தவிர்க்க முடியாமல் தனிநாட்டுப் பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்பதை இந்தியா அறிந்திருந்ததுடன், அப்படி ஒரு பிளவு வருவதை அது ஏற்கவும் இல்லை. அதனால்தான் ஆரம்பத்தில் விஷேட தூதுவராக இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட பார்த்தசாரதியும் இலங்கை ஜனாதிபதியுமாக தயார் செய்த 'இணைப்பு C' என்று பரவலாக அழைக்கப்படும் தீர்வு அறிக்கையை தயார் செய்யும் நிலையையும் அது உருவாக்கியது. (ஆனால், ஜே.ஆர். இந்த அறிக்கையை சர்வகட்சி மாநாட்டின் பரிசீலனைக்கு வருடக்கணக்காக இழுபட விட்டுவிட்டு அமெரிக்கா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பிரிட்டன் என்று சுற்றித்திரிந்தார். ஆயுதங்கள் வந்து இறங்கின. இஸ்ரேலிலிருந்து ஆலோசகர்கள் வந்திறங்கினார்கள். தென்னாபிரிக்க நிபுணர்கள் உதவிக்கு வந்தனர். அமெரிக்க ஆயுதவியாபாரிகள் வந்தனர். பிரித்தானியாவிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து படை அதிகாரிகள் தருவிக்கப்பட்டனர். 'இணைப்பு C' யை அர்த்தமற்றதாக்கும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அல்லது இராணுவ ரீதியில் தன்னை தயார்படுத்துவதற்காகவே ஜே.ஆர். இந்த சர்வகட்சி மாநாட்டை - அதை சர்வகட்சி மாநாடு என்று சொல்ல முடியாது: உண்மையில் அனைத்து மதக் குழுக்கள் இனவாதக் குழுக்கள் எல்லோரும் கருத்துரைக்க அழைக்கப்பட்டனர்)- நடாத்தினார் என்று சொல்லலாம்.)

1985இல் தனிநாடு பிரிவதை இந்தியா ஏற்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துவதுபோல ராஜீவ் காந்தி - அப்போது அவர் பிரதமாராக இருந்தார். 'தமிழ் மக்கள் ஒரு தனிநாட்டையோ, சமஷ்டியையோ எதிர்பார்க்கக் கூடாது. இந்தியாவிலுள்ளது போன்ற ஒரு அமைப்பையே எதிர்பார்க்கலாம்' என்று தெரிவித்தார். பார்த்த சாரதிக்கு பின்வந்த விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரியின் ஒழுங்கில் நடந்த திம்பு பேச்சுவார்த்தையின் போதும் இலங்கையில் இனப்பிரச்சினையை பிரிவினை தவிர்ந்த விதத்தில் தீர்க்கவே இந்தியா விரும்பியது. அதேவேளை இதை இராணுவ ரீதியில் தீர்ப்பதை அனுமதிப்பது சாத்தியமில்லையென்றும் அது வலியுறுத்தியது. உண்மையில் இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் இருந்த விடயங்கள் இரண்டு. ஒன்று இலங்கையை ஒரு அரசியல் தீர்வுக்கு நிர்ப்பந்திப்பதும் அதை இராணுவ தீர்வுக்கு செல்ல விடாமல் கட்டுப்படுத்துவதும். இரண்டாவது இந்த செயற்பாட்டின் மூலமாக இலங்கையை இந்தியாவினை மீறி செயற்படாத ஒரு ஒத்துப்போகும் நாடாக வைத்திருப்பது.

இந்த அடிப்படையில் தான் இலங்கை தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடு இருந்து வந்தது.



ஏ. எஸ். கல்கட்

பத்து ஆண்டுகட்கு முதல் நிலவிய சர்வதேச நிலையும் கூட இந்தியா இந்த முடிவை எடுக்க காரணமாக இருந்தன. சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையுடன் கொண்டிருந்த உறவு இந்தியாவுக்கு இந்த விடயம் ஒன்றும் அதிக - அக்கறை காட்ட முடியாத விடயமாக இருக்கவில்லை. ஒப்பந்தத்தை எதிர்த்த இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா சீனப் படையினர் தமது விடுமுறைகளை இரண்டு வாரத்துக்கு ரத்துச் செய்வார்களானால் இலங்கையில் பயங்காரவாதப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்று கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் எழுதப்படுகையில் அது இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவரவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டபடி தமிழ் மக்களது நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரு தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவும் எழுதப்பட்ட ஒன்றாகவே பரவலாக தமிழ் மக்கள் மத்தியில் கருதப்பட்டது. அந்த ஒப்பந்தம் இலங்கை இந்திய அரசுகள் மட்டும் கைச்சாத்திட்ட சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழ் தரப்பு கைச்சாத்திடாத ஒப்பந்தமாக இருந்தபோதும் இந்த எதிர்பார்ப்பே இருந்தது.

ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட இந்தியாவுக்கு ஒப்பந்தத்தை ஏற்கும்படி பிரபாகரனை வற்புறுத்துவதில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காவிட்டாலும் புலிகளை வழிக்கு கொண்டுவர 72 மணி நேரம் போதும் என்ற 'றோ'வின் உளவறிக்கையை முற்றாக நம்பி அது செயற்படத் தொடங்கியது.

இலங்கையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகிக் கொண்டிருக்கையில் சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் கனரக ஆயுதங்கள் டாங்கிகள், விமானங்களில் ஏற்றிச் செல்லப்படுவதற்காக விமான நிலையத்தில் நிரல்படுத்தி நிறுத்தப்பட்டிருந்தன. ஏற்றப்படவுள்ள இந்த ஆயுதங்கள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்துடன் யுத்தம் ஒன்று ஏற்படும் என்ற நோக்குடனேயே இந்தியாவால் அனுப்பப்படுகின்றன என்ற அபிப்பிராயமே பலருக்கும் இருந்தது குறிப்பாக தமிழருக்கு.

ஆனால், இலங்கையுடன் இந்தியா தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் காட்டிய கவனத்தை விட அதிகளவு கவனத்தை புலிகளை புறமொதுக்குவதிலேயே காட்டியது என்று சொல்லக்கூடிய சம்பவங்களே நடந்தன. புலிகளுடன் முரண்பட்ட இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கியமை, உண்ணாவிரதமிருந்த திலீபனை இறக்க விட்டமை, புலிகளின் 12 உறுப்பினர்களை கொழும்புக்கு எடுத்துச் செல்ல அனுமதித்ததன் மூலம் சயனைட் அருந்தித் தற்கொலை செய்ய அனுமதித்தமை போன்றவை இச்சம்பவங்களுள் சிலவாகும். அத்துடன் அங்கு வந்திறங்கியிருந்த இந்தியப் படைகளுக்கு தாம் எதற்காக வந்திருக்கிறோம்: நாம் செய்ய வேண்டியது என்ன, என்பது பற்றிய தெளிவு எதுவும் இருக்கவில்லை. ஆயினும், அவசர அவசரமாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும், அவசர அவசரமாக அனுப்பிவைக்கப்பட்ட படையும் பலத்த வரவேற்பினை தமிழ் மக்கள் மத்தியில் பெற்ற போதும், அது புலிகளுடன் சண்டையிடும் நோக்கத்தை - அல்லது அப்படி ஒரு தேவை வரும் என்ற எண்ணத்தின் மட்டும் வருமுன்பே கொண்டிருந்திருக்கிறது.


உண்மையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்த மறுத்தால் அதனுடன் போரிடவும் வேண்டி வரலாம் என்று தான் இந்த ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டன என்று நம்புவதே அதிகளவு தர்க்கப்பொருத்தமாக இருந்திருக்கும். ஏனென்றால், அதுதான் தொடர்ச்-

நன்றி - நூலகத்திட்டம்



**"ஆக, இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும்போது எதிர்க்கும் குழுக்களை தாக்கும் நோக்கத்தை அது கொண்டிருந்தது. தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத புலிகளை ஒழித்துவிட்டால் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திவிடலாம் என்பது அதன் எதிர்பார்ப்பாக இருந்திருக்கிறது."**

சியாக இராணுவத் தீர்வில் நாட்டம் காட்டி-வந்ததுடன், செய்த ஒப்பந்தங்களையும் கிழித்தெறிந்தது. இந்திய அரசை சார்ந்திருந்த அனைத்து இயக்கங்களும், அமிர்தலிங்கம் உள்ளிட்ட கூட்டணித் தலைவர்களும் அவ்வாறுதான் நம்பினார்கள். ஏன் தென்னிலங்கை அரசியலாளர்கள் மத்தியிலும் அத்தகைய ஒரு அச்சமே இருந்தது. ஆனால், துயரம் என்னவென்றால் இந்தியப் படையோ அரசோ - அந்த எண்ணத்தை கிஞ்சித்தும் கொண்டிருக்கவில்லை.



ஹரிகர் சிங்

உண்மையில் இலங்கை அரசாங்கத்துடனான சகல கொடுக்கல் வாங்கல்களையும் கொழும்பிலிருந்தபடி டிக்சிற் செய்து கொண்டிருந்தார். அமைதிகாக்கும்படை யாழ்ப்பாணத்திற்கு தருவிக்கப்பட்டது. ஆயுதக் களைவுக்காகவே என்பது புலிகளுக்கும், பிற இயக்கங்களுக்கும் தெரிந்திருந்தது. புலிகளை தவிர்ந்த அனைத்து இயக்கங்களும் ஆயுதங்களை இந்தியப்படையிடம் வழங்கியபின், ஆயுதக் களைவு என்பது புலிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையே என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. இந்தியப்படையின் முதலாவது தளபதியாக வந்த மேஜர் ஜெனரல் ஹரிகர் சிங் அவர்கள் தன்னிடம் திடீரென இலங்கைக்கு போகும்படி கூறப்பட்டபோது தான் கூறியதாக இவ்வாறு கூறுகிறார். "நீங்கள் இப்படி ஒரு கடுமையான முடிவை எடுப்பீர்களானால், நீங்கள் அடுத்த பத்து 20 வருடங்களுக்கு தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருப்பீர்கள். இந்த யுத்தம் முடிவே இல்லாமல் தொடரும். நீங்கள் நாகலாந்திலும், மிசோராமிலும் இன்னும் இப்படி பல இடங்களிலும் தொடர்ந்து சண்டையிடுகிறீர்கள். அதுபோல் இன்னொன்றாக இது மாறும். இதற்கு முடிவே இருக்காது"

ஆக, இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும்போது எதிர்க்கும் குழுக்களை தாக்கும் நோக்கத்தை அது கொண்டிருந்தது. தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத புலிகளை ஒழித்துவிட்டால் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திவிடலாம் என்பது அதன் எதிர்பார்ப்பாக இருந்திருக்கிறது.

'இலங்கையில் வந்திறங்கிய இந்தியப்படையிடம் இலங்கை வரைபடங்களோ, தொடர்பு சாதன கருவிகளோ இருக்கவில்லை. யுத்தமுனை உத்தரவுகளை பிறப்பிப்பது யார் என்பது கூட தெளிவாக முடிவு செய்யப்படவில்லை' என்று கூறுகிறார். முதலில் வந்திறங்கிய படையணிகளில் கடமையாற்றிய அதிகாரிகளில் ஒருவரான கேணல் ஜோன் ரெய்லர்.

இந்தத் தயாரின்மைக்கு காரணம் அது சண்டையிட வரவில்லை. சமாதானத்திற்காக வந்தது என்பது தான் என்றே கருதப்பட்டது. சொல்லப்போனால், புலிகளுக்கும் இந்தியப்படைகட்கும் இடையிலான யுத்தம் வெடித்த ஆரம்ப நாட்களில் இந்தியப்படை தடுமாறியதையும் பெருமளவு பேரைப் பலிகொடுத்ததையும் பார்த்துப் பலர் இதைத்தான் சொன்னார்கள். ஆனால், உண்மையில் காரணம் அது அல்ல. அவர்களை இலேசாக நசுக்கிவிடலாம் என்ற அபிரிமிதமான நம்பிக்கையே இதற்கு காரணம். டிக்சிற் கூறுகிறார் "சில வேளைகளில் புலிகளுடன் சண்டை பிடிக்கவேண்டி வந்தால் என்ன செய்வீர்கள் என்று சுந்தர்ஜியிடம் கேட்டபோது அவர் சொன்னார், அவர்களை இரண்டு வாரங்களுள் என்னால் அடக்கிவிட முடியும் என்று!"

ஆக, இந்திய அரசிடம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக தான் முன்மொழிந்த தீர்வை தமிழ் இயக்கங்களும், கட்சிகளும், ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்ற மனநிலையே இருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு போதிய ஒரு தீர்வு என்று கருதாத அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் கூட இந்தியாவின் இந்த மனோ நிலையைப்பற்றி புரிந்து கொள்ள முடியாதளவுக்கு அதன்மீது அபரிமித நம்பிக்கை வைத்திருந்தன. தமிழ் இயக்கங்களிடமும் அமிர்தலிங்கத்திடமும் ராஜீவ் காந்தி ஒப்பந்தத்திற்கு புறம்பாக எழுத்திலில்லாத பல வாக்குறுதிகளை அளித்திருந்ததாக கூறப்படுகின்றது. இந்த வாக்குறுதிகளைத் தான் - எழுதப்பட்ட ஒப்பந்தத்திலிருந்த சரத்துக்களை விடவும் அதிகமாக இந்த இயக்கங்களும் கட்சிகளும் நம்பின. (பின்னாளில் சுரேஸ் பிரேமச்சந்திரன் ராஜீவ் காந்தி அளித்த வாக்குறுதிகள் காரணமாக இந்திய கடப்பாடு குறித்து கருத்து தெரிவித்தது இவ்விடத்தில் நினைவு கூறப்படலாம்) இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இந்தியா யாழ்ப்பாணத்தில் தனது யுத்தத்தை தீவிரப்படுத்தியபோது இந்தியாவிலிருந்து அமிர்தலிங்கமும் வரதராஜப் பெருமாளும் யுத்தத்தை, பெருமளவுக்கு தமிழர்கள் கொல்லப்பட அந்த யுத்தத்தை, ஆதரித்து துாரதரிசனம் பேசினர்.

இலங்கை இனப்பிரச்சினையில், ராஜீவ் சொன்னால் என்ன சொல்லாவிட்டால் என்ன த்மிழ் ம்க்களின் அரசியல் உரிமை தொடர்பாக இந்தியாவுக்கு பாரிய தார்மீகப் பொறுப்பு இருந்தது. ஜே.ஆருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட இந்திய அரசு அந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படாமை- அதிகாரங்கள் பரவலாக்கப்படாமை, பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பிடுங்கப்பட்டமை, போன்ற விடயங்கள் குறித்து வாழாவிருந்தது. "இலங்கையின் மிகப்பெரிய மாகாணசபையின் முதலமைச்சரான எனக்கு இருக்க ஒரு கதிரை கூட இல்லை" என்று முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறும் அளவுக்கு அதிகாரங்கள் மாறுபட்ட பங்கிடப்படாத ஒரு சூழலே இங்கு நிலவியது.

1990ல் இலங்கையில் புதிய ஜனாதிபதியாக பிரேமதாசா தெரிவுசெய்யப்பட்ட பின் இந்தியப்படை வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தபோது இந்தியாவின் புதிய அரசாங்கத்தை அமைத்திருந்த வி.பி.சிங் கூட்டணியினர் இந்தியப் படையை வாபஸ் வாங்குவது என்ற முடிவுக்கு வந்தனர். தாம் தன்னிச்சையாக ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமோ, அதன் மூலம் பகிரப்பட ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களோ அவை இலங்கை அரசினால் பகிர்ந்தளிப்பது மறுக்கப்படுவதோ பற்றி எந்த ஞாபகங்களும் வி.பி.சிங் அரசாங்கத்திற்கு அப்போது இருக்கவில்லை. தமது படையினரை வாபஸ் வாங்கிக் கொண்டு இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை காக்கப்படுமா என்ற அக்கறை எதுவும் இல்லாமல் அது வெளியேறியது. ஆம் அப்படி ஒரு முடிவு எடுக்கக்கூடிய தன்மையை இந்திய அரசு கொண்டிருக்குமாக இருந்தால் ஆரம்பத்திலேயே இந்த விடயத்தில் அக்கறை காட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால், ஆரம்பத்தில் அக்கறை காட்டுவது போல் காட்டி பிரேமதாசா கேட்டுக்கொண்டபோது விட்டுவிட்டு வெளியேறி விட்டது - கூடவே தமது எடுபிடிகளாக தாம் உருவாக்கி வைத்திருந்த தமிழ் இயக்கத்தினரையும் கூட்டிக்கொண்டு.

உண்மையில் இந்தியாவின் வெளியேற்றம் இலங்கை அரசாங்கத்தின் மிரட்டலுக்கு பயந்து நடந்ததா? புலிகளும் புதிய இலங்கை அரசாங்க ஏற்படுத்திக்கொண்ட உறவு காரணமாக இந்தியா தனக்கு - இல்லை என்று நினைத்ததா. அப்படியானால் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக இலங்கை அரசுடன் பேசுவதை அது ஒப்புக் கொண்டு விட்டது. கிட்டத்தட்ட 'இடுப்பு முறிக்கப்பட்ட' நிலைக்கு புலிகளை தாம் தள்ளிவிட்டதாக கூறும் இந்திய அரசு அப்படிப்பட்ட நிலையில் உள்ள புலிகளால் இலங்கை வாழ் தமிழ் மக்கள் நலன்களை வென்றெடுத்துத் தர முடியும் என்று நம்பியதா?



இந்திய அரசு எந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தாக்கியதோ அதை தமிழ் மக்களுக்கான தீர்வாக வழியுறுத்தியதோ அது முற்றாக அமுல்படுத்தப்படும்வரை பொறுத்திருப்பது அவசியம் என்று கருதாமல் வெளியேறிய நிலைமை அதன் வருகையின் நோக்கத்தை கேள்விக்குள்ளாக்குகிறது.

இந்திய அரசுக்கு இலங்கை அரசை தன்னை மீறிச் செயற்படாத ஒரு அரசாக மாற்றும் நோக்கம் இருப்பதாக சொன்னோம் அல்லவா? அது இந்தியப்படை வருகையுடன் சாத்தியமாகிவிட்டது. பிரேமதாசா என்னதான் கொக்கரித்தாலும் அவரால் இந்தியாவை மீறிச் செல்ல முடியாது.- என்பதும், விரைவிலேயே அவர் தங்களுடன் இணைந்துகொள்வார் என்பதுவும் தெளிவாகத் தெரிந்திருந்தது. எனவே வெளியேறுவதற்கு மிகவும் பொருத்தமான தருணமாக இந்தத் தருணத்தை அது கருதியது.

எனவே இந்தியா வந்த போதும் சரி போனபோதும் சரி அதற்கு தமிழ் மக்களது அரசியல் உரிமை குறித்த அக்கறைகளை விட தனது நலன் குறித்த அக்கறையிலேயே பிரதானமாக இருந்தது. இந்தியப்படை வெளியேறும் போது நிறைவேற்றப்படாத பல விடயங்கள் இருந்ததாக அப்போது தளபதியாக இருந்த ஏ.எஸ்.கல்கட் சொல்கிறார். "பல விடயங்கள் செய்யப்பட்டிருந்தன. நிலச் சீர்திருத்தம் நாட்டின் குடிப்பரம்பல் இயல்பை மாற்றும் விதத்தில் உருவாக்கப்பட்ட சட்ட விரோதமாக குடியேறிய நிலங்கள் இருந்தன. வடமாகாணத்தில் நீர்ப்பாசன பரிசோதனைகள் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட பகுதிகளில் சிங்களக் குற்றவாளிகள் குடியேற்றப்பட்டார்கள். இவை குற்றவாளிகளின் குடியேற்றமாக இருந்தது. இந்த நிலங்கள் தமிழர்கட்கு சொந்தமானவை. தமிழர் தாயகத்தின் பகுதி இவை இப்படிப் பல விடயங்கள் இருந்தன".

ஒப்பந்தத்தின் மூலமான அதிகாரப் பரவலாக்கங்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருந்த நேரத்தில் இந்தியப்படை வெளியேறியது. இந்தியப்படையின் குறிக்கோள் முடிந்ததா? இல்லையா? என்பது பற்றிய கேள்வி மட்டும் எஞ்சியது. வெளியேறியபோது அதிகாரப் பரவலாக்கம் முறியடிக்கப்படாமல் இருந்தது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் கல்கட் சொல்லுகிறார் "இலங்கை அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த தயாரில்லாமல் இருந்ததால் எதையும் செய்திருக்க முடியாது. அதை செய்வதற்கு இலங்கையை நிர்ப்பந்திக்க இந்தியாவின் அழுத்தம் அவசியப்பட்டிருக்கும்.

-ஆனால், இந்தியா அப்படியொரு அழுத்தத்தைக் கொடுக்க விரும்பவில்லை. தாம் சட்டபூர்வமாக செயற்படுத்தப்படுவதையே இந்தியாவின் புதிய அரசாங்கம் விரும்பியது. வரும்போது சட்டபூர்வ தன்மையை உருவாக்க ஒப்பந்தத்தை உருவாக்கியது என்பது கவனிக்கத்தக்கது.) விளைவு - ? டிக்சிற்றின் வார்த்தைகளில் சொல்வதானால் "தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய பல விடயங்கள் சிதைந்து போவதை இந்த வெளியேற்றம் உருவாக்கி விட்டது".

இப்போது இந்த விடயம் தொடர்பாக பேசுகையில் சமாதானத்தை ஒருபோதும் யுத்தத்தின் மூலம் கொண்டு வர முடியாது என்று அடித்துக் கூறுகின்றார்.

இப்போது இந்திய அரசாங்கம் இலங்கைக்கு உதவி வழங்க வருவது சில வேளைகளில் நடந்தாலும், அதனிடம் தமிழ் மக்கள் உரிமைகளை வென்றெடுத்துக் கொடுக்கும் கடப்பாடோ அக்கறையோ தீவிரமாக இல்லை என்பதை விளங்கிக் கொண்டே நாம் அந்த வருகையை அவதானிக்க வேண்டும்.

இந்திய அமைதிகாக்கும் படையிலும் இந்திய அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் மத்தியில் தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பான அக்கறையும் அவற்றை தமிழ் மக்கள் பெறுவதில் தாம் பங்காற்ற வேண்டும் என்ற விருப்பம் கொண்ட பலர் இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்திய அரச கொள்கையும் நடைமுறையையும் அதை முக்கியமான விவகாரமாக கருதியதில்லை.

அந்த நிலை இன்னும் நிலவவே செய்கிறது என்ற கசப்பான உண்மையை தமிழ் முஸ்லிம் மக்கள் மறக்காமல் இருப்பது நல்லது!

நன்றி - நூலகத்திட்டம்



# இனத்துவம் சார்ந்த தொடர்பூடகங்கள் உருவாக்கி வரும் சிக்கல்கள்!

### தமிழ்தேசியவாத அரசியல்

தமிழ் சமூகத்தில் சிவில் அரசியல் செயற்பாடுகள் 1999ம் ஆண்டு தேசியவாத வட்டத்திற்குள் பயணிப்பதை காணக்கூடியதாக இருந்தது. போராட்ட குணமிக்க தமிழ்தேசியவாதத்தின் கருத்தியல்வாத மேலாதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டமையே இதன் மூலம் தெளிவாகியது.

1999ம் ஆண்டில் தமிழ்தேசியவாதத்தின் பிரசித்த ஆதரவாளரும் பேச்சாளருமாக தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் உறுதிப்படுத்தப்பட்டார். புலிகளை தமிழ் மக்களின் ஒரே தமிழ் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு அவர் கொழும்பிலிருந்து அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பெருமளவானர்கள் இக்கருத்தை ஏற்றிருந்தனர். இவற்றைத்தவிர ஈ.பி.டி.பி. டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற தமிழ் அரசியல் அமைப்புகளின் அரசியல் கருத்தியல் நடவடிக்கைகள் பெரும்பாலும் நடைமுறை ரீதியில் புலிகளின் அரசியல் கருத்தியல்களுக்கு முரணாக இருக்கவில்லை. தமிழ் சமூகத்தில் புலிகளின் போராட்ட குணமுள்ள தமிழ் தேசியவாதத்திற்கு சவாலிடக் கூடிய தமிழ் அரசியல் இயக்கம் இன்று இல்லையெனலாம். இந்நாட்டைச் சேர்ந்த தமிழ் சமூகத்தில் யுத்த அரசியல் மற்றும் கருத்தியல் மேலாதிக்கத்தை தற்போது உறுதியாக புலிகள் உரித்தாக்கிக் கொண்டுள்ளனர்.

1999 ஜுன் 18ம் திகதி விசேட அறிவித்தல் ஒன்றை மேற்கொண்ட புலிகள் பிற அரசியல் கட்சிகளை கலைந்துச் செல்லுமாறும் இல்லாவிட்டால் புலிகளுடன் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

### முஸ்லிம் தேசியவாத இயக்கம்

சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் உக்கிரமான தாக்குதல்களுக்குள்ளான இலங்கை முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஏ.எச்.எம். அஷ்ரஃப் தற்காலிகமாக பிரதான முஸ்லிம் தலைவராக முன்வந்தபோதிலும் வருட இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வாதப்பிரதிவாதங்களில் இந்நிலைமை நீங்கியது. இதற்கு காரணம் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் இரண்டும் தத்தமது முஸ்லிம் தலைவர்களை முன்னணிக்கு கொண்டு வந்தமையாகும். எவ்வாறாயினும் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே அவரது அரசியல் தலைமைத்துவம் உறுதியாக உள்ளது. தேசிய ஐக்கிய முன்னணி எனப்படும் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களுக்கும் திறந்த அரசியல் கட்சியொன்றை கட்டியெழுப்ப அஷ்ரஃப் அவர்கள் மேற்கொண்ட முயற்சி ஒரு புறம் உள்ள போதிலும் அவர் முஸ்லிம் தேசியவாத அரசியல்வாதி எனக் கருதப்படுகின்றார்.

ஜிகாத் எனும் இரகசிய முஸ்லிம் போராட்ட குழுவொன்றை நடாத்தி வருகின்றார் என சிங்கள தேசியவாதிகளினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அவர் மறுதலித்தார். கங்கொடவில சோம தேரருடன் நேரடி தொலைக்காட்சி விவாதத்தில் பங்கு பற்றி கிழக்கு மாகாண பௌத்த உரிமைகளை நாசம் செய்கிறார் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை தோற்கடிக்க முடிந்தமை 1999ம் ஆண்டில் அஷ்ரஃப் அவர்களுக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி ஆகும்.

கிழக்கு முஸ்லிம் சமூகத்தில் அடிப்படைவாத குழுவொன்று செயற்பட்டு வருவதற்கான சாட்சி வருட இறுதியில் கிடைத்தது. அதாவது முஸ்லிம் மதத்திற்கு விரோதமாக பாலியல் தொடர்புகள் வைத்திருந்ததற்காக குற்றம் சுமத்தப்பட்டு மூன்று பெண்களுக்கு பகிரங்கமாக தண்டனை வழங்கப்பட்டது. முஸ்லிம் விடுதலை முன்னணியிலும் கூட அடிப்படைவாத போக்குகள் காணப்படும் தன்மையை பிரதிபலிக்கும் சம்பவங்கள் வருட நடுப்பகுதியில் காணக் கிடைத்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் முஸ்லிம் தொடர்பூடக சங்கத்தினால் நடாத்திய ஏ.சி.எஸ். ஹமீட் அவர்களின் நினைவுக் கூட்டத்திற்குள் நுழைந்து சிங்கள வீரவிதானவுக்கு மற்றும் தொண்டமானுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி கூட்டத்தைக் குழப்பினர்.

ஒருபுறம் இந்நாட்டு முஸ்லிம் மக்கள் புலிகளின் யுத்த அரசியல் வன்முறைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மறுபுறம் சிங்கள பௌத்த தேசியவாத இயக்கங்களின் மோசமான அரசியல் கருத்தியல் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அதேபோல் இடையில் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் விரோத இனவாத நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். முஸ்லிம்களின் பிரதான ஜீவனோபாயமான வர்த்தகத் துறையிலிருந்து அவர்களை விரட்டி அடிக்கும் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய அரசியல் கருத்தியல்கள் இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தில் இல்லை. மறுபுறம் ஆங்காங்கே ஏற்படுகின்ற முஸ்லிம் அடிப்படைவாத போக்குகள் தேசிய மட்டத்தை நோக்கி பயணிக்கும் தன்மையையும் காணக்கிடைக்கவில்லை.

### இனநெருக்கடி

1999 பெப்ரவரி மாதம் தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாக குருணாகலை, பன்னலவில் சிங்கள - முஸ்லிம் தரப்பினரிடையே ஏற்பட்ட மோதல், இன மோதலாக மாற்றமுற்றது. பல மாதங்கள் நீடித்த இந்த நெருக்கடியின் காரணமாக பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் நெருக்கடிக்குள்ளாயினர். அப்பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் கூட இந்த நெருக்கடியில் இன அடிப்படையிலேயே தலையிட்டனர். மீண்டும் இயல்பான நிலைமையை ஏற்படுத்த வேண்டுமாயின் தனிப்பட்ட மோதலில் மரணமடைந்த சிங்கள இளைஞருக்கு முஸ்லிம் மக்களால் ரூ.750,000.00 வழங்கப்பட வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டபின் இதைவிட குறைவான தொகையை வழங்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். இந்த மாதத்தில் அனுராதபுரம் நொச்சியாகமவில் ஏற்படவிருந்த முஸ்லிம்களுக்கு எதிரான கலவரநிலைமை பிரதேச அரசியல்வாதியின் தலையீட்டினால் தடுக்கப்பட்டது.

1999 ஏப்ரல் மாதத்தில் பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் சேவையாற்றிய முஸ்லிம் ஆசிரியை (மக்காவுக்கு சென்று திரும்பிய பின்னர்) பர்தா அணிந்து கொண்டு பாடசாலைக்கு சமூகமளித்திருந்தமையினால் தொடர்ந்த முஸ்லிம் - தமிழ் பிரச்சினை மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது. தமிழ்ப் பாடசாலை அதிபர் பர்தா அணிவதைத் தடுத்துள்ளார். பின்னர் முஸ்லிம்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நெருக்கடி பாடசாலையில் கல்வி கற்கும் முஸ்லிம் - தமிழ் மாணவியர்கள் மத்தியில் பரவி சீருடைப் பிரச்சினையாக மாறியது. முஸ்லிம் மாணவிகள் பர்தா அணியவும், நீண்ட வெள்ளை கால் சட்டையை அணியவும் அனுமதி உண்டென நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதற்கு எதிராக தமிழ் மாணவிகள் நிற ஆடையை பாடசாலைக்கு அணிந்துவர ஆரம்பித்தனர். வருட இறுதிவரையில் அன்னியோன்யத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுக்கு வர இப்பாடசாலையால் இயலவில்லை. பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் சிக்கலாகின. முஸ்லிம் - தமிழ் மாணவிகள் இரு தரப்பினராக பிளவுபட்டனர்.

### தொடர்பூடக பாத்திரம்

இலங்கைத் தொடர்பூடகங்களில் இன பேதத்தன்மை அதிகரித்ததே அன்றிக் குறைந்த தன்மையை 1999ல் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக சிங்கள உரித்துடைமையைக் கொண்ட தொடர்பூடகங்கள் மற்றும் தமிழ் உரித்துடைமை கொண்ட தொடர்பூடகங்கள் தமது செய்திகளை விமர்சனங்களை முன்வைப்பதில் இனக் கூறுகளின் தாக்கத்திற்குட்பட்டிருந்தன. நாட்டின் பாரிய தொடர்பூடக சொந்தக்காரரான அரசு, யுத்தமூலமான தீர்வுக்குச் சென்றது. அதன் தலைவியான ஜனாதிபதி புலிகளின் குண்டுத்தாக்குலுக்குள்ளான நிலைமையின் கீழ் இத் தொடர்பூடகத்தினர் முன்னர் ஒரு போதும் இல்லாத யுத்தப் போக்குக்கு மாறினர்.

வார இறுதிப்பத்திரிகைகள் இரண்டு மூன்றைத் தவிர பொதுவாக கீழ்த்தரமான தொடர்பூடக கொள்கை சிங்கள மற்றும் தமிழ் பேசும் மக்களை உக்கிரமான துருவவாதத்திற்குட்படுத்தி வருகின்றது. தலைநகரான கொழும்பில் அச்சடிக்கப்படும் சிங்களப் பத்திரிகைகள் தனித்து சிங்களவர்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன், தமிழ்ப்பத்திரிகைகள் தமிழர்களை இலக்காகக் கொண்டுள்ளன. இலங்கையில் அவ்வப் பிரஜைகள் மக்கள் தலைவர்கள், தொழில்புரிபவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் பிற மொழியை பேசும் வாசிக்கும் திறமை இல்லாததால், பிறர் எழுதும், வாசிக்கும் விடயம் தொடர்பான தவறான விளக்கம், பீதியான தன்மையை நோக்கி வளர்ச்சி பெற்றது.

இந்நாட்டு இனப்பிரச்சினைக்கு வெளிநாட்டு, மூன்றாவது தரப்பு தலையீடு தேவையில்லையென வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் நியூயோர்க் நகரில் ஆற்றிய உரை சிங்களத் தொடர்பூடகங்களின் வாழ்த்துக்குட்பட்டது. தமிழ்ப் பத்திரிகைகள் அவரது உரையை விமர்சனம் செய்து தலையங்கம் தீட்டின. வருட இறுதியில் காலமான தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் பற்றி மூன்று தினங்கள் தொடர்ந்து தமிழ்ப் பத்திரிகைகள் பேசிய போதும் சிங்களப் பத்திரிகைகளுக்கு அது இன்னுமொரு செய்தியாக மட்டுமே இருந்தது.

இந்திய பொதுத் தேர்தலில் பி.ஜே.பி. வெற்றி பெற்றமையானது இந்நாட்டு தமிழ்ப் பத்திரிகைகளில் பிரதான தலைப்புச் செய்தியாகியது. சிங்களப் பத்திரிகைகள் மிகக் குறைந்த பெறுமதியை வழங்கின. குமார் பொன்னம்பலம் படுகொலை, வன்னியில் உணவு, மருந்து பற்றாக்குறை, வடக்கு கிழக்கில் படையினரின் பாலியல் வல்லுறவுகள், பலாலியல் காணி ஒதுக்கீடு, மடு தேவாலய தாக்குதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக சிங்கள தமிழ் பத்திரிகைகள் முற்றிலும் முரணாக நடந்து கொண்டன. தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களின் நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட பீதியை உருவாக்கும் பிரதான காரணியாக இந்த இன பேத தொடர்பூடகக்கலை மாறியுள்ளது.

யுத்தம் மற்றும் அவை தொடர்பான தகவல்களை அறிக்கையிடும் பிரதான தகவல் மையமாக அரசும் அரசின் பாதுகாப்பு தகவல்களை பயன்படுத்துவது சிங்களப் பத்திரிகைகளின் நடைமுறையாகும். தமிழ்ப் பத்திரிகைகள் புலிகளின் தகவல்களை போன்று தமிழ் சமூகத்தை சுயமானமையமாகப் பயன்படுத்தியது.

கொழும்பு தமிழ் மக்களின் மனித உரிமைகள் பற்றிய நெருக்கடி சூழ்நிலைகளில் தலையிடும் இ.தொ.கா. பா. உறுப்பினரான யோகராஜன் அவர்கள் பலாத்காரமாக புலி சந்தேகநபர்கள் 6 பேரை விடுவித்தார் என சிங்களத் தொடர்பூடகங்கள் பரந்தளவில் பிரச்சாரப்படுத்தின. ஒரு சிங்களப் பத்திரிகை சந்தேக நபர்கள் தற்கொலைக் குண்டுதாரிகளாக இருக்கலாம் எனத் தெரிவித்திருந்தது. சிங்களப் பத்திரிகைகள் இச் செய்தியின் தகவல்மையமாக இராணுவத்தையும், பொலிசாரையும் சுட்டிக் காட்டியது. பா.உ. யோகராஜன் மற்றும் தமிழ் மக்கள் தகவல் மையமாக சுட்டிக்காட்டி இருந்த தமிழ்ப் பத்திரிகைகள் படையினர் மீது குற்றம் சுமத்தியிருந்தன. சிங்களத் தொடர்பூடகங்கள் இச் செய்தியின் தகவல் மையமாக இராணுவத்தையும், பொலிசையும் கொண்டிருந்தது. யோகராஜன் பா. உவையும், தமிழ் மக்களையும் தகவல் மையமாகக் கொண்டு தமிழ்ப் பத்திரிகைகள் படையினர் மீது குற்றம் சுமத்தியிருந்தன. தாம் தமிழ் மக்கள் சிலரின் உரிமைகளுக்காகவே முன்வந்து தோற்றியதாகவும், மேற்கூறப்பட்ட சிங்களத் தொடர்பூடகங்கள் வெளியிட்ட தகவல்கள் தவறானது எனவும், இராணுவமே தவறிழைத்துள்ளதாகவும் யோகராஜன் பா. உ. குழு விசாரணைகளின் போது தெரிவித்திருந்தார். அவர் புலித் தலைவராகக் குறிப்பிடப்படல் தொடர்கின்றது.

தமிழ் மக்களில் கைது செய்யப்படும் நபர்களை புலி சந்தேக நபர்களாகக் காட்டி பீதியான வகையில் இச்செய்திகளை வெளியிடல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த அறிக்கையிடலின்படி புலிப் போராளிகள் கொல்லப்படுகின்றனர். அதேவேளை அரச படையினர் உயிரைத் தியாகம் செய்கின்றர். மறுபுறம் இந்நாட்டு தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் அன்றாடப் பிரச்சினைகள், மற்றும் நீண்டகால அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக போதுமான கட்டுரைகள், செய்திகள், சிங்களத் தொடர்பூடகங்களில் பிரசுரிக்கப்படுவதில்லை. தமிழ்ப் பத்திரிகைகள் இதற்கு முற்றிலும் மாறுபட்டது.

இலங்கை சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதில் இருக்கும் ஒரு பிரதான சவால் இலங்கைத் தொடர்பூடக கலாசாரம் பல்லின பல் கலாசார, பல்மத, ஆகிய வகையில் பல் தன்மையைக் கொண்டதாகக் கட்டியெழுப்புவதாகும். இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையே சமாதானத்தையும், சமத்துவத்தையும் கட்டியெழுப்பும் அடிப்படையாக இருக்கும் அன்னியோன்ய விளக்கம் மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட செயற்பாடுகளை இந்நாட்டு தொடர்பூடக கலாசாரத்திற்கு அறிமுகப்படுத்துவது அவசியமாகும். துரதிருஷ்டவசமாக இந்நாட்டு சுதந்திர தொடர்பூடகத்திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கூட அரசு மற்றும் அதற்கு எதிரான விவாதங்களிலிருந்து வேறாக பயணிக்கவில்லை. உண்மையில் சுதந்திர தொடர்பூடகம் குறித்து இந்நாட்டு இயக்கங்களுக்கு பொதுவான பார்வை இல்லை.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**

## போரைத் தவிர......

**ஒரு புறம் அரசாங்கமும். மறுபுறம் எதிர்க்கட்சியும் உள்ளன. புலிகள் வடக்கை கைப்பற்றிக் கொண்டிருக்கின்றனர். சிலவேளை தனி அரசை அவர்கள் பிரகடனப்படுத்தக் கூடும். இந்நிலைமைக்கு முகம் கொடுக்க உங்கள் கட்சி நீண்டகால குறுகிய கால திட்டங்களைக் கொண்டுள்ளதா?**

நீண்டகால நோக்கில் கூறுவதாயின், புலிகள் தற்காலிகமாக பிரதேசங்களைக் கைப்பற்றினாலும், மீண்டும் நாம் அப்பிரதேசங்களை கைப்பற்றப் போர் புரிவோம். இதில் மாற்று கருத்துக்கள் இல்லை. எமக்கு அரச அதிகாரம் கிடைத்தவுடன் பாரிய யுத்த நடவடிக்கையை மேற்கொள்வோம் என்பது உறுதி. இந்நிலைமை[illegible]ன் தாற்பரியத்தை இன்றும் இந்நாட்டு மக்க[illegible]ங்கிக் கொள்ளவில்லை. எதிர்வரும் வா[illegible]களில் மக்களுக்கு அறிவுறுத்தல் செய்யும் பாரிய ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். இது குறுகியகாலத் திட்டமாகும். அதேபோல் ஆயுதப்படையினர் பிரிந்து சென்று நாட்டில் அராஜகங்களில் ஈடுபடும் நிலைமையை தவிர்க்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

**வடக்கில் இராணுவம் தோல்வியுற்றதுடன் சிங்கள சமூகத்தில் பரபரப்பான சூழல் ஏற்பட வாய்ப்புண்டு. தெற்கில் குறிப்பாக கொழும்பில் பெருமளவில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழலில் சிங்கள உறுமய எவ்வாறு நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளது?**

சிங்கள மக்கள் வன்முறையில் இறங்கினார்களாயின் இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது தமிழ் இனவாதமும், இரு பிரதான அரசியல் கட்சிகளும் தாம். எனினும், இவ்வாறான நிலைமையைத் தடுக்க நாம் முயற்சிக்கின்றோம். அதாவது சிங்களவர்களின் உணர்வுகள் தமிழர்களை இலக்கை அடைவதற்குப் பதில் அமைப்பு ரீதியாகவும் அர்த்தமானதாகவும் மாறும் செயற்பாட்டை எடுத்தல் எனலாம்.

**இராணுவத்திற்குத் தேவையான ஆள்பலக்குறைவு. அதாவது மேலும் 37 ஆயிரம் பேர் தேவையென்றும். தெற்கில் இதற்கேற்ற பிரச்சாரங்கள் இல்லையெனவும் இராணுவத்தரப்பில் அடிக்கடி கூறப்படுகின்றது. இதுபற்றி உங்களது அபிப்பிராயம் யாது?**

முதலாவதாக இராணுவத் தலைவர்கள் எப்பொழுதும் மக்களுக்குப் பொய் கூறிவந்துள்ளனர். சிப்பாய்களை சேர்த்துக் கொள்வது மட்டுமன்றி பிற எந்தவொரு விடயம் குறித்தும் சரியான திட்டமிடல்கள் இவர்களிடம் இருக்கவில்லை. இராணுவ முகாம் அரசாங்கத்தின் அலுவலகமாக வீழ்ச்சியுற்றுள்ளது.

இவர்களுக்கு பிரார்த்தனை செய்ய மட்டுமே தெரியும். மறுபுறம் பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சியில் இருந்த கடந்த 5 வருட காலத்தில் இராணுவத்தினர் உளவியல் பலம் வீழ்ச்சியடைந்துள்ளது. இராணுவத்தில் எப்படி சிப்பாய்கள் வந்து சேர்வார்கள்? இராணுவத் தளபதி 'நிப்பு' நிறுவனத்திற்கு வாய்ப்பு அளித்ததும் படையினர் மத்தியில் சென்று யுத்தம் வேண்டாம் என்று பேசுகின்றனர். அரசாங்கம் 'தவளம' செயற்றிட்டத்திற்கு நோர்வே பணத்தைச் செலவழித்து "யுத்தம் வேண்டாம், இவற்றில் சேராதீர்கள்" என்று சிங்கள தேசியத்துவத்தை படுகொலை செய்யும் போது இளைஞர்கள் எப்படி இராணுவத்தில் சேர்வார்கள்? நாம் வவுனியாவில் படையினர் கூறிய விடயத்தைப் பற்றியே கேள்வியெழுப்புகின்றோம். அவர்களது உளவியல் பலத்தை அதிகரிக்கவில்லை. தேவையானவற்றை வழங்கவில்லை ஊதியத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளனர். ஆயுதங்களினால் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் இரவில் லட்சக்கணக்கில் கசினோ விளையாடுகிறார்கள். இவற்றைப் படையினர் அறிவர். இவற்றை அறிந்து கொண்டு யுத்தம் செய்ய முடியுமா?

இராணுவத்தின் கட்டமைப்பு அரசியல் தலைமைத்துவம், என அனைத்தும் மாற்றத்துக்குள்ளாக வேண்டும்.

**புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் தனி அரசை பிரகடனம் செய்தால். அவ்வாறான நிலைமையில் அரசுக்கும். எதிர்க்கட்சிக்கும் நீங்கள் வழங்கும் செய்தி யாது? கட்சி என்ற ரீதியில் உங்களது துரித நடவடிக்கை என்ன?**

நாம் அவர்களை விலகிக்கொள்ளுமாறு உடனடியாகக் கூறுவோம். தனிஅரசை பிரகடனப்படுத்துவதனால் இந்நெருக்கடி முடிவடைந்துவிட்டது என நாம் நம்பவில்லை. எதிர்வரும் தசாப்தத்தில் முழு ஆசிய வலயத்தையும் தமிழ் காலிஸ்தானை ஸ்தாபிக்க - இஸ்ரேல் தோன்றி 50 வருடங்கள் பூர்த்தியான பின்னும் பிரச்சினை நீடிப்பது போல் - இப்போராட்டத்தை பிரபாகரன் 5-6 தசாப்தங்களுக்கு எடுத்துச் செல்வார். இப்பிரச்சினை எமது மட்டுமல்ல முழு வலயத்தினதும் பிரச்சினையாகும். இப்பிரச்சினையை இந்நிலைக்கு உக்கிரமாக்கிய பிரதான கட்சிகள் இரண்டுக்கும் இந்நாட்டை ஆட்சி செய்ய இனியும் தார்மீக உரிமை கிடையாது.

நன்றி: ராவய 20000507

நன்றி - நூலகத்திட்டம்



# சித்திரவதை

## கவிதா சாட்சியம்

**யமுனா ராஜேந்திரன்**

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

இவர்களை அரசியல் காரணங்களுக்காக கொல்வதென்பது விடுதலையின் அறிவியலுக்கு முற்றிலும் விரோதமானது. விடுதலை என்பது இறுதியில் மனத்தினதும், உடலினதும் சந்தோஷத்துக்கானது. விடுதலை பெற்ற மானுடன் என்பவன் அன்பும், அறமும் நிறைந்தவன். குரூரங்களும், வெறுப்புகளும் காலமெல்லாம் காவித்திரிகிறவன் இல்லை அவன். இச்சூழலில் தான் வன்முறை குறித்த அவசியமான உரையாடலைக் கோருகிறார் ரண்டால் மக்கவான்.

வன்முறை குறித்த தீவிரமான கருத்தாடல் என்பது, நமது சமூகம் குறித்த புதிய வகையிலான ஆய்விற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. குற்றம் குறித்த வேறு வகையிலான எதிர்வினைகளை இது கோருவதைப் போலவே, ஆரம்ப காலத்தில் நின்று மாற்றான சட்ட யாப்பையும், தண்டனை குறித்த மாற்று அணுகு-முறைகளையும் இது கோருகின்றது குற்றம் தொடர்பான இந்தப் புதிய தரிசனங்கள் புதிய வகையிலான தீர்வுகளையும், புதிய முகத்துடனான அரசாங்கத்தையும் கோருகிறது.

சித்திரவதைக்கு வேதனையை உடலுக்குத் தருகிற அவப்பக்கம் மட்டுமே உண்டு. சித்திரவதை செய்பவன் மிருகத்தினிடத்துக்குத் தள்ளப்படுகிறான் சித்திரவதைக்கு ஆட்படுகிறவன் மிருகத்திலும் இழிநிலைக்குக் கொண்டு போகப் படுகிறான். கேலிவதை, உறுப்புகளைச் சிதைத்தல், மின்சார அதிர்ச்சியில் கொல்லுதல் போன்று உடலுக்குத் தீராத ரணத்தையும், வலியையும் உருவாக்கும் கேவலத்தை மட்டுமே சித்திரவதை முறை உருவாக்குகிறது. விளக்குக் கம்பங்களில் தொங்குகிற உடல்களும் சித்திரவதையின் அவலத்தைத்தான் சுமந்திருக்கிறது. சித்திரவதை அதில் இயங்கும் இரண்டு மனிதர்களையுமே இழிநிலைக்குத் தள்ளுகின்றது. சித்திரவதையின் வேதனை குறித்து அன்னைக்குக் கடிதம் எழுதுகிறான் மைந்தனான யூகோ தியாஸ்,

*வலி*

*வானத்தில் கடந்து போனது*
*அன்னையே*
*பயணம் இரண்டு சூரியன் நீளம்*

*கறுப்பு மரியா அன்னையே*
*நகரங்களினூடேயும், நதிகளினூடேயும்*
*கடந்து போனது*

*என் விலா எலும்புகளின் மீது அமர்ந்து*
*கறுப்பு மரியா என்னை அழுத்தியது*
*அன்னையே*
*அது தான் பயணத்தின் நுழைவுச்சீட்டு*

*இன்னும் இனிமையானது, அழகானது*
*பல் வரிசையின் மீதான உதைகளும், நோவும்*

*வலிப்பு நிலைக்குக் கொண்டு போகக் கூடியது*
*அன்னையே*
*அக்கொடிய நிலைக்கு உயர்த்துவது*
*மின்சார அதிர்ச்சி*


*நாங்கள் மின் விளக்குகள் அன்னையே*
*கதறும் மின் விளக்குகள்*
*ஆனால்*
*ஒளியற்ற மின் விளக்குகள் அன்னையே*

*ஒளியற்ற மின் விளக்குகள்*

சித்திரவதை உடல் ரீதியானது மட்டுமன்று. கேலியும், கிண்டலுமான மனோ ரீதியிலான சித்திரவதை மனிதர்களைத் தற்கொலைக்குத் துாண்டுகிறது. சித்திரவதை பெரும்பாலும் இராணுவ ஆட்சிகளாலும், சிறிய அளவில் ஜனநாயக நாடுகள் என்று சொல்கின்ற அரசுகளாலும் மேற்கொள்ளப்படுகின்றது. சில விடுதலை அமைப்புகளும், துரோகிகளுக்கு எதிரானது. எனும் வகையில் மாற்றுக் கருத்தாளர்கள் மீது சித்திரவதைகளை மேற்கொள்கின்றன. எவ்வகையிலுமான சித்திரவதைகளுக்கு எதிரான உலகு தழுவிய இயக்கத்தைச் சர்வதேச மன்னிப்பு சபை மேற்கொண்டு வருகின்றது. சித்திரவதைக்கு எதிராக எழுதாத படைப்பாளிகள் இன்று உலகில் இல்லை என்றே சொல்லலாம். சித்திரவதைக்கும், மொழி அமைப்பின் சித்திரவதைக்கும் உள்ள உறவை இவ்வாறு விளக்குகிறார் தெரஸா தீ ஸாரிஸ்,

ஒரு முறை தொடர்பு ஸ்தாபிக்கப்பட்டு விட்டால், வன்முறைக்கும், அதன் தொடரும் சொல்லணிக்குமான உறவு ஒரு முறை உண்டாக்கப்பட்டுவிட்டால் அந்தத் தொடர்பு திரும்பப் பெறமுடியாததாகிவிடும். வன்முறைச் சொல்லணிகள் குறித்த பூக்கோவின் கருத்தின் படி வன்முறையைக் குறித்துப் பேசும் ஒரு மொழிக் கட்டமைப்பானது, சில நடைமுறைகளையும், சம்பவங்களையும் வன்முறையானது என்று சொல்லும். தன் மொழிக் கட்டமைப்புக்குள் வராததை வன்முறை என்று ஒப்புக்கொள்ளாது. அதற்குப் பிற்பாடு அவ்வமைப்பு வன்முறையின் அகப், புறக் காரணிக-ளையும் தீர்மானித்துக் கொள்ளும். பிற்பாடு வன்முறை ஒரு சமூகப் பிரச்சினையாகி விடும் எதிலிருந்து மாற்றாக எதிர் மொழிக் கட்டமைப்பும் உருவாகும். அதுவும் வன்முறையை உற்பத்தி செய்யும். வன்முறை வார்த்தையில் இருக்குமானால்' முன்பாகத் ஸ்துலாமாக நடைமுறையில் வன்முறை காணப்பெறாவிட்டாலும், அப்போதும் வன்முறைச் சொல்லணிகள் இருந்தே தீரும். தெரிதாவின் வார்த்தைகளில் சொல்வதானால், இதுதான் வார்த்தைகளின் வன்முறை என்று சொல்லப் படுவதாகும்.

வன்முறை நமது அன்றாட உறவுகளில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. மனிதர்களின் பரஸ்பர உறவும், உரையாடல்களும் பதட்டம் நிறைந்ததாகவும், பிறர் சிந்தனை அமைப்பை மற்றவர் மீது திணிக்கக் கூடியதாகவுமே இருக்கின்றது. சொற்களின் வன்முறையின் மூலம் ஒரு மனிதனை நிலைகுலையச் செய்ய முடியும். பைத்திய நிலைக்குக் கொண்டு போக முடியும். தற்கொலைக்குத் துாண்ட முடியும். உடலின் மீதான வன்முறை, அடி, உதைகளாகவும், இரத்தம் சிந்துதலாகவும், மின்சார அதிர்ச்சியாகவும், புலன்களைச் சிதைப்பதாகவும் இருக்க, மனித ஆன்மாவின் மீதான வன்முறை அவனது



நம்பிக்கைகளை, உறவுகளை. அறங்களை, நெருக்கடிகளை இயல்புகளை விகாரப்படுத்துவதாகவும் , சிதறடிப்பதாகவும் அமைகின்றது. கேலிகள் வதையாவதும், தற்கொலைக்குத் துாண்டுவதும், சம்பந்தப்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்வதுமே இதற்கான சான்றுகள். இன. மொழி, வர்க்கம், நிறம், ஜாதி, பால், வேற்று நம்பிக்கைகள் போன்றன அனைத்துமே இவ்வாறான மொழி வழியிலான வன்முறைக்கான ஆதாரங்களாக அமைகின்றன.

மனிதர்களுக்கிடையிலான பரஸ்பர நட்பையும், புரிதலையும், உறவையும் விளைகிறவர்கள் இத்தகைய மொழி வழியிலான வன்முறை ஏற்படுத்துகின்ற சித்திரவதை குறித்துக் கவனம் கொள்ள வேண்டியது இன்று மிக மிக அவசியமானதாக இருக்கின்றது. உடலின் மீதான சித்திரவதையைத் தமது அதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்ளும் பொருட்டு, இராணுவ ஆட்சிகளும், அதிகார அமைப்புகளும் கையாளுகின்றன. அதற்கு எதிரான தார்மீகக் குரல்கள் இன்று பலம் பெற்று வருகின்றன. இந்தத் தார்மீகவாதிகளில் முன்னணியில் இருப்பவர்கள் கலைஞர்களும், சிந்திப்பவர்களும், புத்திஜீவிகளும் தான். இவர்கள் தான் விடுதலையின் பெயரில் செலுத்தப்படும் தார்மீக மற்ற வன்முறையையும், சித்திரவதைகளையும் விமர்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். மாற்-றுக் கருத்தாளர்கள், மாற்று நம்பிக்கையாளர் போன்றோரிடம் கருத்தாடல்களை மேற்கொள்கிற இவர்கள் ஒரு பிரச்சினையில் உடன்பாட்டுடன் தான் செயல்பட முடிகின்றது. தார்மீகமற்ற வன்முறைக்கும், சித்திரவதைக்கும் எதிரான ஒரு பொதுப் புலமை இவர்களுக்கிடையிலான உரையாடல்களைச் சாத்தியமாக்குகின்றது. வன்முறை ரீதியிலான சொல் அணிகள் தொடர்ந்து வன்முறையிலான செயல் பிரதேசத்தைத் தவிர்க்கவியலாமல் கொண்டிருக்கின்றது. வன்முறையை மொழியளவில் நியாயப்படுத்துகிறவர்கள், நடைமுறையில் சித்திரவதைகளுக்கு எதிராகவோ, தார்மீகமற்ற வன்முறைகளுக்கு எதிராகவோ இருப்பதென்பது சாத்தியமற்றதாகின்றது. வன்முறை குறித்த சொல்லாடல்களில் மொழிக்கும், செயலுக்கும் இடையில் கட்டமைக்கப்படும் உறவு தர்க்க பூர்வமானது.

சித்திரவதை என்பது உடலின் மீது மட்டும் மேற்கொள்ளப்படுவதல்ல. மனிதனது ஆளுமையின் மீதும், அவன் ஆன்மாவின் மீதும், அவனது இயல்பின் மீதும் மேற்கொள்ளப்படக் கூடியதுமாகும். மொழியில் கட்டமைக்கப்படும் சித்திரவதை, சித்திரவதையாளனையும், சித்திரவதைக்கு உள்ளானவனையும் மனிதத் தன்மை அற்றவர்களாக, விலங்கு நிலைக்கு உள்ளானவர்களாக ஆக்குகின்றது. மனச் சிதைவுக்கு ஆளான பல்வேறு சித்திரவதையாளர்கள் பற்றிய ஆய்வுகள் நிறைய இருக்கின்றது. துருக்கிய இராணுவத்தினர் பற்றிய சமீபத்திய ஆய்வு (குர்தீஸ் பிரதேசங்களில் வன்முறை குறித்த மனநல மருத்துவர்களின் ஆய்வரங்கத் தொகுப்பு குர்தீஸ் தகவல் மையம் , லண்டன்) பிரெஞ்சு இராணுவத்தினர் பற்றிய பிரான்ஸ் பெனானது ஆய்வு போன்றன குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஆய்வுகளாகும். சால்வடோர் புரட்சிக் கவிஞரான ரோக் டால்டனைச் சுட்டுக் கொன்ற அவரது சக தோழன் பிற்பாடு தற்கொலை செய்து கொண்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது. சிறையிலும் சித்திரவதைக் கூடங்களிலும் சித்திரவதை தாளாது தற்கொலை செய்து கொண்டவர்களின் பட்டியல் உலகில் நடந்த போர்களின் பட்டியல் போலவே மிக நீண்டது. சித்திரவதைப் படலத்தில் தனது தோழர்களின் அவமானம் தாங்கவியலா மரணம் குறித்துக் கம் ஸீ ஹா பேசுகிறார்.

*கனத்த காலணிகளின் சப்தம்*
*அறியாத முகங்கள் கைகள் சைகைகள்*
*கூரையின் மேல் முன்னும் பின்னும்*
*இரவு முழுக்கக் கேட்டுக் கொண்டேயிருக்கும்.*

*ஆணையிடும்*
*நக்கலுடன் கர்ச்சிக்கும் அறை*
*அந்த வெள்ளை அறை*
*மயக்க நரகம்*

*பிடுங்கப்பட்ட நகங்கள்*

*பிய்த்தெறியப்பட்ட சதை தரும் வேதனையில்*
*பயங்கரத்தில் விரியும் கண்கள்*

*வாழும் ஆசையில் எழும்*

*வலி உணர்வும்*
*ஓலமும்*

*கதறுவது வாழ்வதற்கான வேட்கையின்*
*வெளிப்பாடு*
*மெலிந்த ஆத்மா மறுபடி உயிர்க்கும்*

*எழுந்து நடப்பார்கள்*

*அகாலத்தில்*

*அகாலத்தில்*
*மரணத்தில் வீழ்ந்தார்கள் எனது நண்பர்கள்*
*வாழ்தலின் அவமானத்தினால்*
*மரணித்தார்கள் எனது நண்பர்கள்*

*அகாலத்தில்*

*அகாலத்தில்*
*துாக்கத்தில் வீழ்ந்தார்கள் எனது நண்பர்கள்*

*உதைகள் கசையடிகள் கேலிகளின்*
*அவமானத்தில்*
*மரணித்தார்கள் எனது நண்பர்கள்*

குறிப்பிட்ட கவிதையில், உடலின் மீதான சித்திரவதையும் சரி, ஆன்மாவின் மீதான சித்திரவதையும் மனிதனது இருத்தலையே அவமானப்படுத்துவதாக அமைகின்றது. அவமானம் தாங்காமலேயே மனிதர்கள் உயிர் துறக்கிறார்கள் சிலர் சித்திரவதையின் விளைவான ரணம் ஏற்படுத்தும் வேதனையை எதிர்கொள்ள முடியாது உயிர் துறக்கிறார்கள். சிலர் விநோதமான சூழ்நிலைகளில் உயிர் துறக்கச் செய்யப்படுகிறார்கள். சித்திரவதையின் செயல் போக்கில் வாழ்வும் கூட இயங்குகிறது. மனிதன் தனிமையில் அழுவதற்கு முக மூடி தனி இடம் ஆகின்றது. சித்திரவதை அம்மாவுக்கு இயல்பாகச் சொல்லக் கூடிய செய்தியாக ஆகின்றது. வாழும் வேட்கை ஓலமாகவும், கதறலாகவும் எழுகின்றது.

அல்ஜீரியாவைச் சேர்ந்த பெண் கவி லைலா ஜபாலி சித்திரவதைக்கு உள்ளான ஒரு கவிஞர். அவரது சித்திரவதையாளர்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறார்கள். சித்திரவதை முறைகள் மாறுவதில்லை. உடலின் மீதான சித்திரவதைகளும், மொழி வழியிலான சித்திரவதைகளும் சரி முன் போல் தான் இருக்கின்றன. உடலும், ஆன்மாவும் சிதைந்த நிலையில் கிடக்கும் லைலா அடுத்த நாள் வரும் இன்னொரு சித்திரவதையாளனைப் பார்த்துக் கேட்கிறாள். இக்கேள்வி எல்லாவகையிலுமான சித்திரவதையாளர்களையும் நோக்கிக் கேட்கப்பட்ட மானுடத்தின் கேள்வி.

### லெப்டினன்ட்

*உனது மனைவி உனது காப்பியில்*
*அன்பாகச் சர்க்கரை கலக்கித் தருகிறாளா?*

*உனது அன்னை எப்போதாவது உன்னை*
*நீ அழகானவன் என்று*
*சொல்வது உண்டா என்ன?*

*நீ உனது குழந்தையின் கேசத்தில்*
*எப்போதேனும் கைநுழைத்து*
*அழைந்தது உண்டா?*

பின் குறிப்புகள்

நான்கு கவிதைகள்

என்ன செய்தி என்று சொல்

**எபிட்னி சிபோ லெபானியா**

சித்திரவதைவதை முகாம் இருந்து

குழந்தைகளோடு உரையாடுதல்

**சிவிக்கைதி**

சித்திரவதைப் படலம்:

**கிம் சி ஹா**

**யூகோ தியாஸ்**

அம்னெஸ்ரி இன்ரநெசனல்
சர்வதேசச் செயலகம்
லண்டன் 1984

### மேற்கோள்கள்

வால்ட்டர் பெஞ்ஜமின்

Illumunations

ரண்டால் மக்காவான்

punishing violence sentencing crime

தெரஸா தி லாரிதிஸ்

The Violence of Rhetoric

Prision writings

Basil Blackwell 1990

UK and USA

லைலா ஜபாலி கவிதை

Voice of Conscience Iron press 1995 UK

**யமுனா ராஜேந்திரன்**

# மீட்சியற்ற நகரத்தில் செண்பகம் துப்பிய எச்சம்.

மழைக்கான ஆரம்ப அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருந்த ஒரு பிற்பகல் நேரத்தில் அவனை அவர்கள் கைது செய்தார்கள்.

சனநடமாட்டம் அதிகமாயிருந்த கடைத்தொகுதியின் மாடிக்குச் செல்லும் படிக்கட்டில் புழுக்களைப் போல மிகமிக அற்பத்தனமாக அந்த நிகழ்வு நடந்தது.

கண்களின் மீது இருளடைந்த தெருக்கள் ஊர்ந்தன. மனசிலிருந்த ஓவியங்கள் சிதைந்து போயிற்று. குருதியும் தசையும் மண்டிய புதிய ஓவியங்கள் அவனுள் தொங்கின. மழை தூறத் தொடங்கி விட்டது.

கடைத்தொகுதியின் இரண்டு பக்க வாயில்களையும் ஒரு வித கட்டளைக்கு கீழ்ப்படிகிறவர்களைப் போல அல்லது அவர்கள் தாங்களே அவற்றைப் பிறப்பித்தவர்களைப் போல தங்களால் அடைத்துக் கொண்டு நின்றார்கள்.

வெளியே சூழல் கல்லாயிற்று. யாருடைய பணிகளையும் யாரையும் செய்ய அவர்கள் அனுமதிக்கவில்லை: குழந்தைகளுக்கு பொம்மைகளை அனுமதிக்காததைப்போல எல்லாவற்றையும் அவர்கள் நிராகரித்தனர். கண்ணுக்குத் தெரியாத வலை ஒன்று இந்த மாலை நேரத்தில் அந்த நகரத்தின் மேலே எறியப்பட்டு விட்டதை அவன் உணர்ந்தான். குழந்தைகளோ அவர்களுடைய பொம்மைகளோ கூட அந்த வலையிலிருந்து தப்ப முடியாது. பழைய இருளடைந்த தெருக்களின் மேலே காகங்கள் சிறகுகளை ஒடுக்கியபடி பறந்து போயின.

படிகளின் வசீகரத்தில் சிதறிக் கிடந்த வெற்றிலைக் கறையும் கழிவுகளின் நாற்றமும் இன்னும் அதிகமாய் பீதி கொள்ளச் செய்தது.

இரண்டு வெற்றுத் தாள்களையும் கொஞ்சம் சில்லறைகளையும் ஏனையவற்றையும் கொண்டிருந்த் காற்சட்டைப் பையில் இருந்து சகலவற்றையும் வெளியிலெடுக்குமாறு அவனை அவர்கள் நிர்ப்பந்தித்தார்கள். கொஞ்ச நேரத்தில் அதற்கு அவசியமற்றவகையில் ஏழெட்டுப் பேர் அவனைச் சூழ்ந்து கொண்டு கேள்விகளால் நிரவினார்கள்: எல்லோருடைய கேள்வியும் ஒரே விதமாக வேறு வேறு வடிவங்களாக இருந்தன.


முரட்டுத்தனமான ஈவிரக்கமற்ற அவர்களது கண்களில் ஒரு மிருகத்தின் மீது பாய்வதற்கான வெறி பின்னிக் கொண்டிருந்தது. அவர்களுடைய விரல் நுனியில் தொங்கிக்கொண்டிருக்கும் அவனது உயிருக்கு இனி எப்போதுமே அவன் சொந்தக்காரனாய் இருக்க முடியாதென்பதை, அதற்கான அருகதை கொஞ்சம் கூட அவனுக்கு இல்லையென்பதை; அவர்கள் கல்லாகிக் கிடந்த அந்தப் பொழுதில் எழுதி விட்டார்கள்.

காலத்தின் மீது சுற்றி இடப்பட்ட வளையம், தகர்த்து வெளியேற முடியாதபடி அவனது குரல் வளையில் நெரித்தது. எல்லாம் முடிந்ததான ஒரு வெறுமை அவனுக்கு முன்னேயும் பின்னேயும் படிகளில் ஏறியிருந்தது.

மழைதவிர மற்ற எல்லாமே செத்துப்-போயிருந்த அந்த இருபது நிமிட நேரத்தில் - நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பேசியதில் பாதிக்கு மேல் புரிந்து கொள்ளக்-கூடியதாயிருந்தாலும், இனி அதில் எந்தவித பலனும் இல்லையென்பதை அவன் நன்கே உணர்ந்திருந்தான். அதனால், அவன் குறித்த அவர்களது மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ இல்லை. அல்லது அவர்களது தோள்களில் தொங்கிக் கொண்டிருந்த ஆயுதத்தின் மீதும் கோபத்திலும் வெறித்தனத்திலும் சிவப்பேறிய அவர்களது கண்களின் மீதும் அவனது வார்த்தைகளனைத்தும் கட்டுண்டு போயின.

நத்தையைக் கவ்விக் கொண்டு பறந்து போகும் செண்பகத்தை ஞாபகப்படுத்தியது அவர்களின் செயல்கள் அனைத்தும்: முரட்டுப்பச்சைத் துணிகளால் மூடியிருந்த அவர்களது இருதயத்திலிருந்து என்னவிதமான ஒலிகள் எழுகின்றன என்பது குறித்துக் கண்டுபிடிக்க முயன்றான்.

கடைசியில் எல்லா முயற்சியிலும் தோற்றுப்போய், காற்சட்டைப் பையிலிருந்த அவர்கள் ஏற்கெனவே பார்க்க விரும்பிய சகலவற்றையும் பரிசோதிக்க அனுமதிக்களிக்க வேண்டி ஏற்பட்டது. சோர்ந்து போன அல்லது பசியில் நடுங்கிக் கொண்டிருக்கும் கந்தைத் துணிகளால் கட்டி நிறுத்தியிருக்கும் உடலமைப்பைக் கொண்டிருந்த ஒரு மனிதனிடம் அவர்கள் தேடும் எதுவுமே இருக்காதென உண்மையில் அவர்களுக்கு நன்கே தெரிந்திருந்தாலும் பழக்கதோஷத்துடன் கூடிய அவதானத்துடன் அவர்கள் அதனைச்



செய்தார்கள்.

அவன் அந்த நகரத்திற்கு வந்த இருபத்து மூன்றாம் நாள் முன்னெச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையீனத்தால் முழுவதும் பீடிக்கப்பட்டிருந்த போது சீலனுக்கு எழுதிய கடிதத்தை, காற்சட்டையின் பின்பக்கப் பையிலிருந்து மடிப்புகளிடையே சொற்கள் கிழிந்து தொங்கக் கண்டெடுத்தனர்.

ii

மண் கரைந்த தடங்களை அழித்தபடி மழை, காலத்தின் மீது சவுக்காய் விழுந்து கொண்டிருக்கிறது.

iii

நகரின் மத்தியில் மிக உயர்ந்த கூம்பு வடிவ சுவரிலிருந்த நான்கு மணிக்கூடுகளில் ஒன்றுகூட மிகச் சரியாக இயங்கவில்லை என்பதை மழைப்புகாரினூடே ஏதோ கெட்ட கனவொன்றைப் போல அவன் கண்டான். கோபுரத்திற்கு இன்று காலையில் தான் வெண்நிற வர்ணத்தைப் பூசியிருந்தார்கள்.

வர்ணம் சுவருடன் காய்வதற்கு முன்னர் எல்லாவற்றையும் மழை கரைத்துப் போயிற்று. அவனைச்சூழ நிலவிய சாபத்தின் நிழல் வர்ணங் கலைந்த கோபுரத்தின் மீதும் படர்ந்திருப்பதை ஒரு வித நடுக்கத்துடன் அவதானித்தான்.

இப்படித் தான் மிகக் குறைந்தது ஐந்து வருடத்திற்கு ஒரு முறையாவது வர்ணம் பூச யாராவது வந்து விடுகிறார்களென்றும், ஒவ்வொரு தடவையும் மழையோ புழுதியோ அல்லது சூறையோ எல்லாவற்றையும் கரைத்தழித்து கோபுரத்தின் சுயசொரூபத்தை மக்களின் காட்சிக்கு - எப்போதுமே மிகச் சரியாக இயங்காத பெண்டுலங்களுடன் விட்டுச்சென்று விடுகின்றன என்றும் இதே தெருவில், காலையில் தான் யாரோ பேசிக்கொண்டு போனதைக் கேட்டான்;

ஆர்வ மேலீட்டால் எதன் பொருட்டுமற்று அப்பேச்சை அப்போது கேட்கவேண்டியிருந்தது. எந்த வகையிலும் அவசியமானதாயிருக்கவில்லை. எனினும் அவர்கள் பேசியதை - அவர்கள் பேசியதன் சாரத்தை இப்போது நினைவு கூர்ந்தான். நேரத்தை இந்த மரண அவஸ்தையிலிருந்து மீட்கும் பொருட்டு கோபுரத்தினடியில் மாடுகள் சாணமிடுகின்றன. இரவு சலசலக்க கோபுரத்தின் அடியை மூத்திர நாற்றத்தால் நிறைக்கின்றன. சிலவேளை இவை எதுவுமே நிகழாவிட்டால் ஒரு கழுதையாவது தனது நாக்கால் நக்கி நக்கி வர்ணத்தைத் தின்றழித்து விடுகிறது. மீண்டும் வர்ணமடிப்போர் வருகிறார்கள். கோபுர முகட்டின் அடுக்குகளிலிருந்து புறாக்களை விரட்டுகிறார்கள். கூடுகளை விட்டுப் பறந்துபோன புறாக்கள் திசைக்கொன்றாய் மீண்டும் கூடு திரும்ப இயலா ஏக்கத்துடன் பறந்து போகின்றன; இனியற்று.

கோபுரத்தின்
நிழலில்
பூசியவர்ணங்களில்,
எல்லோரும் கண்ட,
சீராக ஓடும் பெண்டுலம்
பற்றிய கனவு
கடைசிவரை
பலிக்கவேயில்லை
யாருடைய இரவுகளிலும்.

மழையின் இருளிலும் சூரியன் மங்கிப்போன வெறுமையிலும் நேரத்தை ஊகிக்கும் முயற்சிகூடப் பயனற்றதாயிற்று.

சுடுகாட்டு நிறத்தாலான அப்பொழுதில், ஆச்சரியப்படும் வகையில் சீலனுக்காக அவன் எழுதிய கடிதத்தை அவர்களில் ஒருவன் உரத்துப் படித்தான்.

அது, உண்மையில் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. ஏனெனில், இதுவரை, இந்த மூன்று மணிநேரத்தில் நகரின் ஜீவனையே இரண்டு விரல்களில் துப்பாக்கியின் நுனியில் அருவருக்கத்தக்க வகையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் இவர்களில் ஒருவன் கூட அவனுடைய மொழியில் அவனை விசாரணை செய்யவில்லை என்பதைவிட முக்கியமானது, ஒருவனுடைய அந்தரங்கத்தில் எந்தக்கூச்சமும் வெட்கமும் பயமுமின்றி வெகுசாதாரணமாய் அவர்கள் நுளைந்து விட்ட காடைத்தனம் தான்.

கடிதத்தைப் படித்துக் கொண்டிருப்பவனுக்கு முன்னர் தான் அதில் என்ன எழுதினான் என்பதை ஞாபகப்படுத்தும் அவசியம் மிகமிக முக்கியமானதாயிற்று இப்போது. இப்படித்தான், இவையெல்லாம் நிகழ்ந்ததைப்போல எந்த முன்னறிவுப்புமின்றி இக்கடிதமும் எப்போதோ எழுதப்பட்டது.

சீலன், சமரசங்களுடன் வாழ்தல் பற்றிய எல்லாக்கோட்பாடுகளையும் தகர்த்துவிட்டு ஒரு கூட்டிலிருந்து தப்பிவந்து இன்னொரு சிறையில் வீழ்ந்து விட்டதாகவே எண்ண வைக்கிறது இன்றைய வாழ்க்கை.

எந்த நம்பிக்கையில் நான் இந்த நகரத்திற்கு வந்தடைந்தேன். நிச்சயமற்ற எதிர்காலத்தின் பிரஜையான எனது உணர்வுகளுக்கும் கனவுகளுக்கும் என்ன மதிப்பிருக்கிறது இங்கே?

ஓடுகின்ற புகை வண்டியின் இரைச்சலாக அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன செண்பகத்தின் கண்கள்; அவற்றிலிருந்து தப்பித்து எந்தத் தெருவில் ஓடுவது? எந்தத் தெருவிற்கு எந்த முகம்? அல்லது எந்த உடலுக்கு? எங்களால் இனங்காண முடியாதிருப்பது எதன் நிமித்தம். எல்லா இடங்களிலும் குப்பைத் தொட்டிகள் இருக்கின்றன. யாருமே குப்பைகளைத் தொட்டிகளில் எறிவதில்லை. நாங்களோ ஒருவித ஆற்றாமையுடன் நூறு வீதமும் புனிதத்தை விரும்புகிறோம்; எதிர்பார்க்கிறோம். இந்தச் சாத்தியமற்ற எதிர்பார்ப்பு எமது வாழ்வின் மீதே திரும்பி விடுகிறது முள்ளாக.

இந்த வேதனையிலும் துயரிலும் யாருக்குத்தான் தெரிகிறது முட்கள் குத்தும் வரை, குத்தும் என்று.

1999.08.24 செவ்வாய்க்கிழமை.

நீ அவசியம் பார்க்க வேண்டிய நாட்குறிப்பின் ஒரு பகுதி:-

'சே' வந்திருந்தான். இன்று பிறந்த நாளாம். நான் நினைக்கிறேன், இது அவனுடைய இருபத்து மூன்றாவது பிறந்த நாளாக இருக்கலாம். அவனுக்குக் கொடுப்பதற்காக என்னிடம் எதுவுமே இருக்கவில்லை. நான் இன்னும் காலை உணவு சாப்பிடவில்லை. நேரம் 11.38 - மதியமாவதற்குச் சற்றுமுன் - டைத் தாண்டி விட்டது.

நான்கு பக்கமும் கிழிந்த - கயிற்றால் நன்கு பிணைக்கப்பட்டிருந்த அட்டைப் பெட்டியிலிருந்த - அந்த அறை முழுவதும் நிரம்பியிருந்த ஒரே பொருள் அதுதான்- புத்தகமொன்றை வாசித்துக் கொண்டிருக்கிறான். கனமான இறுக்கம். அறைமுழுக்கப் பரவியிருந்தது - நான் எழுதுகிறேன் - நீண்ட நேரத்திற்குப் பிறகு சோர்ந்து களைத்துப் போய் அவன் இந்த அறைக்குள் வந்ததிலிருந்து மூன்றாவது வார்த்தையைப் பேசினான். இதற்கு முன் நான் அவனை இப்படிப் பார்த்ததேயில்லை- சாரத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னரிருந்தே தேனீர் அருந்துவதற்கான பணம் கூட அவனிடம் இல்லை. ஊரிலேயே இருந்திருக்கலாம் என்று சொன்னான். நான் அதை எப்போதோ உணர்ந்து விட்டேன். பசியும், வீதிகளில் இறங்கப் பயமுமாய் இந்தக் காலம் கழிகிறது. பின்னேரம் அவன் போய் கொஞ்ச நேரத்தில் எதுவுமே எழுத மனமற்று வெறுந்தரையில் படுத்துக் கிடந்தேன். இன்று முழுவதும் நாங்கள் சாப்பிடவில்லை. முகட்டு வளைக்குள்ளிலிருந்து பூனை ஒன்று எதையோ வெறித்துக் கொண்டிருக்கிறது. எலிபற்றிய அதன் நம்பிக்கையோடு.

0

சந்திரபோஸ் சுதாகர்

நன்றி - நூலகத்திட்டம்



'சே'யை அவர்கள் கைது செய்துவிட்டார்கள். சரியாக ஞாபகமில்லாத ஒரு திகதியில். மூன்று மணிக்கும் 3.15ற்கு மிடையில் ஊர்பற்றிய ஞாபகங்களோடு கடற்கரையின் உப்புக்கசியும் மணலில் உட்கார்ந்திருந்த போது அல்லது கடலின் முடிவற்ற நீட்சி பற்றிய பிரமையில் மனம் வசமற்றிருந்த போது இது நடந்திருந்தது. நான் கவனித்தேன். அவனை அந்த மணலில் இழுத்துச் சென்ற போது எல்லோருடைய கண்களும் செண்பகத்தின் கண்களையே பெரிதும் ஒத்திருந்தன.

சீலன், நாங்கள் மிகமிகச் சாதாரணர்களாகவே இருந்திருக்கிறோம்; உழைத்துச் சாப்பிட்டு தூங்கிப் பின் சாப்பிட்டு... இப்படியிருந்த எங்களுக்கு அவர்களோ கண்ணீரைப் பரிசளித்தார்கள். சாவையும் அழிவையும் துயரையும் பரிசளித்தார்கள். இருப்பழித்து வீதிகளில் அலைய வைத்தார்கள். திக்கற்றலைந்து அவர்களில் விழுந்த எங்களை விலங்குகளைப்போல இழுத்துச் சென்று சிறைகளில் அடைத்தார்கள்.

'சே' என்ற வறுமையிலும் துயரிலும் மெலிவுற்ற ஆனால் கனவுகளால் உறைந்து போயிருந்த எங்களது நண்பனுக்கு சிறிதும் பொருத்தமற்ற உடற்தோற்றத்தில் நாங்கள் சூட்டிய அந்தப் பெயர் எப்போதும் போல துரதிருஷ்டம் மிக்கதாகவே ஆகிவிட்டது இப்போதும்.

அவன் கைது செய்யப்படுவதற்குச் சற்றுமுன்னர் தரிசான வயல் வெளிகளில் நீர் வரண்ட ஆற்று மணலில் - எனினும் எப்போதாவது வரும் என எதிர்பார்க்கப்பட்ட நீர் பற்றிய கனவுகளோடு குண்டுச் சத்தங்களால் துரத்தப்பட்ட போதும், ஊரின் பழந்தெருக்களில் நடந்து போவதான பிரமையுடன் மிக மெதுவாக ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையில் நீண்ட இடைவெளியை அனுமதித்து சொல்லிக்கொண்டிருந்தான். - இடையே கடல் பற்றியும் பேசியிருக்க வேண்டும்- அவனுடைய இருதயத்திலிருந்து அந்தப் பிரமைகள் வடிந்தடங்கு முன்னரே அவனை அவர்கள் இழுத்துச் சென்று விட்டார்கள்.

சீலன், இது நிகழ்ந்ததற்கான பிரத்தியேக காரணங்கள் எதுவும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. அவன் தனது அந்திம காலத்தில் - அவனைப் பொறுத்தவரையில் இது ஒரு வகையில் அந்திமகாலமாகவே இருந்தது - அனேகமான பொழுதுகளை என்னுடன் தான் கழித்தான் என்பதால் எனக்குத் தெரிந்து இக்காலத்தில் அவன் செய்த இரண்டே குற்றங்கள், வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்காததும் - உண்மையில் அவன் அதைக் கொடுக்கவில்லையே தவிர, அதன் வேதனையாலும் அவமானத்தாலும் குறுகிப் போனான் - நூலகங்களிலிருந்து இதுவரை மூன்று நூல்களைத் திருடியதும் தான்.

ஒரே பிரயாணப் பையுடன் இந்த நகரத்தை வந்தடைந்த எங்களை மிருகங்களைப்போல தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருந்து இருபத்திநான்கு மணிநேரத்தில் 23 ¼ மணிநேரத்தை தூக்கத்துக்கோ ஏனைய மிகவும் அவசியமான தேவைகளுக்கோ அனுமதியளிக்காமல் இரண்டு மாதத்திற்குப் பின்னர் மிகமோசமான விசாரணையின் முடிவில் நாங்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டோ-மெனினும், நூலகப் பத்திரத்தில் கையொப்பமிடக்கூடிய தெரிந்த மனிதர்கள் யாரும் எங்களுக்கு இருக்கவில்லை. இதனைக் காரணமாக்கி அவனுக்கான நூலக அனுமதியை வன்மையாக மறுத்து விட்டனர்: அது சார்ந்த அதிகாரிகள்.

அவன் புத்தகங்களைத் திருடிக் கொண்டு வெளியேறிய எச்சந்தர்ப்பத்திலும் யாரிடமும் அகப்படவில்லை என்றும் மாறாக, தான் திருடிய புத்தகங்கள் அனைத்தும் தடித்த தூசுப்படலம் நிரம்பியதாக-

- இருந்தும் ஒரு வகையில் இப்போதைக்கு யாரும் அவற்றைத் தேடப்போவதில்லை என்ற நம்பிக்கையைத் தருவதாகவும் என்னிடம் அவன் பல தடவைகள் சொல்லியிருக்கிறான்.


இப்படியிருக்க இந்த இரண்டு குற்றங்களுக்காகவுமா அவனை அவர்கள் நாயை இழுத்துச் செல்வதைப் போல இழுத்துச் சென்றார்கள்.

எனினும் நான் நம்பிக்கையை முற்றிலும் இழந்து விடவில்லை. நிச்சயம் அவன் எங்களை மீண்டும் எப்போதாவது சந்திப்பான். ஒன்றில் சித்திரவதை செய்யப்பட்ட; விரல்கள் பிடுங்கப்பட்ட; மொட்டையடிக்கப்-பட்ட தலையோடு அல்லது பிணச்செய்தியாக, என்னதானிருந்தாலும் நாங்களும் அவனைச் சந்தித்தேயாக வேண்டும், ஏனெனில் அவன் உழைத்ததையும் சாப்பிட்டதையும்போகப் பட்டினி கிடந்த காலங்களே அதிகம்.

0

1999.06.12. திங்கட்கிழமை இரவு ஒரு மணிக்கு மேல் எழுதிய நாட்குறிப்பு:

நந்தாவிற்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அவள் ஏற்கெனவே மூன்று வருடங்களின் முன் ஒரு ஆண்



குழந்தைக்குத் தாயானவள் என்றும் அப்போது அவள் கணவன் கூடவே இருந்தான் என்றும் சாப்பாட்டுத் தட்டுக்களுடன் கூடியிருந்த நீண்ட வரிசையில் எனக்குப் பின்னே கேட்டது. இப்போது மட்டுமல்ல அவள் அந்த முகாமில் அடைக்கப்பட்ட சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அவளும் அவளது மூத்த குழந்தையும் தங்கள் எதிர்காலத்திற்காக நம்பியிருந்த பாதுகாவலனை சந்திக்கவேயில்லை என்பது உட்பட வறுமையிலும் நோயிலும் கறுத்துச் சுருண்டிருந்த இப்போது பிறந்திருக்கும் பெண் குழந்தைக்குத் தகப்பனான 17 வயதே நிரம்பிய சரசுவின் காதலன் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கிணற்றடியில் பெண்கள் குளிக்க முடியாதபடி அது திறந்த வெளியாயிருக்கிறது; இராணுவத்-தினர் தமது பச்சை உடுப்புகளுக்கு மேலாய் செண்பகக் கண்களுக்கு மேலாய் சுடுவிரல்களின் மேலாய் அவர்களை இம்சிக்கிறார்கள்.

ஆண்களை அனுப்பி சிகரெட் பெட்டியும் லைட்டரும் சிவப்பு முத்திரைப்பழைய சாராயமும் வாங்கிவரப் பணிக்கிறார்கள். எல்லாம் திட்டமிட்டபடி. அவர்கள் முகாம்களிலும் வீதிகளிலும் மிருகங்களை ஞாபகப்படுத்தியபடி அலைந்து திரிகிறார்கள். நீயே சொல். மனிதன் தான் மிருகம் எனக்கருதும் - தீங்கு செய்யும் - எந்த ஜந்துவிடமாவது ஆத்திரம் கொள்ளாமலிருக்க முடியுமா? இது, நான் சொல்வதை நீ எவ்வாறு புரிந்து கொள்கிறாய் என்பதைப் பொறுத்ததெனினும் தயவு செய்து கேள்.

அதிகாரம் தனது இருதயத்தாலல்ல துப்பாக்கிகளாலும் தோட்டாக்களாலும் தன்னை முண்டுகொடுத்து வைத்திருக்கிறது. அது அவற்றை இழக்கும்வரை - இந்த இழப்பு என்பது எப்போதும் அவர்களால் பாழில் வீழ்த்தப்பட்ட மனிதர்களைப் பொறுத்த விசயமாகவே இருந்து வருகிறதெனினும் - நாடோடி மனித வாழ்வும் அப்பாக்களில்லாத குழந்தைகளும் இரண்டு அப்பாக்களை உடைய குழந்தைகளும் யாருமற்ற குழந்தை-களும் சிறையும் சித்திரவதையும் சாவும் பீதியும் தவிர்க்க முடியாததாகி விடும்.

இன்றைய நடுங்கும் இரவில் எல்லோரும் தீ மூட்டுவது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்; தீ தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாக மாறி விட்டது. இப்போது எல்லோர் மனங்களிலும்.

கடிதம் இப்படி இடையிலேயே நின்று விடும் என்று அவர்களில் யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கடிதத்தில் திகதியிடப்படவில்லை. கையொப்பமே கூட இருக்கவில்லை; சிலவேளை எழுதுவதற்கு இன்னும் நிறைய விடயங்கள் இருந்திருக்-கலாம்; எதன்பொருட்டோ அது முடிக்கப்பட்டதற்கான எந்த ஆதாரங்களையும் கொண்டிருக்கவில்லை.

மழை, சூழலில் நிலவியிருந்த கல்லின் மீது அதுவும் ஒரு கல்லாய் விழுந்து தெறித்தது.

மிகப்பயங்கரமான ஜந்துவைக் கண்டு விட்டதான நடுக்கம் கடிதத்தின் மீதிருந்து அகலாத அவர்களின் கண்களில் ஊர்ந்ததை அவன் உணர்ந்தான்.

இவ்வாறானதொரு குற்றச்சாட்டில் தான் கைது செய்யப்படப் போவது தவிர்க்க முடியாதென்று நினைக்குமளவிற்கு அவர்கள் எல்லோரது முகங்களும் மாறிப்போயின.

தான் நின்றிருந்த சூழலைக்கடந்து வீதியைத்தாண்டி வலையில் அகப்பட்ட எல்லாவற்-றையும் மீறி அவனுடைய பார்வை, புறாக்கள் பறந்து போன, கடந்த சில மணிகளின் முன்னர் தான் வெள்ளையடிக்கப்பட்ட எப்போதுமே மிகச் சரியாக அல்லது அண்ணளவாகவேனும் இயங்காத கோபுரத்திலிருந்த மணிக்கூட்டின் மீது வீழ்ந்ததை அவனால் தவிர்க்கவே முடியவில்லை.

கணத்தில், எந்த முன்னறிவிப்புமின்றி, திடீரென அவன் மீது விழுந்த வலி எதன் பொருட்டு நிகழ்ந்ததென உணரும் சக்தி அதே வலியால் நிராகரிக்கப்பட்டது.

'சே'யை இழுத்துச் சென்றதைப் போல, அவனை அவர்கள் இழுத்துச் சென்றார்கள்.

தெருவில் இறங்கிய போது, ஈக்களும் குட்டையும் நிறைந்த வலியாலான நாயொன்று இன்னொரு நாயை துரத்திக் கொண்டிருப்பதை அவன் கண்டான். ஒரு சந்தர்ப்பத்தில் துரத்தப்பட்ட நாய் வெறுமனே வந்து கொண்டிருந்த வேறு நாயொன்றைத் துரத்தத் தொடங்கியது. வீதி முழுக்க படர்ந்து போயிருந்த அவனது கண்களின் நிழலில் நூறு நாய்களின் கூட்டம் சொல்லிடங்கா அருவருப்புடன் ஆனால் வெறியுடன் பிறாண்டிக் கொண்டிருந்தது; வாழ்வின் எல்லாத் தகுதிகளையும் நிராகரித்து.

◎

## கொடூரமும், இரவும், தேடலும்

என் நிலவு எங்கே?
கருமேகங்கள் நிறைந்த வானில் என்
நிலவைத் தேடுகிறேன்
கண்ணுள் சிக்கிய தொலைவு வரை
இருட்டிப்போன
பேய் மரங்கள்தான் தெரிகின்றன
இவற்றுள் எங்கே
என் நிலவை நான் காண்பது?
பெரிய அலைகள் அடிக்கும் சத்தமும்
பாம்புகள், தவளைகள் இரைச்சலும்
எனை மிகத் திகிலூட்டுகின்றன.

இதென்ன,
இவ்வாறாய் ஓர் கொடூர இரவு
என்னை நெஞ்சைப் பிளந்து.........
என் இதயத்துடிப்பு காதில் கேட்கிறது
ஓர் சிறு துளி வெளிச்சமேனும்
எனக்குத் தெரியவில்லை
முன்னொருபோதும் இவ்விதம்
நேரவும் இல்லை
பேய் மரங்கள் தான் இன்னமும்
அச்சமூட்டுகின்றன

ஏனோ இது நாள் வரை
ஒளியிருந்தும் என் கண்கள்
திறத்தலற்றிருந்தன
நேற்றைக்கு முதல் தினம் அவள்
மிதித்துத் துவைத்து
சாகடிக்கப்படும் வரை
இன்று தான் தோன்றிற்று
என்னுள் இத் தேடல்

எங்கு போய்த் தொலைந்தனர்
இவர்கள்
என்னவர்கள்
நீண்டு அந்தோ தெரியும்
வெற்றுப் பாதையில் அசைவற்று
கற்களாய் உறைந்திருப்பன
இவர்களுடைய உடல்கள் தாமோ?
என்னதான் ஆயிற்று
பெருத்த ஓசையுடன் எழும்
வெறும் காற்றுக்குக் கூட
அசைந்தசைந்து இயலுமையற்று
இவர்கள் இவர்கள்
என்ன தான் நிலையிது

எவ்விதமெனினும்
நாளை இவர்கள்
இறத்தல் மட்டும் உறுதி
மிதிபட்டோ அல்லது நசிபட்டோ
ஆக்கினைகளுற்று இறப்பதென்பது
மிக மிக உறுதி
என்றேனும் அதிசயமாய்
கண்கள் விழித்தாலேயே யன்றி

- பெண்ணியா

நன்றி - நூலகத்திட்டம்



பேராசிரியர் சுசீந்திரராஜாவின்

# தமிழ் மொழியியல் சிந்தனைகள்

தமிழுக்கு ஒரு புதிய வரவு

மொழியியலாளர்களான தமிழகத்தைச் சேர்ந்த கலாநிதி க.ராசாராம், மற்றும் ஈழத்தைச் சேர்ந்த ஆர். சுபதினி ஆகியோரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சு.சுசீந்திரராஜாவின் பதினைந்து ஆய்வுக்கட்டுரைகள் 'தமிழ் மொழியியற் சிந்தனைகள்' எனும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியியல் சம்பந்தமான நூல்களின் வரவு, ஈழத்து புத்தக உலகுக்கு புதிய ஒன்றாகும்.

ஈழத்தின் மொழி பற்றிய ஆய்வின் வரலாற்றை ஆறுமுக நாவலருடன் ஆரம்பிப்பதாக கொண்டால் அத்துறையில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மற்றும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரை நாம் இனங்காணலாம். அந்தப் பாரம்பரியத்தின் வழித்தோன்றலாக கடந்த அரை நூற்றாண்டு காலமாக அமைதியாக ஆனால், காத்திரமான தன்மையில் ஈழத்து தமிழ் மொழியின் இயல்புகளை குறிப்பாக, யாழ்ப்பாணத்து தமிழின் இயல்புகளை புறநிலை நோக்குடனும், விஞ்ஞானபூர்வ அணுகுமுறையுடனும் மொழியியல் ஆய்வுப் புலமையுடனும் பேராசிரியர் சுசீந்திரராஜா அவர்கள் எழுதிய கட்டுரைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் பின்னர் இலங்கையிலும் தமது புலமைசார் கல்வியினைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் அவர்கள் ஈழத்தில் மகாவித்துவான் கணேச ஐயர், வித்துவான் வேந்தனார், பண்டிதர் நமசிவாயம் இளமுருகனார், நவநீத கிருஸ்ணபாரதி, முத்துக்குமாரு மற்றும் பண்டிதமணி எஸ்.கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் பேராசிரியர் மு.வரதராசன், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் மற்றும் அ.ச.ஞானசம்பந்தர் ஆகியோரிடம் கல்வி கற்ற சிறப்புக்குரியவர். இங்கிலாந்தைச் சேர்ந்த ஆர்.இ.ஆசர், அமெரிக்க நாட்டு ஜேம்ஸ் கெயர் மற்றும் சிங்கள பேராசிரியர் டபிள்யு.எஸ்.கருணாதிலக ஆகியோருடன் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவர்.

தமிழ் மொழியியற் சிந்தனைகள் என்னும் இந்நூலில் உள்ள கட்டுரைகள் நான்கு பிரிவுகளுக்குள் அடங்குகின்றன. அவை பொது மொழியில் யாழ்ப்பாணத்தமிழ், மொழி கற்றலும் கற்பித்தலும், நாட்டார் பாடல் என்பனவாகும். பொது மொழியில் பகுதியில் ஒலித்துணை உகரம், மரபுத் தொடர்கள், மொழித் தொடர்பு ஒலி ஒப்புமையால் எழுந்த நம்பிக்கைகளா? விபுலானந்த அடிகளாரின் மொழிச் சிந்தனை பண்டிதமணியின் மொழி நடை, உறவுப்பெயர் அமைப்பு ஓர் உறவு என்கிற தலைப்புக்களில் கட்டுரைகள் அமைகின்றன.

யாழ்ப்பாணத்துத் தமிழில் விசேடமாக காணப்படும் பழைய வழக்கான மெய்யில் முடிவடைய வேண்டிய சொற்கள் சில இந்தியத் தமிழில் உகரம் பெற்று முடிவதனை இக்கட்டுரையில் எடுத்துக் காட்டுகின்றார் பேராசிரியர். உதாரணமாக மரம், பாய், கண், பால், வாத்தியார் போன்ற யாழ்ப்பாணத்து வழக்கு சொற்கள் இந்திய தமிழில் மர, பாயி, கண்ணு, பாலு, வாத்தியாரு என உகரம் பெற்று முடிவதனை எடுத்துக் காட்டி இலக்கிய வழக்கு ஒலித்துணை உகரம் பெற்று முடிவடைவதில்லை எனவும், யாழ்ப்பாணத் தமிழ் இலக்கியத் தமிழுக்கு நெருங்கி இருப்பதையும், சுட்டிக் காட்டுகின்றார் கட்டுரையாளர். ஆனால், இன்றைய நிலைமையில் கல், பல், பில் போன்ற சொற்கள், கல்லு, பல்லு, பில்லு என வழங்குவதை எடுத்துச் சொல்லி அதற்கான மொழியியல் காரணத்தையும் குறிப்பிடுகின்றார்.

மரபுத் தொடர்கள் என்ற கட்டுரையில் ஆங்கிலத்தில் உள்ள இடியம் (idiom) என்று சொல்லுக்கு சமனாக மரபுத் தொடர் என பாவிப்பதில் உள்ள சிக்கல்கள் விளக்கப்படுகின்றன. தமிழில் பழமொழி உவமை, என தனித்து சொல்லப்படுவதையும் ஆங்கிலத்தில் இடியம் என்னும் பதத்தில் அடங்குகின்றன. உதாரணமாக to rob Peter and to pay Paul என்பது 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது' என்னும் பழமொழியாகக் காணப்படுகிறது. உவமை தொடர்களிலுள்ள 'போல' என்பதை நீக்கிவிட்டால் மரபுத் தொடர் ஆகின்றது. உதாரணமாக: குன்றின் மேல் இட்ட விளக்குப் போல என்பது 'குன்றின் மேல் இட்ட விளக்கு' என்றும் வரும்போது மரபுத் தொடராகின்றது. இவ்வாறு பல்வேறு மொழியியல் அறிஞர்களின் கருத்துகளை எடுத்துக்கூறி இடியம் என்பதற்குரிய விரிந்த பொருளை ஆசிரியர் விளக்குகின்றார். எனவே மரபுத் தொடர் என்பதைவிட மரபுவழக்கு என்பதே இடியம் என்பதின் முழுக்கருத்தை வெளிக்கொண்டிருக்கிறது என்று நிறுவுகின்றார்.

'மொழி தொடர்பு' என்ற கட்டுரையில் மொழிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துகின்ற போது அவை ஒன்றுக்கொன்று செல்வாக்குச் செலுத்துவது பற்றியும் மொழிக் கலப்பும், பிற மொழிப் பாவனையும் ஏற்படுத்தும் விளைவு பற்றியும் விளக்கப்படுகின்றது. பிறமொழி சொற்கள் கலக்கின்றபோது அவை மாற்றம் ஏற்பட்டு இணைதல் ஒன்றாக கலத்தல் பின்பு வழக்கிழத்தல் மற்றும் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் என பல்வேறு நிலைகள் இங்கு கூறப்படுகின்றன.

தமிழில் வடமொழி கலப்பும் அதன் செல்வாக்கும் அதன் வரலாற்று காலந்தோறும் ஏற்பட்டு வந்ததைக் குறிப்பிட்டு பல்வேறு மொழிகளுடனும், தமிழ் கலந்ததனால் அது பெற்ற வளர்ச்சி பற்றியும் கூறி இலக்கண ஆசிரியர், மற்றும் உரை ஆசிரியர்கள், கருத்துக்களையும், ஆதாரங்களாக காட்டுகின்றார்.

விபுலானந்த அடிகளாரின் மொழிச் சிந்தனை எவ்வாறு இன்றுவரை நவீன மொழியியலாளர்களால் ஏற்கப்படுகின்றது எனவும், பேச்சுச் தமிழின் பயன்பாடு மற்றும் பிறமொழி தொடர்பும் எவ்வாறு




பேராசிரியர் சுசீந்திரராஜாவின்
**தமிழ் மொழியியற் சிந்தனைகள்**
- ஓர் அறிமுகம்

தொகுப்பாசிரியர்கள்:-
டாக்டர் சு.இராசாராம்
ஆர் .சுபதினி

வெளியீடு:-
ரிஷபம் பதிப்பகம்
31/45, இராணி அண்ணா நகர்,
சென்னை 600078,
இந்தியா

விலை:- 100/=

தமிழின் சொற்களஞ்சியத்திற்கு உதவின என்கிற விபுலானந்தரின் கருத்துகளையும் அடுத்த கட்டுரையில் காணலாம்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மொழி நடை பற்றிய மற்றைய கட்டுரையில் அவரது நடையை அழகானநடை என வெறுமனே கூறுவதைவிடுத்து ஒப்பியல் அடிப்படையில் புள்ளியியல் அணுகுமுறை கொண்டு அவரது 'இலக்கிய வழி' என்னும் நூலை ஆய்வுக்கு உட்படுத்துகின்றார். பேராசிரியர் பண்டிதமணி சிறு சிறு வாக்கியங்களை கருத்தாழம் உள்ளதாக எழுதும் சிறப்பையும் அவர் பேச்சுமொழி அமைப்பை கையாண்டதிறத்தையும் சுட்டிக்காட்டுகின்றார்.

பொது மொழியியல் பிரிவில் இறுதிக்கட்டுரையாக உள்ளது, 'உறவுப் பெயர் அமைப்பில் ஒரு உறவு'. இது தமிழ் நாட்டு கன்னியாகுமரி பகுதி மக்களும், ஈழத்து யாழ்ப்பாணத்தவர்களும் கையாளும் உறவுப் பெயர்களின் அமைப்பில் காணப்படும் ஒப்புவமையை எடுத்துக் காட்டுகின்றது. 'அப்பன்- கொப்பன்', 'அய்யா - கொய்யா', 'அப்பச்சி - கொப்பச்சி', 'அம்மா - கொம்மா', 'அண்ணா - கொண்ணன்' போன்ற வழக்குகள் இருபகுதி மக்களிடையேயும் வழக்கில் உள்ளதை எடுத்துச் சொல்லி யாழ்ப்பாணத்து தமிழில் 'அப்பு - கொப்பு' 'ஆச்சி - கோச்சி', 'அக்கா - கொக்கா', 'அத்தான் - கொத்தான்' என்பனவும் வழக்கில் இருப்பதை எடுத்து விளக்குகின்றார்.

இவை முன்நிலை வழக்கு அமைப்புப்பெற்று வருகின்றன எனவும் இது தமிழுக்கே உரிய சிறப்பு என்றும் கூறுகின்றார். அத்தோடு இவ் உறவுப் பெயர்கள் தன்மை - முன் நிலை - படர்க்கை ஆகிய இடங்களுக்குரிய தனித்தனி உறவுப் பெயர்களாக பண்டைய இலக்கியங்களில் விளங்கி வந்தவற்றையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

இந்த நூலில் இரண்டாவது அம்சமாக கொள்ளத்தக்கது யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழை ஆராயும் கட்டுரைகள், யாழ்ப்பாணத்து பேச்சுத்தமிழின் ஆக்கப்பெயர்கள் பெயரடி வினையடி மற்றும் பெயர்அடை அடியைக் கொண்டு அமையும் முறையை மொழியியல் நோக்கில் விளக்குகின்றது ஒரு கட்டுரை. அடுத்து இலங்கைத் தமிழ் மொழி - ஒரு குறிப்பு - எனும் கட்டுரை இலங்கைத் தமிழ் மொழியின் சிறப்பான இயல்புகளைக் கூறிச் செல்கின்றது. பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்து வரும் சிறப்புக் காரணமாக அது இந்திய தமிழ் மொழியில் இருந்து பல விதங்களில் வேறுபட்டு பழந்தமிழ் அமைப்புடன் ஒத்துப்போவதை கட்டுரை விளக்குகின்றது. முக்கியமாக இந்திய பேச்சுமொழி, இலங்கைப் பேச்சு மொழியிலிருந்து பெரிதும் வேறுபடுவதை நாம் அவதானிக்கலாம். இத்துடன் சிங்கள மொழியில் தமிழ் மொழியின் செல்வாக்கால் பல தமிழ் சொற்கள் அம்மொழியில் வழங்கி வருகின்றது என்பதனை வரலாற்று அடிப்படையில் காட்டிச் செல்வதோடு மறுதலையாக சிங்கள மொழிச் சொற்களின் பயன்பாடு இலங்கைத் தமிழ் மொழியில் மிகவும் அரிது என்பதையும் ஆசிரியர் கூறுகிறார். அதேவேளை போத்துக்கேச டச்சு சொற்கள் மற்றும் ஆங்கிலச் சொற்கள் தமிழுடன் கலந்து இருப்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

யாழ்ப்பாணத்து தமிழ் எவ்வாறு சமூக வாழ்க்கையை புலப்படுத்தி நிற்கிறது என்பதனை 'மொழியில் சமுதாய படிநிலைகள்' எனும் கட்டுரையில் காணக் கிடைக்கிறது. ஏவல் வினையை பேச்சுக்களில் பயன்படுத்தும்போது அது சமுதாய படிநிலையை ஒட்டி 'வா', 'இரு' எனவும், 'வாவன்', 'இரன்', 'வாடா', 'இரடா', 'வாரும்', 'இரும்', வாருங்கள்', 'இருங்கள்' எனப் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது. இவ்வாறாக அவை பெறுகின்ற விகுதி மற்றும் இடைச்சொல் உருபுகளின் பயன்பாட்டை எடுத்தாள்கின்றார்.

<u>இன் நூலின் மூன்றாவது பிரிவுக்குள் மொழி கற்றலும், கற்பித்தலும் எனும் பிரயோக மொழியியல் பகுதியினை தொகுப்பாசிரியர்கள் அடக்குகின்றார்கள்.</u> இலங்கை போன்ற பலமொழி பேசும் நாட்டில் தமிழை இரண்டாவது மொழியாக குறிப்பாக சிங்கள மக்களுக்கு கற்பிக்கும்போது தற்கால மொழியியல் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை கட்டுரை வலியுறுத்துகின்றது. முதலில் பேச்சு மொழியை கற்றல் வேண்டும். அதற்கு சிங்கள மக்கள் மத்தியில் பரந்து பட்டு வாழும் இந்தியத் தமிழர்களின் அல்லது முஸ்லிம்களின் பேச்சு மொழியையே கிளை மொழியாகக் கொண்டு கற்பிக்கலாம் என்பதும் எழுத்துத் தமிழை பொறுத்தவரையில் யாழ்ப்பாண அல்லது மட்டக்களப்பு தமிழை அடிப்படையாகக் கொள்ளலாம் என்பதும் மொழியியல் அடிப்படையில் ஆசிரியர் முன்வைக்கும் கருத்துக்களாகும். இங்கு <u>ஒலியியல், ஒலியனியல்</u> ஆகிய இரு நிலைகளில் மட்டும் இக்கட்டுரையில் ஒப்பீட்டாய்வை நூலாசிரியர் மேற்கொள்கின்றார். இதேபோல உருபனியல், வாக்கியவியல், சொற்பொருளியியல் ஆகிய நிலைகளிலும் சிங்கள மக்கள் தமிழை கற்றலிலும், கற்பித்தலிலும் எழக்கூடிய சிக்கல்களை ஆய்விற்குட்படுத்த வேண்டும் என ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

'மொழியியலும் மொழிபயிற்றலும்' எனும் கட்டுரை ஒரு நீண்ட கட்டுரையாக அமைகிறது. மொழியாசிரியர் மொழியின் இயல்பை அறிய வேண்டிய அவசியத்தையும், அதனைப் புறநிலை நோக்கில் நவீன மொழியியலின் பார்வையோடு அதன் அமைப்பை அவதானிப்பவராகவும், பற்றற்ற நிலையில் வாக்கியங்களை வேற்றுநிலை வழக்காகக் காணும் தன்மையுடன் பேச்சு மொழியின் வீச்சையறியும் திறனுடையவராகவுமிருத்தல் வேண்டும் எனக் கட்டுரை விரிகின்றது.

அதேபோல 'தமிழ் மொழி பாடல் நூல்களில் எழுத்துத் தமிழும் பேச்சுத் தமிழும்' எனும் கட்டுரையும் 'தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் ஒத்த கருத்துள்ள சொற்களும் எதிர் கருத்துள்ள சொற்களும்' ஆகிய கட்டுரைகள் அரச பாட புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவைகளாகும். இந்நூலின் இறுதிப்பகுதியாக கொள்ளத்தக்கது "நாட்டார் பாடல் மொழி" எனும் கட்டுரையாகும். வாய் மொழி இலக்கியமான நாட்டார் பாடல்கள் பேச்சு மொழியிலேயே பாடப்பட்டிருக்கின்றன.

➲19

- கந்தையா ஸ்ரீ கணேசன்

## முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் சட்ட ஆலோசனைப் பிரிவு

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை முஸ்லிம் தனியாள் சட்ட மூலம் அதன் நடைமுறைகளும் தொடர்பான ஆய்வு முடிவுகள், பல்வேறு சம்பவக் கற்கைகள், எமது அமைப்புடன் தொடர்பு கொண்டு எமது உதவியை நாடிய சில தனியாட்களின் பிரச்சினைகள், காதிமாருடன் நாம் கொண்ட கலந்துரையாடல்கள் ஆகியவற்றிலிருந்து துன்பப்படும் பெண்களுக்கு சட்ட அறிவு வழங்கி ஆலோசனைகளைக் கொடுத்து வழிகாட்ட ஒரு சமூக அமைப்பின் தேவை உணரப்பட்டது. இதனை அடையும் பொருட்டே எமது அமைப்பு சட்ட ஆலோசனைப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகளை (முஸ்லிம் சட்டத்தின் கீழ்வரும் குடும்ப விவகாரங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகள், பிரச்சினைகள் போன்றன) அலசி ஆராய்ந்து அதன் பரிமாணங்களை சம்பத்தப்பட்டவர்களுக்குத் தெளிவுபடுத்துதல் பாதிக்கப்பட்டவருக்குத் தேவையான உணர்வு ரீதியான ஆதரவையும் கூட்டுணர்வையும் வழங்குதல் பிரச்சினைகள் தொடர்பான சட்டங்கள் நடைமுறைகளை எடுத்துரைத்தல் ஆறிவூட்டல் என்பவற்றோடு தேவை ஏற்படுமிடத்து குறிப்பிட்ட விடயங்களைக் கையாளும் நிபுணர்கள், அமைப்புக்களிடமிருந்து உதவிகளையும், ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் பெற சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் .

இந்தப்பிரிவில், இரு பயிற்சிபெற்ற ஆலோசனையாளர்களும், நிபுணத்துவம் வாய்ந்த சட்ட அறிஞர்களும் பல்துறை நிபுணர்களும் இடம் பெறுகின்றனர். இதன் மூலம் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி சமூகப் பிரச்சினைகளுக்காக ஆதரவுக்கரம் நீட்டுகின்றது.

கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் தெரியப்படுத்தினால் பின்னர் உங்களைச் சந்திப்பதற்கான தினத்தையும் அதற்குரிய ஏற்பாடுகளையும் எமது முன்னணி மேற்கொள்ளும். உங்களுடன் கலந்துரையாடிய பின்னர் அடுத்த நடவடிக்கை பற்றி தீர்மானிக்கப்படும். அத்தோடு இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியும், தொலைபேசி இலக்கமும்:

**ஏ. ஹனிபா**
சட்ட ஆலோசனைப் பிரிவு,
முஸ்லிம் பெண்கள்ன ஆராய்ச்சி செயல்
முன்னணி,
21,25 பொல்ஹேங்கொட காடின்,
கொழும்பு - 05.
தொ.பே. இல: 074-405902

## அதற்கும் தடையோ?

அண்மையில் கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் மனித உரிமைகள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக காரைதீவிலிருந்து சென்ற தமிழ், முஸ்லீம் யுவதிகளைக் காரைதீவு சோதனைச் சாவடியில் மறித்த விஷேட அதிரடிப் படையைச் சேர்ந்த பெண் சிப்பாய் எங்கே போகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கிற்குச் செல்கிறோம் என்றார்கள். சிப்பாய்க்கு வந்ததே கோபம். மனித உரிமையும், மண்ணாங்கட்டி உரிமையும் என்று சொல்லித் தூஷண வார்த்தைகளால் ஏசிக்கொண்டு கண்டபடி தாக்கினாராம். அவசர காலச் சட்டத்தின் கீழ் மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறதோ ?

*எழுவான்.*

நன்றி - நூலகத்திட்டம்



# சிந்திக்க வைத்த கலைவாணர்

வாழ்க்கையின் எல்லாத் துன்பங்களையும் தன் நகைச்சுவை உணர்வால் மறக்கடித்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷணன்.

ஒரு சமயம் வெளியூர் செல்ல மனப்பதிவு செய்திருந்த என்.எஸ்.கிருஷணன் தனது மனைவி மதுரத்துடன் உற்சாகமாக ரயில் ஏறினார். ரயில் ஓடிக்கொண்டிருந்தது. திடீரென மதுரத்திடம், "இந்த ரயில் ரொம்ப புத்திசாலி தெரியுமா?" என்றார் என்.எஸ்.கே.

"அப்படியா? எப்படிச் சொல்றீங்க" என்றார் மதுரம்.



"எல்லா ரயிலும் சிக்கு புக்கு, சிக்கு புக்கு என்று தான் சத்தம் எழுப்பும். ஆனா இந்த ரயில் வேற மாதிரி சத்தம் போடுதே" என்றார்.

"எப்படிப் போடுகிறது"

"செக்கு புக்கு, செக்கு புக்கு என்று போடுகிறது. ஏன் தெரியுமா? நான் செக் புக்கை வீட்டிலேயே மறந்து வைத்துவிட்டு வந்து ரயில் ஏறிவிட்டேன். அதைத்தான் நினைவுபடுத்துகிறது" என்றார் என்.எஸ்.கிருஷணன்.

'செக் புக்கை மறந்து விட்டோமே, போகிற இடத்தில் செலவுக்கு என்ன செய்வது?' என்ற கவலையில்லாமல் என்.எஸ்.கே. அடித்த ஜோக்கில் மதுரமும் சேர்ந்து சிரிக்க வேண்டியதாயிற்று. இப்படித்தான் வாழ்வில் எந்தக் கஸ்டத்தையும் நகைச்சுவையோடு எதிர்கொண்டார் என்.எஸ்.கிருஷணன்.

எல்லோரையும் குலுங்கக் குலுக்கச் சிரிக்க வைத்த என்.எஸ்.கேயின் வாழ்க்கை வறுமையிலும் கஷ்டத்திலும் தான் துவங்கியது. இயல்பிலேயே அவருக்கு இந்த நகைச்சுவை உணர்வும், கடின உழைப்பும் தான் அவரைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றது.

தந்தைக்குத் தபால் அலுவலகத்தில் வேலை. வருமானம் போதாமல் தாயாரோ வீட்டிலேயே சிறிய சோற்றுக்கடை நடத்தி வந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பம்.

குடும்பத்தின் வறுமை காரணமாகக் கலைவாணருக்கு 4 ஆம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை. வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம்.

எனவே, உள்ளூரில் இருந்த திரையரங்குகளில் சோடா, கலர் விற்கப்போனார். அந்தக் காலத்தில் நாடக அரங்குகளே அதிகம். சோடா விற்கும் போதே நாடகங்களைப் பார்த்து ரசிப்பதில் ஆர்வம் கொண்டார். அதனால் நடிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது.

கலைவாணரது கலைவாழ்வு அவரது 17ஆம் வயதில் 1925இல் தொடங்கியது. டி.கே.எஸ். சகோரதர்களின் நாடகக் குழுவான 'ஸ்ரீ பால சண்முகானந்த சபா'வில் ஒரு நடிகராகச் சேர்ந்தார். 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் சாவித்திரியின் தந்தையாகவும், 'கோவலன்' நாடகத்தில் பாண்டியனாகவும் இளம் வயதிலேயே முதிர்ந்த வேடங்களை ஏற்று நடித்தார். காரைக்குடியில் நடந்த 'மனோகரா நாடகத்தில் நகைச்சுவை வேடமான 'வசந்தன்' பாத்திரம் அவருக்கு வழங்கப்பட்டது. அதில் அவர் மிக அருமையாக நடித்து ரசிகர்களின் ஒட்டுமொத்தப் பாராட்டுகளையும் பெற்றார். அன்று முதல் அக்குழுவின் நிரந்தர நகைச்சுவை நடிகரானார்.

1931இல் என்.எஸ்.கேவுக்கு நாகர்கோயிலைச் சேர்ந்த நாகம்மையுடன் திருமணம் நடந்தது. 1934இல் என்.எஸ்.கேயைப் பேசும் சினிமா உலகம் வரவேற்றது. முதன் முதலாக 'சதி லீலாவதி' படத்தில் நகைச்சுவை நடிகராக நடித்தார். அதே ஆண்டில் என்.எஸ்.கே. நடித்த 'மேனகா' படமும் வெளிவந்தது. திரையில் என்.எஸ்.கேகைக் கண்ட ரசிகர்கள் சிரித்து மகிழ்ந்தனர். அவரது நடிப்பை வெகுவாக பாராட்டிப் புகழ்ந்தனர். 1935ஆம் ஆண்டின் சிறந்த படமாக 'மேனகா' தேர்வு செய்யப்பட்டது.

பின்னாளில் 'வசந்த சேனா' என்ற படத்தில் தன்னுடன் இணைந்து நடிக்க வந்த டி,ஏ. மதுரத்தை அவர் வாழ்க்கைத் துணைவியாகவே ஏற்றுக்கொண்டார். அதன் பின்பு இறுதிவரை இருவரும் இணைந்தே எல்லாப் படங்களிலும் நடித்தனர்.

1939இல் கோவையில் 'அசோகா பிலிம்ஸ்' என்ற திரைப்பட நிறுவனத்தை என்.எஸ்.கே. உருவாக்கினார். அதன் மூலம் 'புத்திமான் பலவான் ஆவான்', 'நவீன விக்கிரமாதித்தன்', 'சந்திரஹரி', 'இழந்த காதல்', 'அலிபாபா' ஆகிய படங்களைத் தயாரித்தார். அவை வெறும் பொழுதுபோக்குப் படங்களாக மட்டும் இல்லாமல் சிரிக்கவும் சிந்திக்கவும் துாண்டும் கருத்துக்கள் அதில் அடங்கியதாக இருந்தன.

திரையுலகில் கொடிகட்டிப் பறந்தாலும் நாடகத்தை அவர் விட்டுவிடவில்லை. தனது பெயரில் நாடக சபா ஒன்றையும் நடத்திவந்தார். 'மனோகரா', 'இழந்த காதல்' ஆகிய நாடகங்கள் அமோக வெற்றி பெற்றன.

பெரும்புகழோடு அவரது வாழ்க்கைபோய் கொண்டிருந்த காலத்தில் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பழி வந்து சேர்ந்தது. அதனால் அவர் இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் செல்ல நேர்ந்தது. அக்காலகட்டத்தில் மதுரம் என்.எஸ் கே. நாடக சபாவைத் தளரா மனத்துடன் தொடர்ந்து நடத்தி வந்தார்.

1947 ஏப்ரல் 25இல் என்.எஸ்.கே. குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார். கலையுலகம் களிப்புற்று மீண்டும் கை நீட்டி வரவேற்றது.

புதிய உற்சாகத்துடன் என்.எஸ்.கே. பிலிம்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடந்தார். 'பைத்தியக்காரன்', 'நல்ல தம்பி, 'மணமகள்' முதலிய சீர்திருத்தப் படங்களைத் தயாரித்து மக்களின் பாராட்டைப் பெற்றார். அதில் 'நல்லதம்பி' அறிஞர் அண்ணாவின் கதை வசனத்தில் உருவானது.

அதேபோல் கலைஞர் கருணாநிதியின் 'பணம்' படத்தைத் தயாரித்தது மட்டுமின்றி அதில் நடித்து இயக்கவும் செய்தார். என்.எஸ்.கே. நடிகராக மட்டுமின்றி நாடக ஆசிரியராகவும், நடன ஆசிரியராகவும், திரைப்படத் தயாரிப்பாளராகவம், இயக்குனராகவும் திகழ்ந்தார்.

அவர் கடைசியாக நடித்து வெளிவந்த படம் 'யார் பையன்?'

என்.எஸ்.கேயின் நாட்டுபற்று அளவிடற்கரியது. கதர் மீதும் காந்தியின் கொள்கைமீதும் அவர் தீராக்காதல் கொண்டிருந்தார். அவரது நாட்டுப்பற்று நாடகத்தில், சினிமாவில், வசனத்தில், கதையில், பாட்டில் என எல்லாவற்றிலும் எதிரொலித்தது.

காந்திமீது கொண்டிருந்த பற்று காரணமாக 1949இல் நாகர்கோயிலில் காந்தி நினைவாக அழகிய ஸ்துாபி ஒன்றை எழுப்பினார். அவரது சமூகத் தொண்டுக்குச் சான்றாகக் 'கிந்தனார் காலட்சேபத்'தைச் செல்லலாம். அதில் சாதியின் வேரறுக்கும் கருத்தும், கல்வியின் பெருமை பேசும் கருத்தும் நிறைந்திருந்தன. அவரது 'காந்தி மாகன் கதை' வில்லுப்பாட்டுக்குப் புத்துயிர் தந்தது.

கலைவாணர் புகழ் எல்லைகளைக் கடந்த ஒன்று. 1951இல் சோவியத் ரஷ்யா அவரைத் தமது நாட்டுக்குச் சிறப்பு விருந்தினராக அழைத்தது. 1952இல் நாடகக் கழகம் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து மகிழ்ந்தது. தென்னிந்திய நடிகர் சங்கமும் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாடியது.

பெரும் பணம் ஈட்டிய கலைவாணர், தனது வள்ளல் தன்மையால் அவற்றை வாரி வழங்கி செலவு செய்தார். ஆனால், அவர் சேர்ந்த புகழை யாரால் வாரியிறைக்க முடியும். ஆனாலும் அவரது திரைச் சித்திரங்கள் இன்றும் கால வர்த்தகமானங்களைக் கடந்து நம்மைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கின்றன.

ரா.சுந்தரமூர்த்தி

நன்றி - ஆறாம்திணை

## யுகம் மாறும் சஞ்சிகை பற்றி... ...!

யுகம் மாறும் கனகச்சிதமாக இருக்கிறதுதானே. கிருஷ்ணராஜாவின் அட்டைப்படம், வடிவமைப்பு எல்லாம் பிரமாதம். நீ அது கிடைத்தவுடனேயே வாசித்திருப்பாய். அங்கிருந்திருந்தால் இழுபறிப் பட்டு வாசித்திருப்போம். எதையாவது அது பற்றிக் கதைத்துமிருப்போம்.

உன்னைப் போலவே நானும் கவிதைகளையும் கதைகளையும் தான் முதலில் வாசித்தேன். இடைக்கிடையேயுள்ள புகைப்படங்களையும், புரட்டும் போது பார்த்தேன். அழகும், இருப்பும் ஆங்காங்கு வெளிப்படுகின்றன. குணாளனின் புகைப்படமொன்றிலும் அமரதாசின் புகைப்படத்திலும் அழகுக்கு அப்பால் தரிசிக்க முடிகிறது.

கவிதையில் சிவசேகரத்தின் பினோஷேவுக்காக எழுதப்பட்ட கவிதை தான் எனக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தது. நட்சத்திரனின் கவிதை கனகாலத்திற்குப் பிறகு வாசிக்கக் கிடைத்தது. கவிதையில் அவன் தனித்துவம் தெரிகிறது. "எப்போதாவது ஒரு நாள்" என்று புத்தகம் போட்டிருக்கிறானாம். பார்த்தாயா? எஸ்போசினதும், உமா ஜிப்பரானினதும் இதிலுள்ளதைவிட நல்லதான கவிதைகளை அங்கிருக்கும் போது வாசித்திருக்கிறேன். இதில் அவசரப்பட்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது. பொதுவாகவே தொகுதிக்கான படைப்புக்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டிருக்கிறார்கள் என்றே தோன்றிகிறது. சிலர் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காகவே எதையாவது அனுப்பியிருக்கிறார்கள். மனுஷ்ய புத்திரன், சுந்தர ராமசாமி கட்டுரைகள், இதுபற்றி தன் கதையிலேயே சொல்லும் மு.புஷ்பராஜனின் ஆக்கம், அறபாத்தின் கதை என்று பலதைச் சொல்லலாம்.

சோலைக்கிளி, கி.பி.அரவிந்தன், வில்வரத்தினம், மஜீத், ஆழியாள் என தெரிந்தும் தெரியாதவர்களுடையதுமான பல கவிதைகள் இருக்கின்றன. எனினும், எனக்கு பலது ஏமாற்றமாய்த் தான் இருந்தன. விளங்கிக் கொள்ள ஏன் வாசித்துக் கொள்ளவே கடினமாகவும் எழுத முடியுமென்று ஒரிருவர் எழுதியிருக்கிறார்கள்.

மஜீத் என்றவுடன் ஒன்று ஞாபகம் வருகிறது. நல்ல கவிஞன். கிழக்கிலங்கை முஸ்லிம் கவிஞர்களுள் ஒருவராக அவனைக் குறிப்பிடுவார்கள். நான் இங்கு வர முன்னர் அவன் கடும் நோய்வாய்ப்பட்டிருந்-தான். இதயத்தை நரம்புகள் பின்னியிருக்கிற மிக மிக அரிதான ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருந்தான். இலங்கையில் வைத்தியர்கள் எந்த உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை. அவனில் ஒரு பரீட்சார்த்த சத்திரசிகிச்சை செய்வதற்கு சிலர் முயன்றார்கள். பின்னர் தற்காலிக சிகிச்சையொன்றுக்காக இந்தியா செல்லதிட்டமிட்டு சென்றும் வந்தான். அதற்கான செலவுகளை சரிநிகர் சார்ந்த இலக்கிய நண்பர்களிமிருந்து மட்டுமே எதிர்பார்த்தான். சரிநிகரிலும் கூட அதற்கான குறிப்பொன்று வந்தது. நான் அறிந்தவரை சரிநிகர் சார்ந்த ஒரு சில நண்பர்களைத் தவிர அவனுக்கு யாரிடமிருந்தும் எந்த உதவியும் கிடைக்கவில்லை. ஏன் என்னால் கூட எதுவுமே செய்ய முடியவில்லை. அவன் இப்போது எப்படி இருக்கிறான்? அவனின் "ஏறுவெயில்" கவிதைத் தொகுப்பு பார்த்தாய் தானே. அதில் கூட வாழ்வு பற்றிய அவநம்பிக்கைகளைத்தான் சொல்லியிருந்தான்.


கதைகளில் கமலாதாஸின் ஒட்டத்தைத் தான் முதலில் பார்த்தேன். காரணம் அவர் பற்றி அண்மையில் இங்கு வரும் பத்திரிகைகளில் அதிகமாக வாசிக்கக் கிடைத்தது. முன்பு இலக்கிய உலகில் அவரின் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், தமிழில் எதையும் வாசித்ததாக ஞாபகம் இல்லை. இநதக் கதை நல்லதொரு கதை. அருமையான மொழிபெயர்ப்பும் கூட. மொழிபெயர்ப்பதில் லல்வி நன்றாகவே உள்வாங்கிச் செய்திருக்கிறார். இங்கு மலையாளத் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் நல்ல ஆக்க இலக்கியங்களுடன் பரிச்சயப்பட்டிருக்கிறார்கள். இது சினிமாவிலும் தான் ஏனைய இலக்கிய வடிவங்களிலும் தான். தமிழில் இந்நிலை சிற்றிதழ் வட்டமென்றாகி விட்டது. அவரின் எழுத்தைப் பற்றி அவர்கள் சிலாகிக்கிறார்கள்.

ரவியின் கதைகளின் தலைப்புக்களிலேயே ஒரு கவிதைத் தனம் இருக்கும். இதிலும் தான். "குயிற்கூட்டின் மேலால் பறந்த ஒன்று" எனக்கு நன்றாய்ப் பிடித்திருந்தது. மொழி ரவியில் லாவகமாய் வந்து விழுந்தோடிக் கொண்டிருக்கிறது அது சரி கடைசியில் அவன், அவனென்றால் அந்த மாஸ்டர் நழுவுகிறானா? ரவி ஏன் இன்னும் தொகுப்புப் போடாமல் இருக்கிறானோ தெரியாது!

ஓட்டமாவடி அறபாத் முஸ்லிம்களின் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணக் கிராமங்களின் இருப்பை கதைகளாக்கி வருபவன். இதுவும் அது மாதிரித் தான். எனினும் இது அவசரப்பட்ட செய்கைபோல் இருக்கிறது. இதுவும் சரிநிகரில் வந்த மூன்றாவது இனம் கதையும் கரு அளவிலும், நிகழ்விடம் என்ற அளவிலும் ஒரே சாயலைக் கொண்டிருக்கிறது.

ரவிவர்மன் கதையில் வித்தியாசம் காட்டியிருக்கிறான். ஆனால் தலைப்பில் மாறுதல் இல்லை. ஒரே பாணியிலான ஒரே சந்தங்கொண்ட தலைப்பு, போராட்டத்தில் பங்கேற்ற தற்போது மறக்கடிக்கப்பட்ட "எங்கட ஆக்களை" அவன் கரிசனைக்கு எடுத்துக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. தோப்பில் மீரானின் ஏணி கதை படிக்கக் கூடியவட்டாரக் கதை, கடலோரக் கிராமம் பெற்றுத்தந்த பெயரை தக்கவைப்பது மாதிரியான கதைகளைத் தான் அவர் தொடர்ந்தும் படைத்து வருகிறாரா? தளவாய் சுந்தரத்தின் கதை நகர்வு வித்தியாசமாயிருக்கிறது. துரை சித்தப்பாவும் மாலதியும் கதையும் வாசிக்கத்தக்க கதை தான். சித்தார்த்த சேகுவேராவின் கதை - நான் அதை கதை என்ற வட்டத்துள் தான் படித்தேன் - வலிந்து கொண்டு வித்தியாசம் காட்ட முனைவது போல் தெரிகிறது.

இம்முறை பல பெண்கள் எழுதியிருக்கிறார்கள். (சந்திரா இரவீந்திரன், சந்திரவதனா செல்வகுமாரன், மலரன்னை, ருக்ஸ்மிலா புஷ்பம்) எனக்கு எல்லாரும் புதியவர்கள். இருட்டு, கேள்விக்-குறி, முறியாத பனை என்பன குறிப்பிட்டுச் சொல்லும்படியான கதைகள். எல்லோருமே போர்க்கால வாழ்வின் அவலங்களை அனுபவித்தவர்களாய் அதிசிரத்தையுடன் எழுதியிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் தொடர்ந்தும் எழுதுகிறார்களா? அல்லது எழுதுவார்களா? உறுதி எனும் கதை மிகச் சாதாரண திருப்பங்களுடன் செயற்கைத் தனமாய் எழுதப்பட்டிருக்கிறது. இருந்தும் சில தமிழ்ப்படங்களின் சென்டிமென்ட் காட்சிகளைப் பார்க்கிற போது கண்கலங்குவது போன்று எனக்கும் கலங்கின. ந.கண்ணனின் கதை ஓர் ஆழ்ந்த பார்வை, தேடலின் வெளிப்பாடாய் பிரதிபலிக்கிறது. அ.முத்தலிங்கம் சிலரது புலம்பெயர் இருப்பையும், எடுப்பையும் சிரிப்பூட்டக்கூடிய வகையில் சொல்லியிருக்கிறார்.



கட்டுரைகளைப் பொறுத்தவரை யமுனாவின் பிரைட்டா கார்லோ பற்றிய கட்டுரை குறிப்பிடத்தக்கது. எந்த விடயத்தையும் மிகுந்த தேடலின் மத்தியில் தமிழ் வாசகர்களுக்கு முன் வைப்பதில் அவரைக் குறைத்து மதிப்பிடமுடியாது. சிலர் அவரின் அடிக்குறிப்புகளுடனான எழுத்துக்களை அதிகம் கிண்டல் பண்ணினாலும், அவர்களும் கூட வாசிப்பதில் ஆர்வம் காட்டுவது அவரது எழுத்தைத் தான். ஏனென்றால் மற்றவர்கள் பெரும்பா்லும் அரைத்த மாவையே ஒவ்வொரு விதமாக அரைத்துக்-கொண்டிருப்பார்கள். ஆனால், இவர் எங்கெங்கெல்லாமிருந்தோ நிறைய விடயங்களைக் கொண்டு வந்து தமிழிலக்கிய உலகுக்கு விருந்து படைத்து விடுவார். நாம் எதையும் உருப்படியாய் உள்வாங்குவதற்கு முதல் நாம் இருந்து கொண்டிருக்கும் வட்டங்களை விட்டு வெளியே வரவேண்டும். எல்லோரையும் ஒரே வட்டத்துள் போட்டு சக்கை பிழியும் போது கடைசியிலே யாருமே ஒன்றுமே இல்லாத நிலைக்குத் தான் வந்துவிட வேண்டி வ்ரும்.


நம்மொழியின் பெருமை பேசும் கட்டுரைக்ள் ஒன்றிரண்டு இருக்கின்றன. அவை எழுந்தமாறான நிறுவல்கள் போல் படுகிறது. ஆய்வு நூல்களுக்குரிய தலைப்புகளில் மிகச் சின்னதான கட்டுரைகள் மூலம் முடிபுகளை வைப்பது பயனற்றதாகவே போய்விடும். எனக்கென்னவோ ஆண்ட பரம்பரைக் கதைகள் சொல்லி மீசையில் மண்ணொட்டாத பசப்புக் காட்டும் கட்டுரைகள் யுகம் மாறுதற்கே இடையூறு போல் இருக்கிறது.

சத்தியமாய் நான் ஆங்கிலக் கட்டுரைகளை வாசிக்கவில்லை. தலைப்புகளைப் பார்க்கிறபோது நல்ல கட்டுரைகளாய் இருக்கும் போல் தான் தெரிகிறது. ஷியாம் செல்வதுரை என்ற தமிழர் ஆங்கிலத்தில் எழுத ஆங்கிலத்தில் வாசிக்கப்பட ஆங்கிலத்தில் விமர்சிக்கப்பட என்று ஆங்கில மட்டத்திலேயே சென்று கொண்டிருக்கிறார்.

ஒரு களஞ்சியமாய் வாசிக்க, சிந்திக்க, பார்க்க, படிக்க என்று நிறைய விடயங்கள் இருந்தாலும் நிறைய விடுபட்டுப் போனதான உணர்வும் வருவதைத் தவிர்க்க முடியாதிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்





ஏ.சிவானந்தனின்

# When Memory Dies

## நாவல் விமர்சனம்

-ஏ.ஜே. கனகரத்தினா

### இலங்கையின் மூன்று பரம்பரைகளின் கதை

**இந்நாவல்** ஆசிரியரின் பின்னணி பற்றி அறியாதவர்களை, இந்நாவலின் தலைப்பு, விற்பனையை நோக்காகக் கொண்ட, உள்முக ஆய்வும், தனிப்பட்ட சொந்த நினைவுகளை சுவைப்படுத்துவதில் மையங்கொண்டதுமான ஒரு நாவல் என ஏமாற்றலாம். ஆனால், இனமும்



வர்க்கமும் '(Race and Class) என்ற சஞ்சிகை-யின் ஆசிரியருக்கும், மக்கள் செயற்பாட்டாள-ருமான ஒருவருக்கும் பொருந்துவது போலவே சிவானந்தன் ஒரு நாவலை எழுதியுள்ளார். அதில் மையங்கொள்ளும் நினைவுகள் பொதுமக்கள் உலகோடு, விசேஷமாக அரசியல் உலகோடு தொடர்பு கொண்டதாய் நிற்கிறது.


இலட்சியத்தாகத்தோடு எழுதப்பட்ட இவ்-வரசியல் நாவல் சுயசரிதையாகவோ சுய ஒப்புக்கொள்ளல் நாவலாகவோ வாசிக்கப்-படுவதற்குப் பதிலாக தரவும் புனைவும் ஆகிய இருவகையும் கலந்த ஒரு புதுக்கலை 'மெய்த்-தரவாக' (Faction) வாசிக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்து மத்தியதரவர்க்கத் தமிழர்-கள் பெரும்பாலும் வலதுசாரி - பழமைபேண்-வாதிகள் என்று நினைக்கும் எங்களுக்கு நாவலின் முதலாவது பகுதி (Book oneforgotten Morning) ஒரு தரிசன வெளிக்காட்டலாகவே நிற்கிறது. யாழ்ப்பாணத்து தமிழ் அரசாங்க உத்தியோகத்தன் இடதுசாரியாக இருந்த காலத்தை சிவானந்தன் நினைவு கூருவதை நன்றாகவே செய்துள்ளார். இலங்கை சுதந்திரம் பெறும் தறுவாயில் (அதிகளவு யாழ்ப்பாணத்து தமிழரை உறுப்பினராகக் கொண்டிருந்த) G.L.S.K. வேலை நிறுத்தத்தை மேற்கொண்டபோது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு கந்தசாமி என்பவர் பலியானார். எவ்வாறாயினும், இந்நிகழ்ச்சியானது போகிற-போக்கில் கூறப்படுகிறதே ஒழிய நாவலில் பெரிதாகப் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்த ராஜன் என்பவர் தனக்கேற்படும் கணநேரத்துயரத்தை உணர்வு மேலிட மீட்டுப்பார்ப்பதோடு நாவல் தொடங்குகிறது.

"என்னுடைய நினைவு எப்போதும் போல், மழையோடுதான் ஆரம்பிக்கும். ஒரு காலத்தில் அஞ்சலகத்தை தன்னகத்தே கொண்டிருந்த பழைய காலனித்துவக் கட்டிடத்தின் பெருஞ்சுவருக்-கெதிராய் சிறுபையனாய் குறுகிக்கிடந்த காலம். பருவகால மழையின் கொட்டுதல் என்னைப் பயமுறுத்தியது. கூடவே துயருறவும் செய்தது. சிறுபராய தனத்துள்ளும் தனிமையுள்ளும் அது என்னை எடுத்து வீசியது. எனக்குள் வளர்ந்து-வரும் விஷயங்கள் பற்றி என்னால் பிறருக்கு சொல்லமுடியவில்லை. எனக்குள் எழுந்த முதலா-வது துயருணர்வு, சப்பாத்து இல்லை என்பதற்காக சஞ்ஜியை பாடசாலைக்குப்போக முடியாமல் செய்த ஓர் உலகுபற்றியது. நான் இடிமின்னலை, எந்தவித பயமுமில்லாமல் வரவேற்றேன். காரணம், அது என்னைத்தாக்கி சாகடித்தால் என்னுடைய சப்பாத்துக்களை சஞ்ஜி பெற்றுக்-கொள்ளுவாள். நானும் மேலும் துயருறாமல் இருப்பேன்.,.. நான் தெரியவந்த பிறபருவ காலங்கள், வசந்தம், இலையுதிர், மாரி, கூடவே சப்பாத்துக்கள் நிறையக் கிடைக்கும் மற்ற நாடுகள். அன்றைய மழை நாளின் போதும் அதன் பின்னர் வந்த பல மழைக்காலங்களின் போதும் எனக்குள் நிரம்பி வழிந்தது. என்வாழ்வின் பெரும் பகுதியை அந்நிய உலகில் வாழ்வோனாய் தனிமைப்-படுத்திய விஷயங்கள் யாவையும் என்னை என் நாட்டோடு தொடர்படுத்தி அதன் கதையை சொல்ல வைத்தன."

தன்மையில் பேசப்படும் நாவலாக அமைந்த இக்கதை, படிப்படியாக பாகம் ஒன்றின் பெரும்-பகுதி ராஜனின் அப்பா சகாதேவனின் பார்வை-யூடாக நகர்த்தப்படுவதால் படர்க்கையில் கதை சொல்லும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. தலைமை ஆசிரியரின் ஆலோசனைக்கிணங்க, சகாதேவ-னின் அப்பா பாண்டியன் (இக்கால நூற்றாண்டின் 'திருப்பத்தில் வாழும் அசல் யாழ்ப்பாணக் குடியானவனுக்கு ஒரு விதத்தில் பொருந்தாத பெயர்) தன்னுடைய மகன் சகாதேவனை கொழும்பிலுள்ள புனித பெனடிக் கல்லூரிக்கு படிக்க அனுப்புகிறார். சண்டிலிப்பாயில் உள்ள விளைச்சலைத்தராத நிலத்தோடு வெற்றியெதுவும் பெறாது போராடும் அசல் யாழ்ப்பாணத்து விவசாயியான பாண்டியன் முதலில் தன் மகன் தன்னோடு நிலத்தில் கைகொடுக்காது போவதை விரும்பாவிட்டாலும் இறுதியாக அதற்கு அனுமதியளிக்கிறார். அதனால் சகாதேவன் கொழும்புக்குச் சென்று புனித பெனடிக்ற் கல்லூரியில் சேர்கிறான், எஸ்.எஸ்.சி. சோதனையில் சித்தியடைந்த பின்னர் (பாடசாலை சமய, பொது அறிவு போட்டிகளில் பரிசு பெற்றும், படிப்பில் திறமையாக செய்தும்) அவனுக்கு பாடசாலையைவிட்டு விலக வேண்டி ஏற்படுகிறது. காரணம் அவனது மாம-னோ தகப்பனோ அவனுக்கு மேலும் உதவும் நிலையில் இல்லை. இரண்டு வருடங்களாக சகாதேவன், அப்பா செய்து வந்த தோட்டத்தை வருவாய்தரக் கூடிய்தாக ஓரளவு வெற்றிதரக்கூடிய விதத்தில் செய்துவந்தான். ஆனால், இரண்டாவது வருடமுடிவில் அவனது மைத்துனர்மார் தமது சகோதரிகளுக்கு கலியாணம் செய்து கொடுக்கவேண்டியிருந்ததால் தோட்டத்தை விற்க விரும்பினார்கள். சமூகம் மாறி விட்டது. இம்மாற்றம், நிலத்தைவிட பணத்தையே சீதனத்துக்குரிய கவர்ச்சிப் பொருளாக்கியிருந்தது. 19வயதில் சகாதேவன், கொழும்பில் தபால் சேவை, தந்தி திணைக்களத்தில் எழுதுவினைஞன் வேலையொன்றை பார்ப்பதற்காக கொழும்பு செல்கிறான். அசல் யாழ்ப்பாணத்து அரசாங்க உத்தியோகத்தன் மாதிரி கடுமையாக வேலைசெய்கிறான், அரசாங்க சோதனைகளில் சித்தியெய்துகிறான். இடைக்கிடை பியர் குடிப்பதில் ஈடுபட்டாலும் (பின்னர் சாராயம் குடிக்கிற அளவுக்கு முன்னேறுகிறான்) கடமை தவறாது வீட்டுக்கு காசு அனுப்பிவைக்கிறான். ஒரு சிங்கள நண்பன் மூலம் ஏ.ஈ.குணசிங்க தலைமை தாங்கிய தொழிலாளவர்க்க இயக்கத்தோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறான். நாவலின் முதலாவது பாகம். ட்றாம் பஸ் வேலை நிறுத்தம், தொழிலாளி ஒருவர் சுடப்பட்டு இறந்தகையோடு முடிவை எய்தியதாக குணசிங்க அறிவித்ததோடு முடிவுக்கு வருகிறது. இது குணசிங்க தீவிரவாதியாக இருந்து சமரசவாதியாக மாறியமையைச் சுட்டி நிற்கிறது.




இரண்டாவது பாகம் (Book Two - My Roots, No Rain) தன்மையில் ராஜனின் கதையைச் சொல்கிறது. இந்த வித விரிவான திருப்பம் அறிவார்ந்த விமர்சகரான றெஜி சிறிவர்தனாவை (Nethra vol. No.4 July - Sep. 1997) ஆரம்பத்தில் இக்கதையை இரண்டு பரம்பரைகளுக்குரிய-தாகவே எழுத ஆசிரியர் தீர்மானித்திருக்கலாம் என்றும், அப்படி எழுதுவது ஆசிரியரின் அனுப-வங்களுக்கு நெருக்கமுடையதாக இருந்திருக்-கலாம் என்றும் எண்ண வைத்ததுள்ளது. அவரு-டைய இந்த எண்ணம் உண்மைக்குரியதென்றே நான் எண்ணுகிறேன். மூன்றாவது பரம்பரைக்கு நாவலை விரிவுபடுத்தியது ஆசிரியர் சமகால நிகழ்வுகளை தொடர்புபடுத்தவேண்டும் என்ற ஆவலின் நிமித்தமாய் ஏற்பட்டு இருக்கலாம். இதுவே நாவலின் மிகப் பலவீனமான பகுதி-யென்பதை நாங்கள் பார்ப்போம்.

ராஜன் கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரி-யிலும், கொழும்பு ஜோசப் கல்லூரியிலும் தான் பெற்ற அனுபவங்களை விபரிக்கிறான். இவ்-விபரிப்பில் முன்னதின் கட்டுபெட்டிப் போக்கையும் பின்னதின் தாராளமான சூழலையும் வேறு-படுத்துகிறான். அவனுடைய தாய்வழி பேரனால் தாய்வழி வரும் சண்டைக்காரப் பேத்தி, தாய்-மாமன் குணம் ஆகியோர் பற்றிய சித்திரிப்புகள் நன்றாகவே நம்பக்கத்தன்மை வாய்ந்தவையாய் வந்துள்ளன. லோர்ன் முனசிங்காவுடன் அவருக்-கேற்பட்ட காதல் விவகாரம் முடிவில் மிகப் பாதிப்புக்குரியதாக இருந்தாலும் நன்றாகவே கையாளப்பட்டுள்ளது. அவன் இலங்கை பல்க-லைக்கழகத்திற்குள் நுழைகிறான். அப்பொழுதான் அது பல்கலைகழக கல்லூரி நிலையிலிருந்து இலங்கை பல்கலைக்கழகம் எனமாற்றம் பெற்றி-ருந்தது. பல்கலைக்கழகத்தில் லால் என்ப-வனைத்தவிர வேறு யாரோடும் (லால் ஒரு மருத்துவ மாணவன்) அவன் நீடித்த நட்பை வைத்திருக்கவில்லை. லாலின் உதவியோடு அவன் இடதுசாரி அரசியலுக்குள் இழுக்கப்படுகிறான். அத்தோடு இறுதியாக லாலின் சகோதரி லாலியை அவன் மணம் முடிப்பதில் இது முடிவடைகிறது. லாலும் அவனது சகோதரி ஆகிய இருவரும் சோஷலிஸ லட்சியங்களுக்கேற்ப வாழமுயல்-கின்றனர். அத்தோடு பாராளுமன்ற நடைமுறை-களை ஏற்றுக்கொண்ட இடதுசாரிகளின் நழுவல் தன்மையையும் பயத்தையுமிட்டு மிகக் கண்டிப்பு-டையவர்களாகவும் இருந்தனர். ராஜனும் லாலியும் அனுராதபுரத்தில் சென்று வாழ்கின்றனர். இக்-காலத்தில் நடைமுறைக்கு வந்த சிங்களம் மட்டும் சட்டத்தின் காரணமாக கொலையும், அழிவும் நாளாந்த நிகழ்வாக எங்கும் பரவுகிறது. இந்த நிலையில் சாதாரண காலங்களில் நாடகபாணி நிகழ்வுகள்போல் காட்சிதரும் சம்பவங்கள் மிக இயல்பாகவே இடம்பெறுகின்றன. சில குடிகார சிங்களத் தொழிலாளிகளால் லாலி வன்புணர்வுக்-குள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்படுகிறாள். ராஜனை அடித்து நினைவிழக்கச் செய்த கூட்டம் லாலியை தமிழ்ப்பெண்ணென நினைத்தனர். இந்தத்துன்ப நிகழ்வு ராஜனை லண்டனுக்கு குடிபெயரச் செய்கிறது.

மூன்றாவது பகுதி (Book Three - False Memories), லெனாமூலம் சாலிக்கு கிடைத்த மகனான விஜயின் கதையை மீண்டும் படர்கையில் விபரிக்கிறது. விஜயை ராஜன் தன்னுடைய மகனாகவே காண்கிறான். என்னைப் பொறுத்-தவரை இந்தப் பகுதிதான் நாவலின் மிகப் பலவீனமான பகுதியாகும். அதற்குக் காரணம் அவரது நாற்பது வருட கால புலம்பெயர் வாழ்க்கை, சமகால நிகழ்வுகள் பற்றி விபரிக்க முற்படுகையில் அவரை செவிவழிச் செய்தி-களிலேயே தங்கியிருக்கும் நிலைக்குத்தள்ளுகிறது. இதற்கு எதிர்மாறாக பகுதி ஒன்றினதும் இரண்டி-னதும், பலம் ஆசிரியரின் சொந்த அனுபவ உண்மைச் சூட்டின் அடியாய் வருவதாய் உள்ளது. மூன்றாவது பாகம் (Book Three) ஒழுங்கற்ற குழப்பப்பட்ட நிகழ்வுகளின் தொகுப்பாக இருப்-பதால் ஆசிரியர் போலி நினைவுகளைத் தந்த குற்றச்சாட்டுக்கு இலக்காகிறார். (விஜய் கெரில்லா

→19

தமிழர் பாரம்பரியத்தில்

# தமிழ் நாட்டுக் கலைக் கோயில்கள்

**தமிழகம்** தன்னுள் பல அரிய தொன்-மைகளை அடக்கிக் கொண்டு தமிழரின் பழம் பெருமைகளையும் வீரம் விளைவித்த நம் முன்னோர்களின் வாழ்வியலையும் பறைசாற்றிய வண்ணம் உள்ளது. ஆயினும் தமிழ்நாட்டு மாநில அரசாலும் அம்மக்களாலும் இம்மாதிரியான அரும்பெரும் பாரம்பாரிய தமிழ்ச்சொத்துக்கள்,



அலட்சியப் படுத்தப்பட்டு சிதைந்து கொண்டு வருவது வேதனையான விடயம்.

வேதனை கொள்வோருக்கு ஒத்தடமாகவும் மங்கி மறைந்து கொண்டிருக்கும் தமிழ்க்கருவூலங்-களின் பக்கம் உலகத்தமிழர்களினது கவனத்தை திருப்பு முகமாகவும், ஒரு அருமையான காரியம் நடைபெற்றுள்ளது. ஆம்! தேவமணி ரஃபேல் அவர்களால் தமிழ்நாட்டுக்கலைக்கோயில்கள்"

நூலின் பெயர்
**தமிழ் நாட்டுக் கலைக் கோயில்கள்**

நூலாசிரியர்:-
**தேவமணி ரஃபேல்**

பதிப்பாளர்:-
**ஃபாஸ்ட்கிராப்பிக்ஸ் ஓவர்சீஸ் பிரைவேட் லிமிட்டெட்**
**1 A, ஆர்டிமெல் மாவத்தை, கொழும்பு - 5**

நூல் கிடைக்குமிடம்:-
**விஜித யாப்பா புத்தகச்சாலை.**

என்ற மகுடத்தில் தமிழிலும், தமிழ் தெரியாதவர்-களுக்கு எம் தரம் பகரும் முகமாக "Temples of Tamilnadu - Works of Art" எனும் தலைப்பில், ஆங்கிலத்திலும் அருமையான இருகாவிய மணிகளை தந்திருகக்கிறார்.

வீரகேசரி வாரவெளியீட்டில் தொடர்ந்து வெளிவந்த அவரின் பலகட்டுரைகளில் இருபத்-தொரு கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, எழில் வண்ண நிழலுருக்களை கொண்டு வெளிவந்-திருக்கிறது இந்நூல். இந்நூலாசிரியர் எம் நாட்டு மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். எண்பத்து மூன்-றாம் ஆண்டின் இனவன்முறைகளினால், தீக்கு வீடு வாசல் எழுத்து பிரதிகளையும் தன் மின்சார-சபை உத்தியோகத்தையும் இழந்து தமிழகம் சென்ற இவருக்கு தமிழத்தில் தமிழ் மக்களால் தம் வரலாற்றுச் சுவடுகள் அலட்சியப்படுத்தப்பட்டு அழிவதை பொறுக்காது இந்நூலை படைத்து உலக கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். கண்டதையும் கேட்டதையும் எழுதப்புகாமல் பல ஆய்வுகளை மேற்கொண்டு வாய்வழி கதை கற்பனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து பதிவு செய்துள்ளமை, அவரின் நியாயத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

இது சைவசமய மாண்பை வெளிக்காட்டு-வதற்கப்பால் தமிழரின் வளமான வாழ்வியலின் மகிமையைத் தொட்டுக்காட்டுகிறது. நாகரீகமான மக்களின் மண்ணின் அவர் தம் வரலாற்று சுவடு-களை சுமந்து நிற்கிறது இந்நூல். "பகீரதனின் தலைவலி பெரிதா என் கை வலி பெரிதா? என இராஜேந்திரன் வடவரை வென்று கங்கைநீரை அவர் தம் தலையில் கொணர்ந்து கங்கை கொண்ட சோழப்புரத்தின் சிம்மக்கேணியில் ஊற்றுவித்தான் என்ற கல்வெட்டு சான்றுபகர்வதை கூறிச் செல்கிறது.

எனினும், காதல் சின்னமான தாஜ்மகாலை நாடிவரும் உலக மக்களுக்கு "இதோ தமிழகத்தில் ஓர் நினைவுச்சின்னம், அதுவும் தனது சிறிய தாயாருக்காக கட்டப்பட்ட பஞ்சவன் மாதேவி ஈச்சரம்" என இராஜேந்திரனால் கட்டப்பட்ட இத்தல மகிமை கூறும் கட்டுரையையும், பொலன-றுவை வானவன்' மாதேவி ஈச்சரத்தின் உண்மை விபரத்தையும் இந்நேரம் உலக கண்களுக்கு கொண்டு வருமுகமாக அவர் எழுதிய கட்டுரை-யும் இணைக்கப்படாது போனது மனக்குறை. எனி-னும், அடுத்த முயற்சியாக அவை தொகுக்கப்பட வேண்டும்.

எது எப்படியோ நூல் வெளியீட்டின் மைகல்லாக, ஒரு சாதனையாக தமிழ் கூறும் உலகுக்கு தன் அடையாளத்தின் ஒரு பக்கத்தை காட்டும் இந்நூலை தந்த ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியது அவசியம்.

சிறப்பு மிக்க அச்சமைப்பாக, வியக்க வைக்கும் அச்சேற்றமும் வடிவமைப்பும் மொத்-தத்தில் சிறப்பான வரவுதான்.

*கேகாலை மலர்*

# மக்கள் சேவையே மகேசன் சேவை!

"யாழ்ப்பாணத்தைப் புலிகள் கைப்பற்றினாலும் நாங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற மாட்டோம். யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்வதே எமது நோக்கம்."

யார் சொன்னது என்று கேட்கிறீர்களா எல்லாம் எமது தமிழ் மக்களுக்காகப் பாடுபடும் ஈ.பி.டி.பியும், புளொட்டும் தான். டக்ளசும், சித்தார்த்தரும் இவ்வாறு கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

உயிரைக் கொடுத்தாவது தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள். இதற்காகவே இவர்களுக்கு (இவர்களின் தியாக மனப்பான்மைக்காக) இன்ற கூலரும், மாதம் இருபத்தையாயிரம் ரூபாவும் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. தமது உயிரிலும் மேலான தமிழ் உடன் பிறப்புகளுக்குச் சேவை செய்வதற்காகாவே இவர்கள் அமைச்சர் பதவிக்கும் ஓடித் திரிந்தார்கள். எனினும், அது சாத்தியமாகவில்லை.

அராஜகப் புலிகளிடமிருந்து அப்பாவித் தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்காகவே இவர்கள் ஒவ்வொரு முறையும் பாராளுமன்றத்தில் கையை உயர்த்துகிறார்கள் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. ரெலோ இயக்கத்தினர் பயந்தாங்கொள்ளிகள், அவர்களுக்குச் சேவை மனப்பான்மை என்பது எள்ளளவும் கிடையாது. ஏனென்றால் அவர்கள், புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால், நாம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவது தவிர்க்க முடியாதது என்று சொல்லி விட்டார்கள்.

இனி, இவர்களின் சேவைகளைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். வன்னியிலிருந்து, புலிகளின் கொடுங்கோலாட்சியிலிருந்து தப்பி வரும் மக்களுக்காக வவுனியாவில் பல உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. சனச விடுதி (கோழிக் கூடு), பூந்தோட்டம் விடுதி, வேப்பங்குளம் விடுதி என்பன இவர்களின் பகீரத முயற்சியால் அமைக்கப்பட்ட விடுதிகள். ஏனைய உல்லாச விடுதிகளில் உள்ளது போல் குளிரூட்டி, வெய்யில் குளியல் வசதிகள் செயற்கையாக இங்கு அமைக்கப்படவில்லை. எல்லாம் இயற்கையாகவே அமைக்கப்பட்டுள்ளன. வெய்யில், மழை, பனி என்பன இந்த விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் இங்கு இலவசமாகவே, தாராளமாகக் கிடைக்கும். அத்துடன் தமிழ் மக்களுக்கு நோய், பிணி என்பன ஏற்படக் கூடாது என்பதிலும், தமிழ்த் தலைவர்கள் மிகுந்த அக்கறையாக உள்ளார்கள். இங்கு தங்க வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் ஒரே விதமான உணவே வழங்கப்படுகிறது. அத்துடன், இவர்களை வெளியே செல்லவும் வாயிற் காவலர்கள் அனுமதிப்பதில்லை. வெளியே சென்ற இடத்தில் விருந்தாளிகளுக்கு ஏதாவது நடந்தால் யார் பதில் சொல்வது. இவர்களுடன் திருகோணமலையில் தற்போது நாலாயிரத்திற்கும் மேற்பட்ட யாழ்ப்பாண விருந்தாளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள், இப்போது யாழ்ப்பாணம் அனுப்பப்பட மாட்டார்கள். சிலவேளை, யாழ்ப்பாணத்தைப் புலிகள் கைப்பற்றினால், இவர்கள் மீண்டும் இரண்டு பவுண், பத்தாயிரம் என்பன செலுத்த வேண்டி ஏற்படலாம். இதற்காகவே, இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படாமல், திருமலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடலுடன் சூழ்ந்த கோணமாமலையின் அழகைக் கொஞ்ச நாளைக்காவது யாழ். மக்கள் பார்த்து ரசிக்க வேண்டாமா?

திருகோணமலையிலுள்ள யாழ். பயணிகள் இப்போது பயணி என்ற நிலையிலிருந்து அகதி என்ற நிலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். ரொறன்ரோவிலும், பாரிசிலும் எம்மவர்கள் அகதியாக இருக்கும்போது தமிழீழத்தின் தலை நகரில் அகதியாக இருந்தாலென்ன? எனினும், இந்த யாழ். அகதிகளில் சிலர் தமது கணவன், மனைவி, பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில், கடந்த ஏப்ரல் 16ம் திகதி முதல் தமிழ் மக்கள் துயர் துடைக்கும் அமைப்புக்கு (ஈ.பி.டி.பி. செயலகம்)ச் சென்று தமக்குப் போக்குவரத்து ஒழுங்கு செய்து தருமாறு தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

டக்ளஸ் பாவம், அவருக்கும் இவர்களை அனுப்பி வைக்க விருப்பம் தான். என்ன செய்வது இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் மனோநிலையில் படையினர் இல்லையாம். பாதுகாப்பில்லாமல் தமிழ் மக்களை அனுப்பினால் புலிகள் அவர்களைக் கடத்திக் கொண்டு போய்க் கொலை செய்து விட்டால் என்ன செய்வது. எனவே, அன்பார்ந்த தமிழ்ப் பேசும் மக்களே! வரப்போகும் பொதுத் தேர்தலிலும் உங்கள் பொன்னான வாக்குகளை டக்ளசுக்கும், சித்தார்த்தருக்குமே அளித்துத் தமிழரைத் தலைநிமிர்ந்து வாழ வழி வகுங்கள்.

எழுவான்

### காரணம் யாதோ?

கண்டி மாவட்டத்திலுள்ள கலஹா தமிழ் வித்தியாலயத்தின் அருகாமையில் மாடு வெட்டும் இடமொன்று நடாத்தப்படுகின்றது. இதனால், பிரதேசச் சுற்றாடல் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் பாடசாலையில் வகுப்புகள் கூட நடாத்த முடியாத நிலை. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அறிவிக்கப்பட்டாலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.காரணம் யாதோ?

செ.சி, கண்டி

### ஏ. சிவானந்தனின் ....

தலைவர். ரவியால் சுடப்படுகிறார்) இதனால் முடிவு வலிந்துகட்டப்பட்ட நாடகபாணித்தன்மையை எய்துகிறது.

1956க்குப் பின்னர் வந்த இரண்டு இனத்துக்குமுரிய பரம்பரைகள் இன்று காணப்படும் நீண்டகொலைகாரப் பூசல் இல்லாது அன்போடும் தோழமையோடும் ஒரு காலத்தில் இவ்விரண்டு இனமும் வாழ்ந்தன என்பதை நம்பப்போவதில்லை. மூன்றாவது பாகத்தில் காணப்படும் குறைபாடுகளை விட்டுப்பார்த்தால் ஆசிரியரின் திறமை மகிழ்ச்சிகரமான காலத்து நினைவுகளின் அழகு, 'விவரணை மீட்ட'லிலேயே காணப்படுகிறது. எங்களிடமிருந்து என்றைக்குமே திரும்பிவராது சென்றுவிட்டதாய் தெரியும் அந்நினைவுகளை ஆசிரியர் பேணிவந்தமைக்கு பாராட்டப்படுவதற்குத் தகுதியானவரே.

தமிழில்:- மு.பொன்னம்பலம்

### 'ஒரு தூரதிருஷ்டி....

விடமோ, ரணில் விக்கிரமசிங்கவிடமோ முஸ்லிம்களைப் பாதுகாருங்கள் என்பது எவ்வளவு முட்டாள்தனம். நான் எங்கிருந்தாலும் விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம்கள் பேசுவதன் ஊடாகவும், தமிழர்களுடைய நியாயமான அரசியல் போராட்டத்தை ஆதரிப்பதன் ஊடாகவுமே வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு நல்வாழ்வும் - தமிழர்களின் சமாதான வாழ்வுக்கு நிரந்தர உறுதியையும் வழங்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்தியே வருகிறேன்.

**இன்று என்ன செய்யலாம் எனக் கருதுகிறீர்கள்?**

இன்று மட்டுமல்ல, எப்போதும் நான் ஒன்றையே வலியுறுத்தி வருகிறேன். இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை என்பது நியாயமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். தமிழர்கள் என்னென்ன காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்களோ அக்காரணங்கள் முஸ்லிம்களுக்கும் பொதுவானதே!

அடிப்படையில் சிங்கள மத்திய அரசு முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிரித்தாள்வதில் கடந்த காலங்களில் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளது. இன்னும் அப்படியான ஒரு சூழலுக்காக தருணம் பார்த்தே காத்திருக்கிறது. இதற்கு தமிழ்த் தலைமைகளும் முஸ்லிம் தலைமைகளும் ஒரு போதும் வழியமைத்து விடக்கூடாது.

இதனை முறியடிப்பதற்கான ஒரே வழி விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுடன் பேச வேண்டும். முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும். முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளையும், உணர்வுகளையும், அவர்களின் மன அச்சங்களையும் - சந்தேகங்களையும் புரிந்து கொண்டு சமூகச் சூழலை ஏற்படுத்த வேண்டிய பணியை முதலில் தொடங்க வேண்டும். யார் தவறு இழைத்தார்கள், எப்படி இதெல்லாம் நடந்தது என்ற வரலாற்று பிரேத பரிசோதனையில் நாம் காலத்தை வீணடிக்கத் தேவையில்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அடிப்படை நேர்மை மட்டும் போதும் விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம் மக்களின் மன உணர்வை வெளிச்சம் போட்டுக் காட்ட. இதுவொரு சரியான சந்தர்ப்பமாகவே நான் கருதுகிறேன். இன்றைய காலத்தையும் தமிழர் தரப்பும் முஸ்லிம் தரப்பும் கைகழுவி விடுமானால் நிலைமை இன்னும் மோசமாகவே போய்விடும்.

### பேராசிரியர் ...

இதனால் அவை காலத்திற்கு காலமும் இடத்திற்கிடமும் வேறுபட்டுக் காணப்படும். அவற்றை ஆராய்ந்து பதிப்பவர்கள் மக்களின் உச்சரிப்பு, சொல், சொற்றொடர், இலக்கணக் கூறு, பாடற்பொருள் ஆகியவற்றில் காணப்படும் பாடவேறுபாடுகளை கருத்தில் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் எழுந்தமானமாக பேச்சுமொழி சொற்களை இலக்கிய மொழிக்கு மாற்றிப் பதிப்பது நாட்டார் பாடல்களின் ஆன்மாவையே இல்லாதொழிப்பதற்கு சமனாகும். இதனை உதாரண பாடல்கள் மூலம் கட்டுரையில் விளக்கிச் சொல்கின்றார். உதாரணமாக 'அம்மியடியில் குமியடித்தேன். சும்மாவா இருந்தன்' என்ற பாடல் வரியில் 'கும்மியடித்தேன்', 'இருந்தன்' என இரு வேறுபட்ட பாவனைகளை பதிப்பாசிரியர்கள் மனம் போன போக்கில் பயன்படுத்துவதை சுட்டிக்காட்டுகின்றார் ஆசிரியர்.

இவ்வாறாக தமிழ் மொழியின் இயல்புகளையும் சிறப்புகளையும் மற்றும் இலக்கிய நடைகளையும் மொழியியல் சிந்தனையின் துணைகொண்டு ஆராயும் பேராசிரியர் சுசீந்திரராஜாவின் ஆய்வுக்கட்டுரைகளை நூல்வடிவில் தொகுத்து வெளியிட்ட தொகுப்பாசிரியர்களின் சேவை 'காலத்திலும் மாளப் பெரிது', பேராசிரியரின் புலமைச் சிறப்பினைக் கருத்தில் கொண்டு ஏற்கெனவே "உலகத்தில் யார் யார்" என்கின்ற அமெரிக்க நூலும் "கேம்பிரிச் சர்வதேச சுயசரிதை" என்கிற இங்கிலாந்து நூலும் அவரது பெயரை இணைத்துக் கொண்டுள்ளன. தற்போது இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜில் உள்ள அகில உலக அறிஞர் வாழ்க்கை வரலாற்று நடுமையம் இந்த ஆண்டு இறுதியில் வெளியிட உள்ள "இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்ற 2000 அறிஞர்கள்" எனும் நூலில் பேராசிரியர் சுசீந்திரராஜாவின் பெயரையும் இணைத்துள்ளமை ஈழத்து தமிழர் அனைவரும் பெருமை கொள்ளக் கூடிய செய்தியாகும்.

# தாய்நாடு புலிகளிடம்! சிங்களவர்களே விழித்தெழுங்கள்!

கௌரவ அன்புடைய தேசாபிமானிகளே,

பல தசாப்தங்களாக மேற்கொண்டு வந்த தமிழ் தேசியவாத பயங்கரவாதம் அதன் உச்சயுத்த வெற்றியை பெற்றுள்ளது. படையினரின் 12 ஆயிரம் உயிர்களை தியாகம் செய்து ரிவிரெச, எடிபல, மற்றும் ஜயசிக்குறு நடவடிக்கைகளினால் கைப்பற்றிய வன்னி மற்றும் [redacted] ஆனையிறவு முகாம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அடுத்ததாக யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைய இடமுள்ளது. யாழை யுத்தத்தினால் பேச்சுவார்த்தையினால் வெற்றிகொண்ட பின்னர் [redacted] மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசத்திற்குள் நுழைந்து அங்கு வாழும் பாரம்பாரிய [redacted] விரட்டியடிப்பார்கள். இறுதியில் [redacted] இவ்வாறான பாரிய யுத்தத்திற்கு வழிசமைத்தது, தமிழ் இனவாதத்தை வளர்த்து அவர்களுக்கு மாவட்ட சபை (1981) மாகாண சபை (1988) ஆகிய பரிசில்களை வழங்கி பலவேறு சந்தர்ப்பங்களின் கீழ்த்தரமான சமாதான பேச்சுவார்த்தைகளினால் (1985- திம்பு, 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம், 1989 பிரேமதாசா, 1994 சந்திரிகா) புலிகளின் யுத்த பலத்தை உறுதிப்படுத்தி செயற்பட்ட ஐ.தே.க. ஸ்ரீ.ல.சு.க தலைமைத்துவமும் துரோகம் இழைத்த தலைமைத்துவமாகும்.

இவ்வாறான அழிவு சிங்கள புத்தாண்டு அன்று ஆனையிறவில் இடம் பெறும் போது, எமது பிள்ளைகள் ஒரு சொட்டு தண்ணீர் இன்றி, மரங்களில் இலைகளை,- கிளைகளை சாப்பிட்டு போரிடும் வேளை, [redacted] எதிர்க்கட்சி தலைவர் எகிப்தில் நைல் நதிக்கரையில் சந்தோஷம் கொண்டாடினார். பிரதி பாதுகாப்பமைச்சர் நுவரெலியாவில் களியாட்ட விழா நடத்தினார். வரலாறு முழுவதும் இனத்துக்கு துரோகமிழைக்கும் நடைமுறையை கையாண்ட துரோகி அரசியல் தலைமைத்துவம் படையினரையும், இனத்தையும் தாரை வார்த்தமைக்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை. யுத்தம் செய்யக்கூடிய யுத்தத்திற்கு உண்மையான தலைமைத்துவம் வழங்கக் கூடிய யுத்த தலைவர்களது கைகளை கட்டிவிட்டு, தொலைக்காட்சி பெட்டியின் முன் யுத்த நாடகம் ஆடிக்கொண்டு கோடிக்கணக்கான தேசிய வளத்தை அழித்த துரோகிகளுக்கு வழங்க முடியாதென்பது தெளிவாகும். நோர்வே போன்ற புலி ஆதரவு வெளிநாடுகளின் விருப்பத்திற்கு ஏற்ப படையினரின் இனத்தின் உளவியல் பலத்தை பலவீனமாக்கிய ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க இடதுசாரி துரோக தலைமைத்துவங்களை உடனடியாக நீக்க வேண்டும். யுத்தம் செய்யக்கூடிய இனபக்தி கொண்ட யுத்த அரசியல் தலைமைத்துவத்தை உடனடியாக நியமித்து நாட்டை காப்பாற்ற முன்னோக்கி பயணிக்க வேண்டும்.

சிஹல உறுமய இதற்காக செயற்படும் நீங்களும் சிங்கபாகு பரம்பரையின் துணிவுமிக்க சிங்களவர்களாயின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

படையினரை உற்சாகப்படுத்துவோம்!

எமது தாய் நாட்டை தமிழ்ப் புலி ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து காப்போம்!!

**தணிக்கை**

சிங்கள வீரவிதான வெளியிட்ட பிரசுரம் இது

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## வாழ்க நம் ஜனாதிபதி நாமம் !

யாழ்ப்பாணக் குடாநாட்டில் [redacted] தாம் ஒரு யுத்தமற்ற சூழலை அறிவிக்க முடியும் என்று புலிகள் கருத்து வெளியிட்டனர்.

இந்தியாவிடமும், இஸ்ரேலிடமும் படையினரைப் பாதுகாக்க உதவி கேட்ட இலங்கை அரச தரப்பு புலிகளின் யுத்த நிறுத்தத்தினை முழுமையாக மறுத்தது.

யாழ். குடா நாட்டில் இறுதி இராணுவத்தான் நிலை கொண்டிருக்கும் வரை அதை விட்டு நீங்க மாட்டோம் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கின்றார்.

புலிகளின் இந்தக் கோரிக்கை உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் தெரிவிக்கப்பட்ட ஒன்று என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். குடா நாட்டைப் பாதுகாப்பதுடன், இழந்த ஆனையிறவைத் திரும்பவும் மீட்டு எடுப்போம் என்று சூளுரைத்து இருக்கின்றார், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த.

ஜனாதிபதி, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இந்த யுத்தத்தை நாம் விரைவில் வெற்றி கொள்வோம் என்று அறிவித்து இருக்கின்றார்.

உலகம் பூராவும் உள்ள அனைத்து நாடுகளும் தமக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதால், தாம் புலிகளைத் தொடர்ந்து எதிர்க்கப் போவதாகக் களத்தில் இருந்த இராணுவ அதிகாரி ஒருவர் அறிவித்து உள்ளார்.

ஆக, இலங்கை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும், அதிகாரிகளும் இந்த நிலையிலும் யுத்தத்தைத் தொடர்வது பற்றியே பேசுகின்றன.

[redacted] யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதில் இருந்து நாம் பின் வாங்க மாட்டோம் என்று திரும்பவும் அரசாங்கம் சூளுரைத்திருப்பது தான்.

ஏதோ,

யாழ். மக்கள் தம்மை இரட்சிக்குமாறு இவர்களிடம் மன்றாடியது போல வந்திருக்கின்றது இந்த அறிவிப்பு.

எப்படியோ, ஒன்று மட்டும் தெரிகின்றது.

யுத்தம், யுத்தம் மட்டுமே, இன்றைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான [redacted] மந்திர சக்தி என்பதுதான் அரச தரப்பின் அசைக்க முடியாத முடிவாக உள்ளது.

புலிகளுடன் நான்கு ஆண்டுகட்கு மேலாகப் போரிட்ட இந்திய " அமைதி காக்கும் "படையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடாத்திய ஜெனரல் கல்கட் அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து நினைவுக்கு வருகின்றது. அவர் சொன்னார் : " உங்களால் ஒரு குழுவை நிராயுத பாணியாக்க முடியும். அவர்களிடம் இப்போது எந்த ஆயுதமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் அவற்றைப் பிறகு பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்கு உங்களால் எந்த உத்தரவாதத்தையும் தர முடியாது. ஆகவே, அது என்றென்றைக்கும் நிலையான ஒரு நடவடிக்கை அல்ல. ..... நான் சொல்கின்றேன். உலகின் எந்த மூலையிலும் இராணுவ நடவடிக்கை மூலம் சமாதானத்தைக் கொண்டு வந்து விட முடியாது. இதை நான் திட்ட வட்டமாகத் தெரிவிக்கின்றேன். சிவில் சமூகத்தின் மனதில் உள்ள சமாதானம் என்பது தான் வாழும் சூழல் பற்றிய, அங்கு நிலவும் ஆட்சி பற்றிய தனது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது பற்றிய தனது உரிமைகள் பாதுகாக்கப்படுவது பற்றிய ஒரு சராசரி மனிதப் பிறவியின் மனதின் அனுபவ உள்வாங்கல் ஆகும். இவை எல்லாம் அரசியல் விடயங்கள். இவற்றில் எதுவும் இராணுவ விடயங்கள் அல்ல. ஆகவே யாராவது, எங்காவது இராணுவத்தை அனுப்பிச் சமாதானத்தைப் பெறலாம் என்று கூறுவார்கள் என்றால் அது வெறும் கற்பனைக் கதை மட்டுமே. "

இது இராணுவத் தளபதி ஒருவரது அபிப்பிராயம்.

[redacted]

ஆக, இந்த நாட்டில் சமாதானம் பிறப்பதற்குக் கிடைத்த இன்னொரு அரிய வாய்ப்பும் புறக்கணிக்கப்பட்டு விட்டது.

இல்லை ! சமாதான யுத்தம் சமாதானத்திற்காகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அது தொடரட்டும்.

சமாதானம் தேவைப்படுபவர்கள் சாவைத் தழுவிக் கொண்டிருக்கின்றார்கள். மரணம் அவர்களைச் சமாதானத்துடன் சங்கமிக்க வைக்கின்றது.

சமாதான யுத்தம், இருப்பவர்கள் மத்தியில் சமாதானத்தை நிச்சயம் நிலை நாட்டித் தான் வருகின்றது.

இறந்தவர்களின் சமாதானத்திற்காக நாம் என்றென்றைக்கும் போரிடுவோம்.

வாழ்க சமாதானம்.
வாழ்க சமாதான யுத்தம் !
வாழ்க நம் ஜனாதிபதி நாமம் !

## குடாநாட்டுப் படையினரைக் காப்பாற்ற இராணுவ உதவி பெறுக!

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரையும் பொலிஸாரையும் பாதுகாக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நட்பு நாடுகளிடமிருந்து நிபந்தனையற்ற இராணுவ உதவியை கோர வேண்டும்.

அண்மையில் உருவாக்கப்பட்ட பேரினவாதக் கட்சியான சிங்கள உறுமய கட்சி மேற்கண்ட அவசர கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பிரதான செயலாளர் திலக் கருணாரத்தின வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1971ல் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையை சமாளிக்க வெளிநாடுகளிடம் இராணுவ உதவி பெற்றுக் கொண்டது போன்று தற்போதைய நிலையைச் சுமூக நிலைக்குக் கொண்டுவர இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நட்பு நாடுகளிடமிருந்து நிபந்தனையற்ற இராணுவ உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு செயற்பட முடியாவிட்டால் அல்லது செயற்படத் தாமதித்தால் அரசாங்கத்துக்கு ஆட்சி செய்வதற்கென்று நாடு [illegible] இல்லாமலே போகும் என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## யுத்தத்தை நிறுத்த கிளர்ந்தெழுக! படையினரை திருப்பி அழைக்குக!!

தணிக்கை

வீணான உயிரிழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என காணாமற் போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் ஜே.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதனால்

தணிக்கை

எனவே அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் [redacted] விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும்.

பலாலியைக் கைப்பற்ற புலிகள் பெரும் தாக்குதல் நடத்துவார்களானால்

தணிக்கை

எனவும் நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை, ஊனமடைந்த படையினரின் அமைப்பு, யுத்தம் தொடர்ந்தால் [redacted]

தணிக்கை

தணிக்கை

## யாழ்ப்பாணப் பாதை திறப்பு
### ஆனையிறவு ஊடாக ஓமந்தைக்கு பஸ்சேவை

[redacted]

ஆனையிறவுப் பகுதியிலுள்ள ஆனையிறவுப் பாலம் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதை அடுத்து பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் புதுக் குடியிருப்புக்குச் சென்று தங்கியுள்ளனர் என வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள பொதுஅமைப்புக்கள் இந்த மக்களை தற்காலிகமாகத் தங்க வைப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை விடுதலைப்புலிகள் வசமான ஆனையிறவுப் படை முகாமை வன்னிப் பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவிலிருந்து வன்னிப் பெரு நிலப்பரப்பின் ஊடாக ஓமந்தைக்கு பயணிகள் பஸ் சேவை ஒன்றை நடத்த [redacted] ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் இந்தப் பிரதேசத்தில் உள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் விரைவில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் ஆரம்பித்த ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போது ஓமந்தை முதல் ஆனையிறவு வரையான பாதையை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆனையிறவு மற்றும் இயக்கச்சிப் பகுதிகளில் இரண்டு பௌத்த விகாரைகளும் ஒரு முஸ்லிம் பள்ளிவாசலும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவுத் தளத்தின் மையப்பகுதியில் ஒரு பௌத்தவிகாரையும் முஸ்லிம் பள்ளிவாசலும் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் புளொட் உறுப்பினர் தப்பியோட்டம்!

யாழ் நகரில் புளொட் உறுப்பினர் ஒருவர் ஏப்.28ம' திகதி முதல் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவைச் சேர்ந்த அன்ரன் முத்துக்குமாரு(20) என்பவரே காணாமல் போனவராவர்.

புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக்கூடும். அதனால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே இவர் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும் புலிகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்தால் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் செல்லத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட முடியாமையால் இவர் கட்சியிலிருந்து தப்பிச் சென்றிருக்கலாமென்று புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் அமைப்பின் அடையாள அட்டையுடன் இவர் தப்பிச் சென்றிருப்பதால் கட்சியின் பெயரைப் பாவித்து சில நடவடிக்கைகளில் இவர் ஈடுபடலாமென்பதால் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு மேற்படி கட்சியினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

### மீண்டும் மண்ணெண்ணெயில் ...

பெற்றோலுக்குத் தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டிருப்பதையடுத்து குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மீண்டும் மண்ணெண்ணெய் மூலம் இயக்கப்படுகின்றன. மோட்டார் சைக்கிள்களை பலரும் மண்ணெண்ணெய்க்கு மாற்றிப் பயன்படுத்தி வருவதைக் காண முடிவதாக யாழ். தகவல்கள் தெரிவிக்கின்றன. 90களின் நடுப்பகுதியில் குடாநாட்டில் வாகனங்களை இயக்குதற்கான பிரதான எரிபொருளாக மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/4, 1/1, நாவல ரோட், நுகேகொட. அச்சுப்பதிவு நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 09.05.2000